ஶிஷ்யர்களின் உத்பத்திகாலம் விசாரித்தால் அங்கங்கே ப்ராசீநாசார்யர்கள் வடவாசாரத்தை யநுஸரித்தவை நவீநகல்பிதம் ஶாஸ்த்ரமென்று ப்ரகாஶமாகுமிறே. கிஞ்ச ஸ்வகதேஶிகளின் பூர்வாசார்யர்களுக்கு பேதம் ஸ்பஷ்டமாகையால் ஸ்வகபோலகல்பிதமும் ஸித்தியாதிறே. இன்னமும் வாதத்தோடு கூடின ஶாஸ்த்ரமென்பதால் வாதத்துக்கு ஶாஸ்த்ரஸம்ப்ரஜ்ஞையில்லை. தத்காரத்துக்கே ஶாஸ்த்ரஸம்ப்ரஜ்ஞையென்பது ஸ்பஷ்டம். வாதத்துக்கு ராமாநுஜஸம்ப்ரஜ்ஞை செய்வதால் தத்ஸ்தாபகப்ரமாணமெங்குங் காணமையாலும் தத்ப்ரமாணம் கல்பிதமென்பது ஸ்பஷ்டமிறே. ஶாஸ்த்ரார்த்தத்தைக்கொண்டு நிரூபிக்கப்பார்க்கில் யாவதாச்சார்யப்ரவ்ருத்திசொல்ல ப்ரஸங்கிக்கும். அப்படியே காணகிலோம். ஹஸ்தகிரிதேசம் ராமாநுஜரீதி ஶாஸ்த்ரவ்யாபிக்கே தோள் தீண்டியிறே.

## நவப்ரஶ்நோத்தரவிஷயம்.

இங்ஙனே உத்தரவாதிஜயபட்டர் குமாரர் ஸுதர்ஶநபட்டர் நடாதூரம்மாள் ஸந்நிதியிலே ஸ்ரீபாஷ்யப்ரவசநம் பண்ணிக் காலக்ஷேபம் பட்டோலைகொண்டதை அம்மாளுகந்தருளி ஶ்ருதப்ரகாஶிகை யென்று திருநாமஞ்சாத்தினதாலும் அதைப் பெரியபெருமாள் திருவுள்ளம்பற்றினமையாலும் ஷட்ப்ரஶ்நோத்தரத்தில் சொன்னபடி வ்யாஸபாஷ்யம் பாஷ்யமென்று ஸூக்தியிலே ஶ்ருதப்ரகாஶிகாகாரலக்ஷணவிஶிஷ்டமாக ஸ்ரீபாஷ்யவ்யாக்யாநம் வேதாந்தாசார்யர் செய்தருளினரென்று இவருக்குப் பெரியபெருமாளும் பிராட்டியாரும் வேதாந்தாசார்யர் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் நாமங்களை ப்ரஸாதித்தருளினபடியாலும் கீழே இதைத் தவிர்ந்து ஆச்சான் ஆண்டான் முதலானோர் வம்ஶத்தில் ஸ்ரீபாஷ்ய ஶாஸ்த்ரப்ரவ ரையுண்டென்றது வ்யவஹாரராஶி க்ரஹணமுண்டெனில்

ஸ்ரீபாஷ்யக்காரர் ப்ரியஶிஷ்யரான நடாதூராழ்வான் திரு வம்ஶ்யராகிய அம்மாளுக்கு ஸ்ரீபாஷ்யாதிகாரத்தை ப்ரஸாதி த்தாரென்பதோடு விரோதிக்கும். கிஞ்ச இவ்வளவாக ஸர்வ ஜ்ஞரையும் ஸர்வாசார்யகடாக்ஷமும் ப்ரதாநாசார்யராளானபெ ருமாள் பிராட்டியார் திருவுள்ளமுகப்பித்தலும் பெற்றுள்ள தே ஶிகநு நம்மாழ்வார் கருத்தையறியாதவர்போலவும் ஸ்ரீபாஷ்யக் காரர் திருவுள்ளத்துக்கு விருத்தமாக நடந்தாப்போலவும் அவரி வரை த்ரமஸப்ரசாரம் பண்ணினாரென்றும் பெரியவாச்சான் பிள்ளையிடத்தில் ஈடுபட்டதாகவும் அழகிய மணவாளப்பெருமாள் நயினார் ஆசார்யஹ்ருதயமறிந்து ஶ்ரமம்பண்ணினாரென்றும்அத னால் பெருமாள்மாலைகள் நழுவினதாகவும் உக்த்யாதிகள் சொல் லுகிற தூப்புல் பிள்ளையீடுபாடு முதலான வேதாந்தஸம்ஸ்க்ருத க்ரந்தங்கள் த்ரமஸப்ரசாரவிஜ்ரும்பித ப்ரலபநம் - உபயவேதா ந்தஸம்ப்ரதாயம் ஸ்ரீவேதாந்தாசார்யரைத் தவிர வேறில்லையெ ன்பது ஸர்வஸித்தம்॥

---

# ஶ்ரமவிஷயம்.

---

ஶ்ரமவிஷய ப்ரஶ்நப்ரத்யுத்தரப்ரஸ்தாவத்தாதி ஸ்ரீபா ஷ்யகாரர் திருவாய்மொழிக்குத்தாமே வ்யாக்யாநஞ்செய்தருளா மல் பிள்ளானுக்கு நியமித்ததனால் இன்னமிப்படியே அனேக வ்யாக்யாநங்களவதரிக்கவேண்டுமென்பதவருக்குத் திருவுள்ளமெ ன்று த்ரமஸப்ரஶ்நோத்தர வாதிசெய்த ஸாத்த்விகவர்ணநஸம் ப்ரதாயம் தெரியாமையாலேயிறே. எங்ஙனேயென்னில் எங்களா ழ்வான் ஶ்ரீபாஷ்யத்தில் ஸூத்ரார்த்தம் வ்யாக்யாநாவஸரத் தில் யாமுநமுநிவம்ஶஜந ஸம்ஸ்தாநஸூத்ரார்த்தாதி யெ ன்றருளிச்செய்கையாலே ஸ்ரீஆளவந்தார் ஶிஷ்யப்ரஶிஷ்யஸந்தாந மான ஸ்ரீபாஷ்யக்காரர் 'த்ரமஸபரிசோதயோபாநத்துஸ்ஸர்வ ஸாரவிஷ்ணு' என்று தம்மைக்கொண்டாடின கொண்டாட்ட மிருக்கச்செய்தே ஸ்ரீஆளவந்தார் ஸாக்ஷாத்ஸம்பந்தமான பிள்ளா

னைக்கொண்டாடக் குறையில்லையிறே. ஆகையால் அனேகர் தம் திருவடி ஸம்பந்திகளிருக்கவும் பாத்ரஸ்வதோ பாஷ்யக்ருதா என்னும்படிபிள்ளானை புத்ரத்வேந ஸ்வீகரித்துத்தாம்மாறனடிபணிந்துய்ந்தவராகியும்இவருக்கு ஆளவந்தார் திருவுள்ளக்குறை தீர ஆழ்வார் திருநாமமும் சாத்தி பூர்வஸ்த்வரூப ருஷிர் பராசரருக்கு ஸ்ரீவிஷ்ணுபுராணகர்த்ருத்வத்தையறுதியிட்டாப்போலே தமக்கொரு புத்ரரான இவருக்குத் திருவாய்மொழி வ்யாக்யாநம் நியமித்துஸ்ரீயாமுநார்ய பௌத்ர ஸந்தாநமான இவர் செய்த ஆறாயிரப்படியும் அவர்களின் தௌஹித்ர ஸந்தாநமான தாம் செய்தருளின ஒன்பது க்ரந்தங்கள் ஆக இந்த பத்து க்ரந்தங்களையும் ஆசார்யபரம்பராக்ரமமாக ஸேவிக்கும்படி நியமித்தருளினாரென்பது ப்ரஸித்தமிறே. ஆகையால் பின்புள்ள மற்றோர்கள் ஆறாயிரப்படியைத்தள்ளி திருவாய்மொழிவ்யாக்யாநம் ஸ்வதந்த்ரமாகச்செய்வது எம்பெருமானார் திருவுள்ளமென்பது எம்பெருமானார் திருவுள்ளம் வேறாகவும் பராசார்யரான பராங்குசரது திருவுள்ளம் வேறாகவும் சொல்வதுபோல உபஹாஸ்யமோக்யமாகும். இன்னமும் ஸமகாலத்தவர்க்காகிலும்பிற்காலத்தவர்க்காகிலும் திருவாய்மொழிவ்யாக்யாநகர்த்ருத்வாதிகாரமுள்ளதாகில் பெரியபட்டர் திருவாய்மொழிக்கு ஸபாதலக்ஷவ்யாக்யானமிட்டருளக்கேட்ட ஆண்டான் ஸ்ரீபாஷ்யக்கார நியமனத்துக்கு விரோதஞ்செய்வதோ நீர் என்றவளவில் அந்தகோசத்தைப்பெருங்காற்றிலே விட்டாரென்று க்ரந்தஸ்தமான ஐதிஹ்யந் தவிர ப்ரஸம்ஸிக்கும். ஆகையால் ஸ்ரீபாஷ்யக்காரநியமனப்படிக்கு ஸ்ரீபாஷ்யமும் ஆறாயிரப்படியும் அன்றுமுதல் இன்றளவாக ஸேவித்துவருகிற பூர்வாசார்யர்களின் ஸம்ப்ரதாயமே ந்யாயாநுக்ருஹீதமென்பது ஸுஸ்பஷ்டமிறே.

வ்யாக்யாந விஷயம்॥

—

ஈடு முதலான முப்பத்தாறுயிரப்படிக்கு ஸ்ரீபாஷ்யகாரர் நியமனமில்லையென்கிற தோஷம் ஸமகாலத்திலன்று. வ்யவஹிதகாலத்திலே அந்ததோஷம். எப்படியென்றால் ஸமகாலத்தில் தோஷம் ஒப்பினதனால் பிற் காலத்திலும் தோஷம் ஸுஷ்டமிறே. இல்லாவிடில் தூப்புல்பிள்ளைவிஷயத்தில் ஸ்ரீபாஷ்யக்காரர்முனிந்தானிருவாதி கதைகளெல்லாம் பொய்யென்று மற்றவர்களோடொக்க இவர்களும் ஒப்புக்கொள்ளவேண்டும். ஸ்ரீபாஷ்யக்காரர் பிள்ளானைக்கொண்டு ஆறுயிரப்படிசெய்வித்ததற்கு ஈதாத்பர்யம் வர்ணித்தது ஸுஜ்ஞாதமென்று முன்னமே சொன்னோம். இல்லாவிட்டால் இவர் சொல்லுகிற நாலு வியாக்கியானங்கள் மட்டில் நிற்காமல் ஸ்ரீபாஷ்யக்காரர் நியமநம் இனிமேலும் அனேக வியாக்கியானங்களை அபேக்ஷித்துக்கொண்டிருக்கிற தென்னத்தடையில்லை. இன்னமும் ஆறுயிரப்படிக்கான நியமனமே ஹவிஷ்யத்துக்களுக்குமென்றதனால் ஆறுயிரப்படிக்கு விரோதாபாஸங்களுள்ள இவர் சொல்லும் வியாக்கியானங்களில் தலைமையான முப்பத்தாராயிரப்படி ஹவிஷ்யத்ரூபமா ஸ்ரீபாஷ்யகார நிஷித்தமென்பது ஸ்பஷ்டம்.- ஆகையாலிவர் முப்பத்தாறுயிரப்படி ஸ்ரீபாஷ்யக்கார நியமநயோக்யதை யில்லையென்றதும் பாஷ்யகார நியமநமில்லையென்பதும் ஏகார்த்த யென்றது மொக்கும். ஏனென்றால்அதற்கு நியமநயோக்யதையில்லாமையாலும் நிஷேதயோக்யதையுள்ளமையாலும் முப்பத்தாறுயிரப்படி ஸ்ரீபாஷ்யகாரர்த்திவ்யஸூக்தி விருத்தமென்றே சொல்லத்தகும். இன்னமும் வரதர் நம்பிள்ளை தம் நியமனமில்லையென்று முப்பத்தாறுயிரத்தைப் பரிகரித்தது பெரியபெருமாள் நியமனத்துக்காகவென்று வர்ணித்தது ஜாட்யம்.- என்னெனில் இவர் சொன்னபடி பாஷ்யக்காரர் நியமனமுண்டெனில் பாஷ்யகார நியமநமுள்ளவதற்குப் பெரியபெருமாள் நியமனத்தை அபேக்ஷிக்க வேண்டாமையால் அதுக்காக நம்பிள்ளை வரிஹரிக்காதிருக்கத்தகாது. பா

ஷிக்காரர் நியமனமில்லையெனில் முன்னிவர்சொன்னது வ்யர்த்தம். இன்னமும் நம்பிள்ளை உபந்யாஸத்தைப் பட்டோலைகொண்டு முப்பத்தாறாயிரப்படி எழுதினாரென்பது அஸம்மதம். அப்படியாகில் நம்பிள்ளை தம்முபந்யாஸத்தை மறக்காமல் பட்டோலைகொண்ட முப்பத்தாறாயிரப்படிக்காரரிடத்தில் விசேஷப்ரதிபண்ணி அதை அங்கீகரியாமல் ப்ரத்யுத நியமனமில்லையென்று ஸாதிக்கத்தகுமோ. அப்படி ஸாதித்தல் தகுமென்றால் தாம் ஸாதித்தருளின அர்த்தங்கள் முழுதும் லோகத்தில் ப்ரசாரமாகக்கூடாதென்று திருவுள்ளமாகவேணுமிறே. அப்படிக்கிருந்தால் அதற்குப்பெரியபெருமாள் நியமனமாகுமென்று திருவுள்ளம்பற்றியிருக்கவொண்ணாது. நம்பிள்ளை திருவுள்ளத்துக்கு விரோதமாகப்பெரியபெருமாள் நியமித்ததாக முடிந்தாலும் நம்பிள்ளை நியமனமில்லையென்பதற்குப் பரிகாரஞ்சொன்னது வ்யர்த்தம். முப்பத்தாறாயிரப்படியில் பூர்வாசார்யர்களின் திருவுள்ளத்துக்குவிருத்தமான அர்த்தமில்லாதிருக்கில் நம்பிள்ளை பெரியபெருமாள் நியமனமானால் லோகத்துக்கு விஶ்வஸநீயமென்று வைத்திருக்கவேண்டாவிறே. வேண்டுமென்றால் தாமுகந்தருளினால் லோகவிருத்தமாகுமென்று திருவுள்ளம்பற்றித் தானிருக்கவேணும். அதனால் பெரியபெருமாளும் திருவுள்ளம்பற்றமாட்டாரென்றே நிஶ்சயித்திருக்கவேண்டுமிறே. இங்கே த்ரிம்ஶத்ப்ரஶ்நோத்தரவாதி நம்பிள்ளை தாத்பர்யத்தை வர்ணித்ததை ஸஹ்ருதயர்கள் விமர்சித்தால் முப்பத்தாறாயிரப்படி பூர்வாசார்யஸம்ப்ரதாயவிருத்தமென்றும் அதற்கிவர் தோஷபரிஹாரம் பண்ணினது நிஷ்ப்ரயோஜனமென்றும் ஸ்பஷ்டமாகும். இன்னமுமிதில் அஸங்கதங்களை விஸ்தரபயத்தால் சொல்லாதுவிட்டோம். பண்டிதர்களுக்கு ஜிஜ்ஞாஸாத்வத்தால் விஶதமாகும்.

---

ஆதேஶவிஷயம்.

---

ப்ரவணாதேர்ப்யேஷாம் நதிஶதி- என்கிறபடியே உபாயம் ப்ரபத்தியென்பதும் ப்ரஹ்வத்தியான ஸரஸ்வதி தங்களிஷ்ட

தேவதையான ஹயக்ரீவரை ஸ்ரீபாஷ்யகாரருக்கு எழுந்தருளப்பண்ணிக்கொடுத்தாளென்பதும் ஸரியே. இந்த ஹயக்ரீவரையும் ஸாரஸ்வதமான பேருளாளரையும் உபயவேதாந்ததேஶிகனுக்குத் திருவாராதனமாக ஸ்ரீபாஷ்யகாரர் அறுதியிட்டதாக நம்பாணனுரையில் சொல்கிறதிறே. இதனால் தூப்புல்பிள்ளை யீடுபாட்டில் ஸ்ரீஹயக்ரீவப்ரஸாதலப்தஜ்ஞாநத்தை தேஶிகனுக்கு தோஷமாக கல்பித்துச்சொல்வது ஸ்ரீஹயக்ரீவபாஷ்யக்காரர்களுக்கே தோஷஞ்சொல்லினதாமிறே. ஆகையால் தூப்புல்பிள்ளை யீடுபாடென்கிற க்ரந்தம் ஸாஹஸிகப்ராஜ்ஞப்ரகல்பிதமென்பது ஸ்பஷ்டம்.

---

## த்ரயோதஶவிஷயம்.

---

ஸ்ரீபாஷ்யகாரருக்கு முன் ஐதிஹ்யாதி ஸம்ப்ரதிபந்நமே. கிஞ்ச ஸிம்ஹாஸநாதிபதிகள் எழுபத்துமூவர் விஶிஷ்டாத்வைதபாஷ்யகர்த்தாக்கள் உண்டு. மூபத்துநாலாமவர் ஸ்ரீராமாநுஜாசார்யர் இந்த கார்யத்தைத்திருவுள்ளம்பற்றியிறே. எழுபத்துநாலுபேருக்கு ஆசார்யத்வாம்ஶம் ஸாதித்தருளினாரென்றுஞ்சொல்லுவார்கள்.

---

## சதுர்தஶவிஷயம்.

---

வடவாசார்யர்களின் திருவுள்ளப்படிக்கே.

---

## பஞ்சதஶவிஷயம்.

---

பாஷ்யகாரர் முதலித்யாதி எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யஞ்செய்தருளி நடாதூராழ்வானுக்கு ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸநாதிராஜ்யத்தை ஸாதித்தருளினார். அவர் முதல் ஒரு பரம்பரையுண்டு என்பதனால் மற்ற பாஷ்யவம்ஶவரையுண்டெனில் அது ஸ்ரீபாஷ்யகாரர் நியமித்ததன்றென ஸ்பஷ்டமிறே. இதனாலே சிலர் சொ

ல்லிவருகிற சராசரம்வரை மூன்றும் ஸ்ரீபாஷ்யகார ஸம்பந்தமற்றதென்பது ஸுஸ்பஷ்டமிறே. இன்னமும் ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளமும் பராங்குசன் திருவுள்ளமும் வெவ்வேறுபோலவும் பராங்குசன் திருவுள்ளத்தையனுஸரித்து அழகிய மணவாளப்பெருமாள் நைனார் ஆசார்யஹ்ருதயம் செய்தாப்போலவும் சொல்லுதலால் வடகலைதேசிகள் ஸாக்ஷாத் ஸ்ரீபாஷ்யகார ஸம்பந்தந் தவிர்ந்தவர்களென்பது ஸுஜ்ஞருக்கு விதிதம். பிள்ளான் எங்களாழ்வான் தொடக்கமான பரம்பரை யென்னென்னில் நடாதூராழ்வானுக்குத் திருப்பேரனாரான வரததேசிகர்த்திருத்தகப்பனார் ஸந்நிதியிலே ஸ்ரீபாஷ்யந் தொடங்க அவரிவருக்குத் தினவுகெடச் சொல்லமாட்டாதவராய் தினவுகெடச் சொல்லும் திருவெள்ளறைச் சோழியனென்று நியமித்து ஸ்ரீபாஷ்யகாரர் ப்ரஸாதித்தருளின ஸ்ரீபாஷ்யகோஶத்தையும் அதிகாரத்தையும் பிள்ளைகையில் கொடுத்தனுப்ப அவரும் எங்களாழ்வான் ஸந்நிதியில் ஸ்ரீகோஶத்துடன் அதிகாரத்தையும் நிவேதிக்க எங்களாழ்வானும் தமக்கு ஸாத்ருக்ருத்யம் செய்யும்படிக் கேட்டுக்கொண்டு கோஶமும் அதிகாரமும் பெற்று அவருக்கு ஸ்ரீபாஷ்யம் ப்ரஸாதித் தருளினாரென்பது ப்ரஸித்தமாகையால் இந்த ஸம்ப்ரதாயத்தில் குற்றஞ்சொல்ல வல்லவரில்லையிறே. இன்னமும் பட்டர் நஞ்சீயரைக் குறித்து நீர் ஷடாஸநமேறினவராகையாலே அத்வைதவாதத்தில் நீர் திருந்தக்கொண்ட அர்த்தங்களை விஶிஷ்டாத்வைதவாதத்தில் நீரே தெளிந்துகொள்ளு மென்று நியமித்ததாய் ப்ரஸித்தமிறே. ஸாக்ஷாத்ஶர்நபட்டரும் நடாதூரம்மாள் திருவடிகளில் ஆஶ்ரயித்தது ப்ரஸித்தமிறே.

---

## ஷடாஸஸம்ப்ரச்நோத்தரவிஷயம்.

---

மணவாளமாமுனி ஶிஷ்யாஷ்டதிக்கஜஸஹித்யாதி முன்னோர், பின்னோர்களுக்கு நாயகரத்நமாய் உபயவிபூதி நிர்வாஹக

ஸ்வத்தைப்பெற்ற யதிராஜனென்கிற திருநாமத்தைத்தரித்த ஸ்ரீ ராமாநுஜனாகிய எம்பெருமானார் சதுஸ்ஸப்தத்யாசார்ய புருஷர்களுக்குத் திருவிலச்சினை ஸாதிக்கும்படி நியமித்திருக்க அதைத்தவிர்ந்து இவ்வெண்மருக்கு மவர் முக்தியளித்தார் என்பது அத்யந்தாயுக்தம். இவர் ஸம்ப்ரதஸந்ந்யாஸம் பண்ணினாரென்று தாங்களே சொல்லி இவர் உபயவேதாந்தம் ஸாதித்தாரென்பது அஸங்கதம். ஸம்ப்ரதஸந்ந்யாஸம் பண்ணினாரென்பது பொய்யென்றால் உபயவேதாந்தம் ஸாதித்தா ரென்பதுதான் பொய்யென்று சொல்ல பாதகமில்லையிறே. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் தூப்புல் நயினார் திருவடிகளாதலாலும் அவருக்கு மிவர் ஸ்ரீபாஷ்யம்ஸாதித்தா ரென்பது வ்யாஹதம். இன்னமும் ஸ்ரீபாஷ்யபரம்பரையில் தூப்புல்நயினார் அண்ணாவென்று இவர் தாமே சொல்லியிருக்கையாலும் அபஹாஸ்யம். இவர் ஸ்ரீபாஷ்யத்துக்கொரு வ்யாக்யாநம் பண்ணினாரென்ப துண்டானால் அது விருக்கவேணுமே அது காண்கிலோம்.

---

## ஸப்தசாஷ்டாக்ஷரஸ்தோத்ரவிஷயம்.

---

வானமாமலை மடத்து பரம்பரை ஸ்ரீபாஷ்யகாரர் நியமனத்துக்குப் புறம்பாய் இவருக்குமொரு அஷ்டதிக்கஜம் சொல்லுகையால் வ்யர்த்தமாய்ப் பேரிட்டுக்கொண்டபோதைக்கு மிதில் ஒரு தத்வங்காண்கிலோம்.

---

## ஷட்கோணவிம்ஶப்ரஸ்தோத்ரவிஷயம்.

---

ஸ்ரீவணசடகோபஜீயர் மடத்துக்கு பெரியவாச்சான் பிள்ளை தொடங்கி ஆதிவண சடகோபஜீயருக்கிப்பால் மூன்று நாலு பட்டத்தளவிலும் திருவிலச்சினை ப்ரஸங்கங்கள் அஷ்டித்து ஒரு ஸம்ப்ரதாயமாய் நடந்துவந்ததாயும் பின்பு ராஜவிச்சேதத்தால் ஸதாசார்ய ஸம்ப்ரதாய விரோதங்களான ரஹஸ்யத்ரய

ஸாராதிக்ரந்தங்களை ஸ்வீகரித்துக் கொண்டும் ஜயந்த்யாதிவிஷ
யங்களில் ஸதாசாரத்தைத் தவிராமலும் ௩௬ முப்பத்தாறுயி
ரம் முதலான க்ரந்தங்களையும் ஸேவித்துக்கொண்டும் போந்தார்
களென்றும் இந்த மடம் பெரியஜீயராலே யுண்டானதென்றும்
திருநாராயணபுரத்தில் மணவாளமாமுனி ப்ரதிஷ்டை ஆதிவண
சடகோபஜீயர் செய்தாரென்றும் இந்த மடத்தில் நாலு மூன்று
பட்டத்துக்கு இப்பால் வடகலையார் ப்ரவேசமென்றும் அவர்
கள் ஸஹவாஸதோஷத்தாலே வடகலைத் திருமண்காப்பு ரா
மாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாநாதிகஸீஸ்ரங்கம் முதலியவை ஸம்ஹ
வித்ததென்றும் சொன்னதுகல்பிதம்- ஆதிவண சடகோபஸ்வாமி
தம் பிதாவான கேசவாசார்யர் திருவடிகளி லாஸ்ரயித்தவராய்
விரக்தராயிருக்க அகோபிலம் ஸ்ரீ அழகிய சிங்கன் ஸ்வப்நாசார
இவருக்கு ஸந்யாஸம் ப்ரசாதித்து அந்தக் கோவிலிலுள்ள ஒரு
விக்ரஹத்தை இவருக்குத் திருவாராதனமாகக் கொடித்து ஸர்வ
தோஷரஹிதமாய் பெரியபெருமாள் ஆழ்வார் எம்பெருமானார்
இவர்களுக்கு திருவுள்ள வுகப்பாயிருக்கும் ஸ்ரீநிகமாந்த வேதாந்த
தேசிகஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீ தேசிகரு ப்ரசிஷ்யராந
வதிகாரஸ்தம் அம்மாள் திருவடியை ஆஸ்ரயிக்கும்படியாயும் ஆழ்
வார் திருநகரியில் சில கைங்கர்யம் செய்யும்படியும் நியமித்த
படியால் அவரு மப்படியே அம்மாள் திருவடியை ஆஸ்ரயித்து
ஆழ்வார் திருநகரி முதலான திவ்யதேசங்களில் கைங்கர்யம்
செய்வித்தருளி அந்த கைங்கர்யங்களில் திருநாராயணபுரத்து
திருக்கோபுர நைனார் முதலானார்க்கு முன்பு ஸ்ரீ பாஷ்யகாரர்
தாம் செய்தருளின பலிபீடத்தில் ஏறியருளப் பண்ணியிருப்
பதுபோல வடகலைத் திருமண்காப்பு ஏறியருளப் பண்ணினாரெ
ன்றும் ஆழ்வார் இவருக்கு எம்பெருமானாரை முன்னிட்டு
ஹம்ஸமுத்ரையும் ஆசார்யவம்ஸமும் திருவிலச்சினையும்
வண சடகோப ராமாநுஜ ஜீயரென்கிற திருநாமமும் ஸாதி
த்தருளினாரென்றும் தங்கள் ஜயந்தீ ஸம்ப்ரதாயத்தைத் தென்
கலையாரும் அனுசரித்திருக்கிறார்க ளென்றும் அந்த மடத்தார்

ஐதிஹ்யஸம்ப்ரதாயத்தால் விசத மாகிறது. மணவாளமாமுனி தமக்கு விஹாரவேஷ்டி வேண்டாமென்று நியமித்தது ஸம்ப்ரதாய ஸித்தமிறே. ஆகையால் ஜீயர் ப்ரதிஷ்டை செய்தாரென்பது அஸங்கதம். கிஞ்ச இந்த மடத்தில் ராமாநுஜதயாபாத்ரம் அழகிய சிங்கர் நியமனத்தாலே ஆதிவண் சடகோபஜீயர் நாள்முதல் நடந்துவருகிற தென்றும் சில பட்டங்களுக்குப்பின் கண்டூர் ஜீயரொருவர் இருந்ததாயும் அவர்காலத்தில் ஸ்ரீசைலேசத்யாதி இந்தமடத்தில் கலந்ததாயும் அவர்களில் பூர்வஜர் சொல்லுவர்கள். இன்னமும் ஆதிவண் சடகோபஸ்வாமிக்கி பெரியவாச்சான் பிள்ளை பரமாசார்யரென்றது த்ரிம்சத்ப்ரச்நோத்தரவாதி அஜ்ஞாநத்தாலே- எங்ஙனே யெனில் வடக்குத்திருவீதிப்பிள்ளை தனியனாகிய ஸ்ரீ க்ருஷ்ணபாதபாதாப்ஜே யென்பதும் பெரிய தனியன். வேதாந்தாசார்யஸிம்ஹவர்யாய நம: ஸ்ரீக்ருஷ்ணபாதாஸ்ரியம் என்பதும் ஆதிவண் சடகோபஸ்வாமி மடத்திலவர் நியமனப்படி இன்றளவாக திருவாராதனகாலத்திலும் ஸமாஶ்ரயணம் ஸாதிக்கிற காலத்திலும் நடந்துவருகையாலே பெரியவாச்சான் பிள்ளை பரமாசார்யரென்றது அஸம்பத்தவசநமிறே. அப்படியிருந்தால் ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய என்கிற ஆச்சான்பிள்ளைத் தனியனை அநுசந்திக்கவேணுமே? அப்படிக்காண்கிலோமே. கிஞ்ச வடக்குத் திருவீதிப்பிள்ளை தாம் அருளிச்செய்த முப்பத்தாறுயிரப்படிக்கும் எம்பெருமானார் ஸ்ம்ருத்யாதிகளுக்கும் பிள்ளை லோகாசார்யர் நைனார் இவர்கள் செய்த வசநபூஷணம், முமுக்ஷுப்படி தத்வசேகரம் ஆசார்யஹ்ருதயம் முதலான ஸம்ப்ரதாயங்களில் சிலவிஷயங் ளிருப்பதை ப்ரதிஷேதித்து வந் வேதாந்தஸம்ப்ரதாயங்களில் ஸாமர்த்யத்தையும் நினைத்து ரசாஷ்டர் கைகேயிபோலே ஸப்தாந்தரங்காந் த்யஜாமி என்றதுபோல த்யஜித்து கோயில்வாஸமிழந்து மஹாவிப்லவத்தில் தக்ஷிணராஜ்யத்திலே ப்ருஹத்தேசமென்கிற ஜ்யோதிஷ்புரத்தில் திருநாட்டுக் கெழுந்தருளும்போது ப்ரியசிஷ்யரான ஸ்ரீ ரங்காசார்யருக்கு பாத்ரக்ருத்யாதிகாரத்தையும் ஸமாஶ்ரயணாதிகார

த்தையும் ஸாதித்தருளினாரென்பது ப்ரஸித்தமிறே. இப்படி ஓராம் வழியால் வருங்காலத்தில் மணவாளமுனி அவதரித்து வடக்குத்திருவீதிப்பிள்ளைக் கநிஷ்டமான லோகாசார்யஸூத்ரங்களுக்கு வ்யாக்யாநம்பண்ண வப்போது அழகிய சிங்கர், நம்மாழ்வார், உடையவர் மூவரும் ஸத்ஸம்ப்ரதாயத்துக்கு வந்த தீங்கைநினைத்து திருவேங்கடமுடையான் திருமணியாழ்வாரை ராமாவதாரத்துக்குப் பின்பு க்ருஷ்ணாவதாரம்போல் திருநாராயணபுரத்தில் ஶங்கராசார்யர் தேவிகள் ஜாநகியம்மாவினுடைய திருவுதரத்தில் அவதரிக்கும்படி நியமிக்க அப்படியே அவதரித்தா ரென்பதை அடிபோற்றி அவர் ஶிஷ்யரான ஸ்ரீ வராஹஸ்வாமியும் ரஹஸ்யத்ரயஸாரவ்யாக்யாத்ருஸ்வாமிபி:। வேதாந்ததேஶிகஸ்யாயம் ஜநநம் தக்ஷிணாயநே ஶுபம்॥ என்றருளிச்செய்தார். இவருடைய திருவவதாரம் விரோதிக்ருத்ஸம்வத்ஸரம் புரட்டாசிகேட்டை- பதினெட்டு திருநக்ஷத்திரத்துக்குள் ஸகலஶாஸ்த்ரங்களு மதிகரித்தவாறே இவருக்கு ப்ரஹ்மசர்யத்திலே ஸந்யாஸமும் ஜ்ஞாநமும் வந்ததென்றும் தர்ஶநவிரோதிகளை நிரஸித்தா ரென்பதும் ஸ்பஷ்டமிறே. மேலும் இவர் மணவாளஜீயர் ஸம்பந்தப்பட்டவராகில் இவர் விஷயமாய் ரஹஸ்யத்ரயஸாரத்தின் ரஸமுரைப்போன்வாழியே ரஹஸ்யம் முப்பத்திரண்டும் ரஸிக்கவுரைத்தோன் வாழி என்கிற வாழித்திருநாமம் வேதாந்ததேஶிகஸ்யாய மென்கிற ஶுபஶாஸநமும் தவிர்ந்து ஜீயர் ஸம்ப்ரதாயப்படிக்கு அவை நடக்க வேணுமே? அப்படி காண்கிலோம். இந்த ப்ரமாணங்களில் அதிஶங்கை பண்ணும்போது ஜீயர்விஷயத்தில் எறும்பியப்பா செய்ததாகச் சொல்லுகிற நிந்தாவசநாதிகள் பதராகுமெனத் தட்டில்லையிறே.

---

விம்ஶப்ரஶ்நோத்தரவிஷயம்।

---

மூன் ப்ரஶ்நோத்தரவர்ணநத்தில் ஸமாப்தம்.

---

## ஏகவிம்ஶப்ரஶ்நோத்தரவிஷயம்|

ஸாகாருண்யாதிகுணம் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாதிகுணமே யல்லது வேறன்று. கமோஹாபிமானத்தின் பிரிவென்று சொல்வது ஸம்ப்ரதாயந் தெரியாமையாலேயிறே. இந்த இரண்டு குணமும் வேதாந்தாசார்ய ஸம்ப்ரதாய மென்கிறது ஸ்பஷ்டமிறே.

## த்வாவிம்ஶப்ரஶ்நோத்தரவிஷயம்|

உந்நித்ரஸம்ப்ரதாயநிஷ்டர் தத்வார்த்தவிஷயபேத மிவருக்குள்ளிருந்த போதைக்கும் ஸ்ரீ பாஷ்யஸித்தாந்தத்துக்கு விரோதமிராது ஏகதேசமிருந்தால் அவை கவிப்ரயாயிகார பேதங்களாலே பரஸ்பரவிருத்த ஸ்ம்ருதிகளுக்குப்போலே பரிஹாரயோக்யங்கள். பிராட்டிவிஷயத்தில் பேதம் ஷஷ்டிப்ரபந்த நிர்மாதாவான நாராயண ஸ்வாமியாலேயிறே. அவர்க்கு முன்னில்லையிறே. அதுவும் முமுக்ஷுப்படி பரந்தஸந்தேஷணம் முதலான க்ரந்தங்களின் ககார்வாதமென்று ஆசார்ய ஹ்ருதய பரந்தரஹஸ்யம் முதலான க்ரந்தங்களிலே ஸ்பஷ்டமிறே.

## த்ரயோவிம்ஶப்ரஶ்நோத்தரவிஷயம்|

தென்னாசார்யர்களுக்குள் ஆசார்யவிஷயத்திலும் தத்வ விஷயத்திலும் பேதமில்லை யென்பது ஸ்வாபிமானமே யொழிய வேறில்லை. எங்ஙனேயெனில் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தநிர்மாணாசார்யங்களும் ஆளவந்தார் ஆழ்வான் பட்டர் நஞ்சீயர் இவர்கள் பிராட்டிக்குச் சொல்லிய தத்வவிஷயத்திலும் ஆசார்யவிஷயங்களிலும் விப்ரதிபத்தியும் பெரியவாச்சான் பிள்ளையும் லோகாசார்யரும் சொல்லிய ஆசார்ய லக்ஷணங்களில் பரஸ்பர வைஷம்யமும் பிராட்டிக்கு அணுத்வஜீவத்வஞ் சொன்ன ஆச்சான்பிள்ளை பக்ஷத்துக்கும் விபுத்வஸஹிதஜீவத்வம் சொன்ன

தேஶிகாசார்யர் பக்ஷத்துக்கும் உள்ள வேறுபாடும் பலபல வான ப்ரவ்ருத்தி ப்ரகாரங்களும் ஏகஶரீரத்துக்குள்ளே ப்ராஜ்ஞ பேதங்களும் ஏகாதிவதாரஜ்ஞாக்ஷரீ ஸித பேதங்களும் ஸம்ப்ரதாயஸ்வரூபவைத்யாஸ மொப்பினதாமே. ஶாஸ்த்ரார்த்தாநுஷ்டாநபேதகல்பநம் பண்ணுமதுவும். விஹிதவிஷயத்யாகாபாவங்களும் க்ஷுத்ரதேவதையோடொக்க ஸஜாதீயபுத்தி ஸித்தரான க்ருஷ்ணஸ்வரூபரோடொக்க நாஸநபோஜநாதிஸம்பந்தங்களில் ஸாத்யாவதாரஸாத்யாவதாரங்களும் திருமழிசைக் கந்தாடையார் ஜயந்தியிலும் ஶ்ராத்ததிநங்களிலும் ப்ரத்யாப்திகாதிஶ்ராத்தம் நடத்துதலும் மற்றவர் நடத்தாமையும் ஆஶௌசஸமய ஸங்க்ரமணங்களிலும் போஜனபக்ஷத்திலும் சிலர் ஶ்ராத்த ப்ரதிநிதிகள் பண்ணுவதும் சிலர் த்யஜிப்பதும் விதவைகளுக்குள் சிலர் கேஶவாபநஞ்செய்வதுவும் ப்ரபந்நருக்கு ஜாதியில்லை யென்று சொன்னவர் ஶாஸ்த்ரவ்யவஸ்தைகள் செய்வதுவும் உத்ஸவாதிகளான பேதங்கள் பலவுமிருக்க இவை யாருக்குந் தெரியாவென்றெண்ணித் தமக்குள் பேதப்ரஸக்தியில்லை யென்று புகழ்கிறது ஸாம்ராஜ்யதோஷமே யல்லது ஸத்யமன்றென்று ஸுத்யுஸரறிவார்கள்.

---

## த்வாவிம்ஶப்ரஶ்நோத்தரவிஷயம்

---

த்வாஸ்வஸ்திவசீவிஷயத்தில் ப்ரமாணாதிரேக மில்லாமையாலும் மணவாளமாமுனி எண்மருக்கு திருவிலச்சினை ஸாதித்ததாகச் சொல்லி காரணம் சொல்லாமையாலும் இதனால் ராமாநுஜநியமனத்தைத் தவிர்ந்தது ஸ்பஷ்டமாகையாலும் அவிஶ்வஸநீயம். எம்பெருமானார் காலத்தில் தப்தாசாரவிஷயங்களில் ஸ்வாடிபேதமில்லை யென்றும் வேதாந்தாசார்யர் நாளில் ஸ்வாடிபேதமுண்டானதென்றும் எழுபத்துநால்வரில் ஒன்பது பேர் வம்ஶ்யரில் சிலர் வடகலை ஸம்ப்ரதாயத்தில் சேர்ந்தாரெ

ன்றும் மற்ற எல்லாரும் அன்று முதலின்றளவாக தென்கலை யாராகவே இருக்கிறார்களென்றும் பிள்ளை லோகாசார்யரும் வாதிகேஸரி மணவாளமாமுனியும் முடும்பை நம்பி யென்றும் திருமந்த்ரார்த்தராவாசி போதாயித்தது மற்றாவ ஸ்ராவ்யம்| எங்ஙனே யென்னில் ஆதிமுதல் நம்பிள்ளை ஸமயகாலம் வரையாய் வடகலை ஸம்ப்ரதாயமே நடந்துவந்தது. நஞ்சீயர் செய்தருளின ஒன்பதினாயிரப்படி திருவாய்மொழி வ்யாக்யானத்தை நம்பிள்ளை தம்மூவருக்குக் கொண்டுபோகும்போது வெள்ளத்தில் விட்டுவிட்டு அதற்கு ப்ரதிஸ்தானம் தாந்தோன்றியாக எழுதும்போது சில புதுக்கல்பனைகளுண்டுபண்ணியதாலும்சில அபசாரங்களுண்டாகி அதனால் சிலர் மயங்குவதினால்தழைந்து வளர்ந்துவந்த ஸ்ரீபாஷ்யகாரதர்சனத்துக்குத் தீங்குநேரிட்டதை பரிஹரிக்கத் திருவுள்ளம்பற்றி திருவேங்கடமுடையானை தம் திருமணியாழ்வாரை தூப்புல்குலத்தில் தேசிகனாக அவதரிப்பித்து முன்போல ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தருளினாரென்பது ஜீயர்ஏடுபாடு முதலான க்ரந்தங்களில் ப்ரஸித்தமிறே. இன்னமும் [illegible] என்று பூர்வர்களும் [illegible] ஸ்தாபித்தார்களிறே. ஆகையால் தேசிகன் விஷயத்தில் சொன்ன குற்றம் அவர்களுக்கே. தென்கலையாரில் அன்று முதலின்றளவாக நம்பிள்ளை முதலானாரிடத்தில் ஸம்பந்தப்படாமல் ஒராம்வழியாய்ஆசார்ய ஸம்பந்த முண்டானால் அப்போது தென்கலை ஸம்ப்ரதாயமே ப்ராசீனமென்றும் வடகலை ஸம்ப்ரதாயம் நவீனமென்றும் சொல்லலாம் அப்படி காண்கிலோம். வடகலையாரில் ஸ்ரீராமாநுஜ நியமனப்படியான ஸம்ப்ரதாயபரம்பரை அப்படியே இன்றளவாக நடந்துவருகையால் சில மூடர்கள் நவீனமான தென்கலை ஸம்கேதத்தில் ப்ரவேசித்தவர்கள் போகமற்றவர்கள்

நிர்தோஷங்களாய் ஸத்ஸம்ப்ரதாய முள்ளவர்களா யிருக்கிறார்கள். அதற்கு த்ருஷ்டாந்தம் அந்யமத ப்ரவிஷ்டரான திருமலைஐயம்பூண்டி திருமலை நன்பாக்கம் திருமலையீச்சம்பாடி முதலானவை இப்போதும் ஸ்பஷ்டமிறே. ஆகையால் தென்கலை ஸம்கேதம் அநாதியென்றது அஸத்யாபாஸமாத்ரமிறே.

---

## பஞ்சவிம்ஶப்ரஶ்நோத்தரவிஷயம்|

---

கோயில் கந்தாடையண்ணனும் எறும்பியில் ஸ்ரீரங்கராஜரும் லாடபுரத்தாரினாசாரத்தை ஜீயரிடத்தில் சொல்ல அவர் ஸ்வமதப்ரவேசம் செய்ததாயும் போளிபாக்கம் நைனார் அந்யமதப்ரவேசம் செய்ததாகவும் ஶேஷாவதாரியான ஜீயருக்கு அந்யஶிஷ்யஜங்களும் ஸ்வமதங்களும் ஸம்மதமா யிருக்குமென்று மிப்படிச் சொல்லுவார்களென்பதை விஶ்வஸித்தால் அவர்கள் ஆசார நிபந்தனம் முழுதும் நூதன கல்பிதம் பரம்பராசார விருத்தமென்பது ஸ்பஷ்டம். எங்ஙனே யெனில் ஸர்வஜநாவிதித ஶேஷாவதாரமான ஸ்ரீபாஷ்யகாரருக்கும் தர்ஶனப்ரவர்த்தகரான பட்டர் முதலான பின்னேருக்கும் ஶ்ருதப்ரகாஶிகா ரக்ஷணகர்த்தாவுக்கும் இப்படிப்பட்ட நிபந்தனங் காண்கிலோம். ஆனாலிதுவே இவர் ஶேஷாவதாரத்துக் கேற்றமெனில் உடனே போளிபாக்கம் நைனார் ஸ்வமதத்தை த்யஜித்து அந்யமதமாக்கினதாலும் வானமாமலை ஜீயரும் தொட்டாசார்யரும் தங்களுக்கு ப்ரத்யந்யஶிஷ்யஜம் ஏற்படுத்திக் கொண்டதனாலும் திருமழிசை ஸ்வமதம் தண்ணந்தோட்டம் ஸ்வமதம் திருமூர்த்தி அந்யமதம் இப்படிக்கனேகஞ் சொல்லுகையாலும் இவர்களோ பாதி ஜீயரும் ஒருவராய்க் காண்கிறதேயன்றி ஏற்றமொன்றும் காணவில்லை. இவர்களுக்கும் இத்தால் ஶேஷாவதாரத்வம் உண்டாகிவிறே. இவருக்கு முண்டாகும். இவருக்கும் நடாதூராருக்கும் விவாதம் நேரிட்டால் அதற்குத் தாம்

சொல்லாமல் கோத்ரவ்யவஸ்தை செய்ததாக சொல்லுகையா லே ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ள வுகப்புக்குரியவராய் ஸ்ரீ பாஷ்யஸிம்ஹாஸநாதிகாரம் பெற்றுள்ள நடாதூராழ்வான் திருவம்ஶ்யரும் பரமபாகவதர்களுமான லாடபுரத்தார் ஸந்நிதியில் அபசாரம் நேரிட்டது ஸத்யமாகையால் ஜீயரீடுபொட்டில் சொல்லுவது ஸத்யமிறே. ஆனால் இந்த நிபந்தனை செய்ததற்கு மூலமென்னெனில் ஜீயர் தந்த்ரவாதியாதலால் தம்மில் மதிமயங்கினரைக்கொண்டு லாடபுரத்தாரை மதிமயக்க அவர்கள் கலங்காமையைக்கண்டு அவர்களிடத்தில் அஸூயையால் ஜீயர்வலைக்குள்பட்ட சிலர் தம்மவர்களை நீங்கள் லாடபுரம் போகவேண்டாமென்று சொன்னார்கள். இல்லாவிடில் ஸ்வகோத்ரவ்யவஸ்தை செய்யும்போது ஒவ்வொரு கோத்திரத்திலும் சிலபாகம் நீக்கிச் சிலபாகம் சேர்க்கக் காரணமென்ன. அதை கோத்ரவ்யவஸ்தை யென்று வ்யவஹரிப்பதெப்படி கோத்ரஶப்தம் கோத்ரஸந்தாநவாசகமே யல்லது இவர் நினைத்த குடும்பங்களுக்கு மாத்திரம் வாசகமாகுமா. இன்னமும் இவர் சொன்ன ஸ்வகுடும்பத்தாரொழிய மற்றவர்கள் ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரவிஷ்டாளாய் ஸதாசார ஸம்பந்நாளாய் ஒருவருமில்லையென்று சொல்லமுடியுமா. அல்லது இந்த குடும்பத்தில் பிறப்பவர்களெல்லாரும் ஸதாசாரஸம்பந்நாளாகவே யிருப்பார்களென்று உறுதி சொல்லலாமா. ஆதலால் சிலருடைய ஆசாரவைகல்யத்தினால் இவர் இப்படிப்பட்ட கோத்ர நிபந்தநம் பண்ணினாரென்பது ஸ்வஹ்ருதயத்துக்கே அபஹாஸ்யமாகுமிறே. ஆதலால் கோத்ரவ்யவஸ்தை செய்ததற்கு த்ரிம்ஶத்ப்ரஶ்நோத்தரவாதி சொன்ன காரணம் அஸம்மதமென்றும் நாம்சொன்ன காரணம் ஸம்மதமென்றும் வித்வாம்ஸர் தெளிவார். இன்னமும் பண்டைக்குல கோத்ரவாதீநாஷிகள் ஸ்வரூபவிரோதம் - ராமாநுஜகோத்ரம் தொண்டைக்குலம் என்பது ஸ்வரூபாநுரூபமென்றும் க்ருஷ்ணவர்ணர்கள் குலதேவதையோ டொத்தவர்க ளென்றும் இப்படிச் சொல்லு

கிற தென்கலையார் வாயஸோதிமோத்ர நிபந்தநம் பண்ணி அதில் சிலரைச் சேர்த்துச் சிலரைத்தள்ளி தமக்குள் தாமே ஸமர்த்திப்பது நிரூபிக்கப்படும்போது ப்ரபந்நனுக்குஜாதிபோம். ஸ்ம்ருதிஸம்ப்ரதாயங்களை ஜாதியை முன்னிட்டு அவஸரமாக வ்யவஹரித்தால் பாகவதாபசாரமுண்டென்றும் இத்யாதி சொல்லுவது ஸாம்ப்ரதாயிகவ்ருத்தாந்தத்தை யொத்த அதிஸந்தாநமேயொழிய பாரமார்த்திக மல்லவென்பது ஸ்பஷ்டமிறே. எண்மருக்கும் ஜீயரிடத்தில் திருவிலச்சினை என்பதால் எழுபத்து நாலு ஸிம்ஹாஸநாதிபதிகளென்பது நிஷ்ப்ரயோஜநம்।

---

## ஷஷ்டிம்ஶப்ரஸ்நோத்தரவிஷயம்।

---

ஸ்ரீஶைலேத்யாதி இதில் இத்தனையாவது ப்ரஶ்நத்துக்குத் தரமென்று சொல்லாமல் ஸாமாந்யமாய் ப்ரஶ்நத்துக் குத்தரமென்று சொன்னதேனே. இப்படி இதுவரையில் சொல்லிவந்த வழக்கத்தை விடும்படி நேரிட்ட காரணத்தை யேன் சொல்லக்கூடாது. அதுநிற்க; ஒருநாள் ஜீயர்கோயிலுக்கு எழுந்தருள பெருமாள் ஜீயருக்கு அருள்பாடிட்டபடிக்கு ஜீயர் திருவாய்மொழிக்கி வ்யாக்யாநங்களைக்கொண்டு ஸயுக்தஞ்சொல்ல வுபக்கிரமித்தவளவிலே பெருமாளும் நாச்சிமாரும் ஸேநாபதியாழ்வானும் ஆழ்வார்களும் பெரிய மண்டபத்தில் எழுந்தருளி கேட்டுக்கொண்டதாயும் பின்பு ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் நம்வீடு முதலான நூற்றெட்டிலும் இவர்விஷயமான இந்த ஸ்ரீஶைலேத்யாதிதனியன் ஆதியாக ப்ரபந்தாநுஸந்தாநம் நடத்தும்படி பெருமாள் நியமித்ததாயும் இது யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்தின்படி யென்றும் ஸ்ரீவாநத்து முதலிகள் மூவர் சேர்ந்து செய்த இத்தனியனை அந்தப்படிக்கு பாலனாகிவந்து பெரியபெருமாள் சொல்லி மறைந்ததாயும் அதுக்குமுன் பதரிகாஶ்ரமத்தி லெம்பெருமான் இந்தத் தனியனை அநுஸந்திக்கும்படி நியமித்திருந்ததாயும் பின்பு சிலகாலங்கழித்து அங்குமிங்கும் நடந்த விருத்தாந்தத்தைக்கொண்டு இது ஸம்பவஸ்வ

ணீதமென்றே நிஸ்சயித்துக் கோயில்களிலும் ஆராமங்களிலும் க்ருஹங்களிலும் சொல்லத் தொடங்கினதாயும் அயோத்தியா ராமாநுஜய்யங்கார் படியின்படி யென்றும் கோயில் முகரிலிருக்கிறதுபோலவும் ஜீயர் திருவத்தியயனத்தை கோயில் பரிஜனங்கள் படித்தனத்தைக்கொண்டு இப்போதும் நடத்திவருவதாகவும் ஜீயர் ஸிஷ்யர்களான கந்தாடையண்ணன் எறும்பியப்பா முதலானூர் இந்தத்தனியன் விஷயமாகச் சொல்லிய சில வசநங்கள் ப்ரமாணமென்றும் இதுக்கு விரோதமாக ராமாநுஜதயாபாத்ரஞ் சொல்லுகிறது ஸம்ப்ரதாயவிருத்தமென்றும் சொல்லுமது அஜ்ஞாநவிலாஸம். எங்ஙனே யெனில் கோயிலில் பெரியமண்டபமென்பது இன்றளவில் காண்கிலோம். பெருமாள் கண்டருளுகிற திருக்கார்த்திகைத் திருநாளில் செவிசாத்தியருளி பெரிய திருவத்தியயன உத்ஸவத்துக்கு வரும்படி ஆழ்வார்க்கு திருமுகப்பட்டய மிட்டருளி அவர் கோயிலேற வெழுந்தருள அவருக்கு ஸர்வஸ்வதாநம் முதலான வரிசைகளைத் தாமொருவருமே ப்ரஸாதித்தருளினரென்பதுவும் நாச்சிமாரோடு தாம் ஸங்க்ராந்த்யுத்ஸவங் கண்டருளும்போது திருப்பாவை சாத்துமுறை கண்டருளி ஆழ்வாருக்குவரிசைகளும் ப்ரஸாதித்தருளினரென்பதுவும் இன்றளவாக நடத்திக்காட்டுவதுபோலே இந்த உத்ஸவம் நடத்திக்காட்டவேண்டுமே. அது காண்கிலோம். ஸேநாபதியாழ்வானோடு பெரியபெருமா ளெழுந்தருளுவது எக்காலத்திலும் கண்டும் கேட்டுமிலோம். பெருமாளருளிப்பாடிட்டு ஜீயரும் ஈடுமுதலானவை விண்ணப்பஞ்செய்ததாகச் சொல்லாமல் பெரியபெருமாள் ஜீயரை ஆசார்யராக வரித்து இவர் உபந்யாஸத்தின் மேலாகத் தாமிவர்முகமாக முப்பத்தாராயிரங் கேட்டாரென்னும் கிம்வதந்தி முண்டே அது பெருமாளுக்கு நிக்ருஷ்டமென்பது ஸ்பஷ்டமிறே. இந்தத் தனியனுத்பத்தியைப் பற்றி மூவர் சொன்னூரென்றும் வசநிகையில் நாராயணன் சொன்னூரென்றும் சொல்லும் ப்ரகாரங்கள் பரஸ்பரவிருத்தம், அது எங்ஙனமெனில் தைவிகசத்ருக்நத்தைக்கொண்டு சொல்லியதற்கு அதிசயம் சொல்லவேண்டுவதில்லை. உபயவிபக்ஷம்

கொண்டு சொல்லிய தென்பதுந் தவிர நஃஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம் வாழித்திருநாமத்துக்கும் லக்ஷ்மீநாதாதி தனியன்களுக்கும் ஸமகாலீனத்வமும் ஸமகாலநியமனமும் இல்லாமையினாலே அவைகள் தவிர வ்யாஸம்மிக்குமிறே.

உபலக்ஷணமென்னில் இது ஒரு யத்நம்விஶேஷத்திதில்லையிறே. இன்னமும் வ்யாஸம்பாதியில் ஸமகாலநியமன மென்பதால் தக்ஷண த்தில் சொல்ல விரகில்லை. பின்னு மிதுக்கும் வ்யாஸம்பத்தும் நடுவில் லக்ஷ்மீநாதாதி கண்டிதமாகையாலும் ஸ்ரீ ஹாஷ்ய காரர் திருவடி ஸஹியாத கேவலஜைத்ரதாஸஸ்தஶிஷ்ய தேஶங் களையும் சேர்த்து நூற்றெட்டிலொன்று சொன்னதாகச்சொல்லு வதாலும் தான் கெட்டதன்றி வஜ்ரவாஷ்பிணியையும் கெடு த்தானென்னுங் கணக்காக பெரியபெருமாளுக்கு உஜ்ஜ்வல விஶேஷித்ததாக வைதிகஹ்யம்கல்பித்ததிறே. இந்த வைதிகஹ்யம் ஸத்யமாகில் கோஶதாஸஸூக்ஷ்மங்களி லெப்போதேனும் உண்டா யிருக்கலாமே அது காண்கிலோம். கிம்ச நியமித்த பெரியபெ ருமாள் ஸந்நிதியிலு மின்றளவாகக் காண்கிலோம். இன்னமும் ஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம் தனியனும் தம் விக்ரஹமும் வேண்டாமெ ன்று ஜீயர் தாமே நியமித்ததாக மற்றவர்கள் சொல்லுகையால் பெரியபெருமாள் நியமனம் ஜீயராலே தடுக்கப்பட்டது ஸ்பஷ்ட மாகவே இதுக்குச் சொல்லவந்த வைதிகஹ்யங்களும் கோயிலண்ணன் முதலானார் பாசுரங்களும் ஶ்லோகங்களும் நிரஸ்தங் கங்களென்பது ஸ்பஷ்டமிறே. இது கோயிலில் பிறந்த காரணஞ் சொல்லி பஞ்சிகையில் அவ்வண்ண மொன்றுமில்லாமலிருக்க அங்கே இதுமாத்திரம் பிறந்ததென்று சொல்லும் வைபவத்தை உபந்யாஸர்களே பரிஶீலிக்க வேண்டும். ராமக்ருஷ்ணாத்யவதா ரங்களைப்போல ஆழ்வார் ஆசார்யர்கள் திருவவதாரோத்ஸவங் களும் நடத்துவது இந்த மொஷியி லகப்படாத ஜீயாள் ஸ்ரீ வைஷ்ணவாளுக்கு திருவத்யயனங்களுக்கு அரவணம் அலங்காரம் அவரவர்கள் திருமாளிகைகளுக்கு அனுப்புவதாகையால் அப்

படி யிவருக்கு அக்காலத்தில் நடத்தி வரஷண்முக வேலாயுத முதலி நாளையிலே பொன்னியன்பிள்ளை க்ருஷ்ணன் ஊழியக்கா ரன் கையில் யாவகம்பண்ணின ஸ்வத்தைக்கொண்டு இப்போ தும் நடந்துவருவதாய்ச் சொல்லுகையாலும் இவ்விக்ரஹம் கோயில்களில் ஸந்நிதியில் வந்து அருள்பாடுவரிசைகள் பெரு மையாலும் இவர் இதராளோபாதிஸ்பஷ்டமிறே. கோயிலிலே யிருந்து இதராள் திருவத்யயனத்துக்கு வருகிறதாயுள்ள வேதந மிவருக்கு முண்டு. இதில்லாத ஆழ்வாராசார்யர்களுக்குள் ள வேதனம் இவருக்கில்லையிறே. ஜீயர் தானே கோயிலிலே தன் விக்ரஹமும் ஸ்ரீசைலேசதநியும் தேவையில்லை என்று நியமித்ததாய்ச் சொல்லும் வசநத்துக்கு விரோதமாய்க் கோயில்களிலே விக்ரஹங்களையும் வைத்துத்தனியனையும் சொ ல்ல வுபக்கிரமித்து தாங்கள் ஸம்ப்ரோக்ஷணம் பண்ணுவதை யும் தங்களுக்கு நேரிட்ட ஆசார்யாபராதத்தையும் ஸஹ ஸைத்ரிகர்க்கு ந ப்ரஸக்தபகவதபசாரத்தையும் பாகவதா பசாரத்தையும் மறந்து ராமாநுஜதயாபாத்ரம் சொல்லவேண்டுமென்று சொல்லும் வடகலையாருக்கு பகவ தபசாரமுண்டென்று சொல்லுவதாலும் ராமாநுஜதிவ்யாஜ்ஞா ஸித்தமான இந்தத் தனியன் கூடாதென்று நிரோதிப்பதா லும் எதிரிகள் முன்சொன்ன அபசாரங்களுடன் பின்னும் மஹாபசார முடையவர்களென்பது ஸ்பஷ்டமிறே.

---

## ஸத்வ விம்சப்ரச்நோத்தரவிஷயம்

---

அநந்தாசார்ய ஸ்வாமி ஸ்ரீகாஞ்சீபர் ராமாநுஜ தயாபாத்ர த்தனியனை நூற்றிருபது ஸம்வத்ஸரத்துக்குள் உண்டாக்கினரெ ன்றும் மைசூர்ராஜா முதலானரை இவர் தன்வசமாக்கிக்கொ ண்டு இதை திவ்யப்ரபந்தாதியில் சொல்லுவித்தா ரென்றும் துண்டீர பாண்டியதேசங்களிலே அது நடக்கவில்லையென்றும் இதுவிஷயத்தில் ப்ரஹ்மாண்டபுராண மிருக்கிறதென்று சொல்

லுமவர் ஸர்வதந்த்ரரென்றும் சிங்காரம்மனைக்கொண்டு திருநாராயணபுரத்தில் வேதாந்தாசாரிய ப்ரதிஷ்டை பண்ணுவித்தாரென்றும் இந்த ஸம்ப்ரதாயம் கோயிலிலேயில்லை யென்றும் வேதாந்தாசார்யவைபவ க்ரந்தங்களிலே இந்தத் தனியனைச் சொல்லாமையாலே முன்னுளில்லை யென்றும் சொல்வது அஸம்மதம். எங்ஙனே யென்னில் ஸ்ரீ வேங்கடகிரிமாஹாத்ம்ய ஸதாத்யாயத்திலேயும் ஸ்ரீவேங்கடேசாஷ்டோத்தர நாமத்திலேயும் க்ருஷ்ணார்யவிப்ர வேதாந்த தேசிகாய என்று சொல்லுகிறபடியாலும் திருவேங்கடமுடையான் திருமணியாழ்வாரை க்ருஷ்ணார்ய விப்ரரிடத்தில் ப்ரவேசிப்பித்து தூப்புல்குடியிலே அவதரிப்பித்து கலௌ ஹாவிந்ருணாம்ப்ரஹ்மீதிஸம் ப்ரஜ்ஞதே | ராஜேஸ்ரீ ஸஉவாதிஸஞ்சுஷிமீள ஶ்ரேய:ப்ரஜோஸாவிதி ॥ இவரால் ராமாநுஜதர்ஶநத்துக்கு நேரிட்டுள்ள வெறுப்புகளைத் தீர்க்கிறகாலத்தில் கோயிலிலே வாதிகள் தங்கள் கேள்விக் குத்தரஞ் சொன்னு லொழிய பெரியபெருமாளுக்குத் திருவாராதனஞ் செய்யக்கூடாதென்று நிரோதிக்க அங்குள்ள பெரியவாச்சான் பிள்ளை லோகாசார்யர் முதலானோர் நிருத்தரராகிப் பெரியபெருமாள் திருமுன்பே விண்ணப்பம்பண்ண ஆழ்வாரெம்பெருமானுருக்குப் போலவே இவருக்கு, கோயிலுக்கவர் திருமுகப்பட்டயம் அனுப்ப இவரும் ஶிரஸாவஹித்து கோயிலேறவெழுந்தருளி வாதிகளுக் குத்தரமாக ஶததூஷண்யாதி க்ரந்தங்களைச் செய்து அவர்களை ஜயித்து பெரியபெருமாள் திருவாராதனத்தையும் நடத்த பெரியபெருமாளும் பெரிய பிராட்டியாரும் திருவுள்ளமுகந்து ஸ்ரீ ராமாநுஜனை முன்னிட்டு உபய வேதாந்தங்களையும் நிலைநிறுத்தின வேதாந்தாசார்யரென்கிற திருநாமத்தையும் வரிசைகளையும் ப்ரஸாதிக்க இதுகளை ஸஹியாமல் சிலர் சில அக்ருத்யங்களை நடத்த அதுகளுக்கு ஸ்ரீக பாதுகாஸஹஸ்ராதிகளைச் செய்தருளிக் காட்டியும் பின்னும் ஸம்ப்ரதாயஸம்ப்ரதாயப்ரவர்த்தி: என்றும் அஹமேவ நாஹமேவ என்றும் தைந்யாநுஸந்தாநத்தையும் செய்துகொண்டும் பெரியபெரு

மாளும் ஸ்ரீ பாஷ்யகாரரும் போரவுகந்து ஸர்வஜ்ஞ ஸ்ரீவேங்கடே
ஶஸ்ய ஸ்ஸஹஜகாருண்யநிதி: । குமதித்வம்ஸவாதார்ஹ்யோ ரேவ
வக்ஷ்யதீஶ்வர: ॥ இத்யுக்திப்படி உபயவேதாந்த ப்ரவர்த்தநம்
பண்ணுமென்று நியமித்தருள இவருமந்த நியமனத்தை ஶிர
ஸாவஹித்து வேதாந்தப்ரவர்த்தநம் பண்ண பெரியபெருமாள் எம்
பெருமானார் ௭௪-வரை நியமித்து அவரைக்கொண்டு நிர்வா
ஹம்பண்ணின உத்கர்ஷத்தை இவரொருவர் தலையிலேற்றின
மைகண்டு போரவுகந்து எம்பெருமானார் தம்விஷயமாக வொரு
ஸ்தோத்ரம்சொல்லும்படி நியமித்தருள இவரும் மாறனடிபணிந்து
அந்த ராமாநுஜன் பொன்னடியான் எழுபத்துநால்வரும் தா
மொருவராய் அவர்களருளிச்செய்யும் ௭௩-விஶிஷ்டாத்வைத
பாஷ்யார்த்தங்கள் எழுபத்துநாலாவரான இவரிடத்தில் போதி
ந்து கொண்டு ௭௪ - ஶ்லோகமருளிச்செய்ய பெரியபெருமாளு
முகந்து வரிசைகளும் ப்ரஸாதித்து ராமாநுஜதயாபாத்ர
மென்று நியமித்து இவர்விஷயமான தனியனுக்கு நியமித்தருள
அப்படியே இவரும் ராமாநுஜதயாபாத்ரம் ஸ்ரீமாந் வேங்கட
நாதார்ய: என்கிற தனியன்களை விண்ணப்பஞ்செய்ய ஆழ்
வார்கள் அருளிச்செயல்களுக்குமுன் ராமாநுஜதயாபாத்ரம்
என்பதையும் ஸம்ஸ்க்ருதக்ரந்தங்களுக்கு ஸ்ரீமாந் வேங்கடநாதா
ர்ய: என்பதையும் அநுஸந்திக்கும்படியாகவும் திருக்காப்பாக
கவிதார்க்கிக இத்யாதிகளநுஸந்திக்கவும் அழகியமணவாளனிய
மிக்க ஸர்வஸ்ரீவைஷ்ணவர்களும் கோயிலனந்தகொத்து பரி
கரங்களும் அந்தத் தனியன்களை அப்யஸித்துக்கொண்டு அன்று
முதலின்றளவாக நடந்துவருகிற ஸம்ப்ரதாயமென்பது
யதிராஜஸப்ததிவ்யாக்யாநம் பிறந்தபடி நம்பாணனுரை ப்ரஹ்
மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி யருளிச்செய்த வைபவ ப்ரகாஶிகை
முதலானவற்றிலே ப்ரஸித்தமிறே. இன்னமும் திருநாராயண
புரத்துக் கெழுந்தருள அங்குள்ள வாதிகள் அநாதரித்ததைக்
கண்டு தேஶிகன் திரும்பி எழுந்தருளத்திருநாராயணன் பின்
னையும் அநந்தகொத்துபரிகரமும் வரிசைகளு மனுப்பி அழை

த்துவரவிட்டு கடாக்ஷித்தருளினரென்பது ப்ரஸித்தமிறே. கிஞ்ச பேரருளாளன் ஸன்னிதியில் திருவைகாசித்திருநாளில் அப்பன் அருளாழிப்புடகடந்தவராய்த் திருவீதியலங்கரித்தருளும்போதும் வாதிகளெதிராக இவரவர்களுக்குத் தாஞ்சொல்ல அத்திகிரி எம்பெருமான் போரவுகந்து திருமாலை ஸ்ரீஶடகோபம் முதலான வரிசைகள் ப்ரஸாதித்து நியமித்தபடிக்கு அந்த திவ்யதேஶத்தில் தர்ஶநநிர்வாஹம் பண்ணினரென்று ப்ரஸித்தமிறே. இன்னமும் ஶைவராஜனுக்கு மிவருக்கும் வாதம் நேரிட அப்போது யஶ்ஶ்ரீத்ராணம் பவதி ந ஜ்ஞாநதௌர்ப்பல்யம் பவாந்தகம் | ஸர்வாபவிஹ்ருதம் தஞ்சம்பதேவேதாந்ததேஶிகம் ॥ என்றும் கீழ்க்கார்ப்பண்யதர்ஶநாதிஷு வம்ஶ்யாம் ஶாஸ்த்ரவக்ஷகே | ததாபீ ஶைவராஜநேஷ ஜயஸ்தேஶிகாக்ரண்ய: ॥ ஶ்ரீமத்வேங்கடதேஶிகவிக்ரஹம் திதக்ஷதி | ஶைவராஜேஶஸேவகஸ்ஸர்வே தேஶிகாக்ரண்ய: ॥ என்றும் ஸர்வாநுகூலநாவாவதஸ என்னுஞ் சொல்லுகிறபடி பெரியபெருமாள் நியமன ப்ரகாரம் ஸ்வதேஶாயவதரித்துக் கோயில்முதலான திவ்யதேஶங்களிலே எழுந்தருளியிருக்கிறு ரென்பதுவும் ப்ரஸித்தமிறே. தாயைக்கொன்றவனும் தான் அம்மா அம்மா வென்னுமாப்போலே இவர்வைபவத்தை ஸஹியாதவர்களும் இவர் ஶேஷாவதார மென்னும்படி அதிஶயிதப்ரபாவமுடையவராகையாலே ஶ்ருதாநம் ஶாநுஷம்ஶேந என்று சக்ரவர்த்தித் திருமகனைப்போலே இவரும் தம்மை மறைத்து ஸ்வப்ரஶம்ஸை பண்ணவேண்டிய ப்ரகரணத்தில் உபபத்திஸஹஸ்ரீ என்று ஶப்தப்ரயோகம் பண்ணுமதும் உண்டான வதிசயங்கள் தோன்றும்படி யருளிச்செய்யவுமதைக்கொண்டு ஸாஹஸமாகச் சொன்னதாகவும் அதனால் ப்ராமாணப்ரஸித்திக்குக் குறைவென்றும் இல்லாமலிருக்க அதில்லையென்றும் சொல்லுமவர்களே உபஹாஸ்யரன்றி மற்றவர்கள் உபஹாஸ்யராகமாட்டார்கள். இவ்வர்த்தந்தோன்றவே ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் ஸௌம்ய ஸர்வதேஶநாதாசார்யர் திருவம்ஶ்யரான ஸ்ரீநிவாஸாசார்யர் கந்தாடையாண்டான் திருப்பிள்ளை தொட்டயாசாரியர் ப்ரவாஸவேங்கடாசார்யர்

என்று மாலையிட்ட பெருமாள் முதலானார்கள் ஸம்ஸ்க்ருத த்ராவிட ரூபமான கவிநாடகாத்யங்களால் இவருடைய மாஹாத்ம்யத்தை வெளியிட்டார்கள். பின்னும் அப்பய்யரான கவய தீக்ஷிதர் முதலானாருங்கூட இவர் மாஹாத்ம்யத்தை ப்ரசம்ஸிக்குமாறே யிருப்பது ஸூக்திநாய - யொநித்யம் - மாதாவிகேத்யாதி தனியன்களைப்போல இவருடைய இந்தத்தனியன்களிறே.

காந்தோபயந்த்ருப்வைபவத்தில் ஸ்ரீமாநு வெங்கடேச இத்யாதி தனியனுமில்லை. அதனால் ப்ரஸித்திசொல்லி ப்ராமாண்யமல்லாமல் தனியனுக்கு நிர்ணயித்த நூற்றிருபது வருஷத்துக்கு முன்பட்ட காலமாக ராமாநுஜதயாபாத்ரம் இத்யாதித் தனியன் லோக ப்ரஸித்தமென்பது ராஜகீயசாஸநம் முதலானவைகளாலும் த்ரிம்சத்ப்ரச்நோத்தரவாதியினுடைய ஸ்வவாக்ப்ரஸ்தாவவாக்யத்தாலும் ஸ்பஷ்டமிறே. ஆனாலிந்தவிடம் ப்ரஸக்தஸ்யத்தில் புத்திமான்களுக்கு எம்பெருமானே தோற்றுவிப்பன் அதை நிரூபித்தா லவையந்தவாயாலேயே வாழ்த்தினா னென்னுமாப் போலயிறே. இதுவும் ப்ரகாசிக்கும். சிங்காரம்மன் பெரிய பரகால ஜீயர்தொண்டருக்கு ஆட்பட்டவர். ஆகையால் அந்த அம்மா ராஜக்ருஹம்போய் வருவதால் ஈர்ஷ்யைகொண்டிருக்கும் ஶத்ருக்கள் அந்த வம்மைபேரில் குற்றமுண்டுபண்ணி ராஜாவுக்கறிவிக்க அவரும் க்ரூரராய் சிங்காரம்மனை சாமுண்டி கோயிலிலே போட்டுவிக்க அந்த சாமுண்டியு மிவனை உபத்ரவிக்க அம்மையும் தம்மாசார்யரான ஸ்ரீநிவாஸவரதகுருஸ்வாமியை முன்னிட்டு வித்ராவிணீ விபாட்ய வேதவாநயிநீ நாம என்று சொல்லுகிற திருமணியாழ்வாரான கௌஸ்துபனை திருவடித்தொழ அம்மாஹாத்ம்யத்தாலே சாமுண்டி விலகப்பொழுது விடிந்தவாறே ராஜகீயர் ஸாக்ஷியான அம்மன் வ்ருத்தாந்தத்தை ராஜாவுக்கறிவிக்க அவர் இந்த அம்மனை அழைப்பித்துக் கேட்க அம்மனும் நம்மாசார்ய ப்ரபாவமென்ன ராஜாவுமுகந்து ஶத்ருக்களைவிலக்கி அம்மனை முன்னிட்டு ஸ்வாமிஸன்னிதியில் கிட்ட ஸ்வாமியுமுகக்க ராஜாவும் அடியேனுக் குத்தாரக

மாய் நியமிக்கும் கைங்கர்யமென்னென்ன ஸ்வாமியும்ஜீர்ணோத்தாரணம் பண்ணும் தேசிகனுக்குத் தனிக்கோயில் கட்டுமென்ன ராஜாவுமப்படியே தனிக்கோயில் கட்டிவித்தாரென்று ப்ரஸித்தமேயொழிய அந்த திவ்யதேசத்தில் சிங்காரம்மனைக்கொண்டு தேசிகவிக்ரஹப்ரதிஷ்டை பண்ணுவித்ததாக சொன்னது அத்யந்தாஸத்யமாகையால் அவஹாஸ்யம். தக்ஷிணாதி ஸகலதேசங்களிலும் அபாதிதமாய் ராமாநுஜதயாபாத்ரம் நடந்துவரும் ஸகலதிவ்யதேசங்களிலும் தென்கலையார் ஸ்ரீசைலேசதயாபாத்ரகோஷம் பண்ணிவருகிறகாலத்தில் திருநாராயணபுரத்திலும் கோஷம்பண்ணி நெடுங்காலமாய் நடந்துவரும் ராமாநுஜதயாபாத்ர தனியனைத் தடுக்க அவ்வளவிலே வடகலையார் கண்டீரவநரஸராஜாவுக்கறிவிக்க அவரும் தம்முடைய ப்ரபிதாமஹர்காலம் முதல் நடந்துவருகிற ப்ரகாரம் ராமாநுஜதயாபாத்ரம் நடத்திவரும்படி ஶாஸநம் பண்ணுவித்தாரென்று சொல்லுவார்களிறே. பின்பு ஸம்ப்ரதாயாசார்யர்களுக்கும் தேசிகனு திருவாராதனத்துக்கும் ராமாநுஜதயாபாத்ரதித்யாதிகளுக்கும் விரோதமாய் ஸர்வஜநவிதிதமாய் மணவாள மாமுனி நியமனத்துக்கும் விரோதமாய் அவர் விக்ரஹத்தையும் ஸ்தாபித்து ஸ்ரீசைலேசதயாபாத்ராதியான சிலவற்றைச் சொல்லவேணுமென்று ப்ரதிபந்தி பண்ணி அந்த ப்ரதிபந்தியால் திவ்யதேசங்கள்தோறும் கோஷம்பண்ணிவருவதால் ஸமஸ்தாசார்யாபசாரம் அவர்களுக்கு ஸித்திக்கிறதுமன்றி ராமாநுஜதயாபாத்ரம் சொல்லி திவ்யதேசகோஷம் பண்ணுவதாக வடகலையார்பேரில் தோஷமும் சொல்லுவதாலும் அவர்களுக்கு நிஸ்ஸம்ஶயமாக ஸர்வோத்தம பாகவதவிஷயாபசாரமும் ஸித்தித்திருக்கிறது நிஸ்ஸந்தேஹம்।

அஷ்டாவிம்ஶப்ரஶ்நோத்தரவிஷயம்।

---

அநந்தாசார்யாதி வரதராஜஸ்வாமி பெருமாள் கோயிலில் திருமலைதாதாசார்யர் திருமாளிகைக்கெழுந்தருளி இந்தக்கச்சிப்

பதினெட்டு திருப்பதிகளிலேயும் ப்ரபந்தாதியில் ராமாநுஜ தயாபாத்ர அநுஸந்திக்கும்படி செய்யவேணுமென்ன திருமலை தாதாசார்யர் ஸௌம்யராமாநுஜ அய்யங்கார் நாளில் துடங்கி நடந்துவருகிற ஸ்ரீஶைலேஶதயாபாத்ர தனியனை ஸகலக்ஷேத்ரஸ்வாமியான தாததேஶிகனும் நடத்தி ஜீயருக்குத் தனிக்கோயிலுங் கட்டிவைத்திருக்கிறுராகையால்நாமதை விரோதிப்பதில்லையென்ன வரகவிஜீயரும் வடத்தையுடைத்து ஶபிக்க திருமலை தாதாசார்யரும் பேரருளாளருடையவும் பெரியஜீயருடையவும் க்ருபையினால் நிர்வாஹகராய் பதினெட்டுத் திருப்பதிகள் முதலான ஸ்தலங்களில் ஸ்ரீஶைலேஶதயாபாத்ரத்தனியனை நடத்திவந்தாரென்றும் ஸர்வஸ்வாமியான தாததேஶிகர் சதிராகவாழ்ந்திடுவீரென்று உபஶ்ருதிகொண்டு ஜீயருக்குத் தனிக்கோயில் கட்டுவித்தாரென்றும் சொல்லுவது ஸஜ்ஜநோபஹாஸ்யம். எங்ஙனேயென்னில் ஜீயர் ஸந்நிதியிலே தம்முடைய விக்ரஹமும் ஸ்ரீஶைலேஶதயாபாத்ரமும் வேண்டாமென்று நிஷேதித்ததனால் அன்றுமுதல் இல்லாதிருந்த தனியன் கோயிலழகியமணவாளஜீயர் ஸௌம்யராமாநுஜய்யங்கார் நாள்முதல் நடந்துவந்ததென்றபோதிலும் தாததேஶிகரால் தனிக்கோயிலுமுண்டாயிற்றென்பதுவும் ஸாதாரணஸம்மதமிறே. உபஶ்ருதிகொண்டு கட்டுவித்தாரென்பதால் உத்தேஶ்யமல்லவென்றும், ஆகிலும் ஸாதுஸம்ப்ரதாயத்தால் இதராளுக்கும் ப்ரதிஷ்டாபநம் பண்ணுமாப்போலே இதுவுங் கட்டிவைத்தாரென்றாலும் பூர்வபக்ஷம் சொன்ன தோஷம் பரிஹரிக்கப்படுவதில்லையிறே. இன்னமும் பதினெட்டுக் கோயிலென்று புராணங்களிலும் அருளிச்செயல்களிலும் ப்ரஸித்தமானபோதிலும் ஸ்ரீபாஷ்யகாரர் காலந்தொடங்கி நாளதுவரையிலும் பதினெட்டு விஷ்ணுஸ்தலங்களில் எம்பெருமான்களுக்கு திருவாராதநம் நடத்தவில்லாமையாலும் நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் ஸ்ரீஶைலேஶதயாபாத்ர அநுஸந்திக்கும்படி பெருமாள் நியமித்தாரென்பதுபோல் தாதாசார்யர் பதினெட்டுத் திருப்பதிகளிலும் நடத்திவந்தாரென்பதும் ப்ரத்யக்ஷபாதிதமாகையால்

இதுபோலவே கோயிலழகிய மணவாளஜீயர் ஸ்வயமாசார்யராமா நுஜய்யங்கார்நாள்முதல் நடந்துவந்ததென்றதும் அஸத்யமெ ன்றுசொல்லத் தடையில்லையிறே. துருஷ்கோபத்ரவங்களாலே பெருமாள் உடையார்பாளய மெழுந்தருளியிருக்கும்போது ராத்ஸோ மோருன் என்கிற வ்யாபாரி வாஹாவிடத்தினின்றும் ஸ்வர்ணத த்ரவ்யங்களை அபஹரித்துக்கொண்டோட அவர்களும் பின் தொடர்ந்தோடிவர ஆபந்நிவ்ருத்த்யர்த்தம் ஸந்யாஸி யென்று காஷாயத்தைத் தரித்துக்கொண்டு ஆத்தான் ஜீயரென்று பேரும்வைத்துக்கொண்டு கோயிலிலே சென்று ராஜகீயர் திரும்பினவளவிலே தான் தென்கலை உகப்ரவிஷ்டரா கையாலே அழகிய மணவாளன் திருமுற்றத்திலே ஸ்ரீசைலேச த்யாதி தொடங்கி நித்யாநுஸந்தாநத்தையும் சொல்லவேணு மென்ன அங்குள்ளவர் பெரியபெருமாள் திருவுள்ளமில்லை யெ ன்று விலக்க ஸக்ரோதநாயராய் அங்குநின்றும் பெருமாள்கோ யிலுக்குவந்து உடையார்பாளையத்தில் பெருமாள் எழுந்தருளி யிருப்பதைக்கொண்டு அப்போது திவானாயிருந்த லாலாதொண் டர் மல்லுவை ஸ்வவசம்பண்ணிக்கொண்டு உடையார்பாளையம் போய் திருமலை தாதாசார்யரையும் வசப்படுத்திக்கொண்டு ஸ்ரீ ஸந்தாஷத்து ஸாமர்த்யமாய் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொ ண்டு வருகிறவளவில் ஸாமர்த்யத்தில் ஒருநாள் நெடுங்காலமாய் நிர்விஷயமாய் நடந்துவருகிற ராமாநுஜதயாபாத்ர மென்கிற தனியனைத் தடுத்து ஸ்ரீசைலேசத்யாதியை நடத்த அவ்வளவி லே ஸ்வஜனம்நேரிட உள்ளரவந்தவுடனே அஸநிவல்லி ஆசாரிய பண்டிதன் நாளிலே அவனைக்கொண்டு வடகலையாரை மேலே யேற்றி திருவடிகளிலே எந்தரமூடிகளைக் கட்டிவைத்து உபத்ர வித்துக் கையெழுத்துப்போடச்சொன்னவளவிலே அதிப்ரவி ஷரான அரசாணிபாலை வேங்கடாசார்யர் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர வம்சஜேவம்ச வாதிந்ருஹிவ தத்ர ஸாதீக்ஷ்ணஸ்தூணாதிவா யர்நாத்ரி | யஜஹநிமஜ்வசோபாதேசிகேந்த்ர ஸ்யவத்யம் ந்யாரண உநவஹ்ருத்யம் ஹஞநிபத்யஸாயமநு என்றும் வராகாகா ஸாரோஹம்ஸ்வா த்ல நதேசலேவீஜயக| ஸத்யதாதா ஸாரோ

ஹஸ்தா காஞ்சீதேசவாஸீபக என்றும் ஸ்நாயீந்த்ராதபாவா
யந: ஸயநாயீந்த்ரவ்யாஹ்ருதி: ஶ்ருதாநுமிஶ்ரவாக்யாயீந்த்ர
ஶேஷாஶேஷவாயிந்த்ரோநாவபம் என்றும் இப்படி அநேக ஶ்லோ
கங்களும் சொன்னாரென்றும் ஸதிவ்யஸித்தமிறே. ஆகையால்
தஸ்வமவந்ம் பெருமாள்கோயிலிலேயும் திருமலையிலும் ஸ்ரீஶை
லஶ த்யாதிவத்யமில்லை யென்கிறது ஶூஷும், நூதனமாகை
யால் அதை நடத்தினார்களென்று ஸ்நாயீந்த்ரவத்யாயீந்த்ர ஸயநா
யீந்த என்றவைகளினால் ஸ்ரீஶைலஶ த்யாதி நூதனமென்பது
ஸ்யஸ்லஷ்டமிறே. இன்னமும் ஸலீ - ௲௬௦௯ சாலீ - களஉஉ
வதான பளத்ரிஸம்வஸ்தரத்தில் காஞ்சீதென்கலையார் வ்யாஸர்க்க
ளிடத்தில் எழுதிக்கொடுத்த வதிஜேஷயிலே அதுக்குமுன்
௯௦ - வருஷகாலமாய் ராமாநுஜ ஸ்ரீஶைலஶ இந்த இரண்டும்
நடத்தவில்லையென்று எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். இதனால்
திருமலை தா.தாவாயந்ராலும் ஆழ்வாராசாரியாள் ஸன்னிதிக
ளிலும் வேதாந்தாசார்யர் ஸன்னிதியிலேயும் பஹுநாளாய் ஸ்ரீ
ஶைலஶ த்யாதி நடத்தப்பட்டு வருவதென்று சொன்னது ஸத்ய
ஸம்ஜியேய என்பது ஸ்யஸ்லஷ்டமிறே. இப்படி தேஶிகரு
காலந்தொடங்கி நடந்துவருகிற ராமாநுஜ த்யாதி தனியன்களை
மறுக்க வுடன்பட்டவர் ஸங்கதியில் "அவ்வபவாரதோஷாநு
ஸவம் ஸத்யாவிஜமக வ்யஸித்தமாயிருக்க பெரியஜீயர் க்ருபை
யினாலே நிதந்தம:வராய்த் தழைத்தாரென்பதுபோலவே இவர்
களை திஹ்யங்களா யிருக்குமென்று ஸ்யஷ்ஸ ரறிவர்கள். ஸயோ
த்ய ராமாநுஜய்யங்கார் பித்தரென்பது வ்யஸித்தமிறே.

ஸஷோநத்ரிம்ஶப்ரஶ்நோத்தரவிஷயம்|

---

ஸநஷம் வடகலை தென்கலை ஐத்யாதி கலையென்கிறது-
விஶேஷ்யம் தென்கலை த்ராவிடவிஶேஷ்யம் வடகலை ஸம்ஸ்க்ருதவிஶேஷ்யம்
ஆகையால் தென்கலையென்று ஆறாயிரப்படி முதலான வ்யாக்யா
நங்களையும் வடகலையென்று ஶ்ருதப்ரகாஶிகா ஸ்ரீபாஷ்யாதிகளை

யும் வ்யவஹரிப்பதால் தத்ஸம்பந்தத்தாலே ஆழ்வான் பட்டர் முதலானாரை தென்கலையாரென்றும் பெரிய அம்மாள் முதலானாரை வடகலையாரென்றும் இருவர்க்கும் உபயவேதாந்தகம் இருக்கச்செய்தேயும் ஸம்பந்த ந்யாயத்தாலே தென்கலையார் வடகலையாரென்று வ்யவஹாரமிருக்கிறதென்றும் க-தென்னுவாயடியாள் வடவாவாயடியாள் என்று ஸரீக்ஷக வ்யவஹாரமென்றும் ஒ-- ராமானுஜனோடே கூடின திருமண்காப்பு ஸ்ரீ[illegible] ஸ்வாமி ஸூக்தியும் உடையவர்கள் தென்கலையார் ராமானுஜனிழந்த திருமண்காப்பும் ராமானுஜஸ்வாமி ஸூக்தியு முடையவர் வடகலையாரென்றும் வ்யவஹாரமென்றும் இதில் பிள்ளான் முதலான ஸமஸ்தர் ஸம்ப்ரதாயத்துக் கனுகுணமாகவும் ஸத்வஸம்பந்தமான ஸமாஸ்ரயணங்களை ஸம்ஷித்துக்கொண்டும் ஸ்ரீபாஷ்ய விஷயத்தில் வேதாந்தாசார்யானுகுணமாக நடந்துகொண்டு ஸ்ரீராமானுஜஸ்வாமி அவர் தனியனையும் ஸந்தானஸம்யித்துக்கொண்டு போதருகிறவர்கள் தென்கலையாரென்றும் அதுக்கு விபரீதமாக நடப்பவர்கள் வடகலையார் என்றும் அப்படி நடப்பது அவர்களுக் கனுசிதமென்றும் எழுதியது ஸநாதனோசித விஜ்ரும்பிதம்| விசார்யமாண ந்யாயத்துக்கு தென்கலை வடகலை யென்று வ்யவஹாரங்கொள்ளில் ஐதிஹாஸ யாரணமாக [illegible] ப்ரஸங்கிக்கும். அது காணாமையாலே அப்படி சொல்லவந்தது ஸாஹஸம். ஸ்ரீபாஷ்யகாரர் செய்தருளின ஸித்தாந்த ப்ரவர்த்தகங்களான பத்து க்ரந்தங்களில் ஸ்ரீபாஷ்யம் முதல் கீதாபாஷ்யத்தளவான க்ரந்தங்கள் ஸம்ஸ்க்ருத ஸித்தாந்த ப்ரவர்த்தக மாகையால் வடகலையென்றும் கத்யத்ரயம் முதல் ஆறாயிரப்படியளவான ஐந்தும் ஸம்ஸ்க்ருத ப்ரவர்த்த ப்ரவர்த்தகமாகையால் தென்கலையென்றும் இப்படியேவ்யவஹாரம். இதற்கு ஸம்வாதம் ஸர்வஜ்ஞருள்பாட்டிலே காணப்படுகிறது. இதை த்ரிம்ஶத்ப்ரஶ்நோத்தரவாதியும் ஒப்புக்கொண்டும் ஸம்பந்தந்யாயத்தாலே ஆழ்வான் முதலானார்க்கு தென்கலையென்று வ்யவஹாரமிருப்பதுபோலச் சொல்வது ஸாஹஸம். ஸ்ரீபாஷ்ய

காரர் நியமனப்படி மேற்சொன்ன ஸம்ப்ரதாயபேதத்தையும் இன்றளவாக ஶாஸ்த்ரஸம்ப்ரதாயக்ரமத்தில் வடகலையார் அங்கீகரித்து வருவதால் ந்யாயமான வடகலை தென்கலை யென்கிற வ்யவஹாரம் உபயவேதாந்தாசார்யர் ரென்கிற ஸ்வாஸாதாரணமான திருநாமத்தை பெரியபெருமாளாற் பெற்றுள்ள தேஶிகனு ஸம்பந்தமுடையார்க்கே உரியதென்றும் ததிதரர்கள் ஸ்ரீபாஷ்ய ஸம்ப்ரதாயத்தில் தேஶிகஸம்பந்த முண்டாய் அவர் தனியனே அநுஸந்தித்து வந்தபோதிலும் ஆறாயிரப்படி ப்ரபந்தஸம்ப்ரதாயத்தில் தேஶிகனைத் தவிர்ந்தபடியால் ஸ்ரீபாஷ்யகாரர் நியமனத்தையும் ஆறாயிரப்படியையும் உடையவர்களல்லர் என்றும் இவர்களுக்கு ஸ்ரீபாஷ்யகாரர் நியமனமடியாகவந்த தென்கலைவ்யவஹாரமில்லையென்றும் வணகதேஶிகளென்றே வ்யவஹாரமென்றும் ஸுவ்யக்தஸ்பஷ்டமிறே. பிள்ளான் ஶிஷ்யரென்றதும் அவர்முதலாகவந்தது தங்கள் ஸம்ப்ரதாய மென்றதும் அயுக்தமென்று கீழே சொன்னோம். ஸவர்ணசதுர்வர்ணப்ரவேஶக்ரமமும் ஜாதிபேதமில்லாமையும் ப்ரவணலக்ஷணமாகச் சொல்லுமவர்கள் ஸ்ரீவைஶ்யகோந வர்ணாஶ்ரமதர்மங்களை அநுஷ்டிக்கிறதாகச் சொன்னது ஸம்ப்ரதாயவிருத்தமென்று ஶாஸ்த்ரஜ்ஞர் தெரிந்து கொள்வார்கள். சில ஜீயாள் இருக்கிறதாகச் சொல்லுமது பரிஹாஸகம். ஆகிலும் அவர்கள் நிர்ணீதரான எழுபத்துநால்வரில் அகப்பட்டவரல்லர் அந்த ஜீயாளென்னப்பட்டவர்களும் அந்தப்படி அன்றுமுதல் இன்றளவும் ஒருவழியாக நடந்துவருகிறவர்களல்லர். ஆனாலந்தந்த திவ்யதேஶங்களில் ஒரு ஸந்ந்யாஸி அந்தந்த காலங்களிலே யிருந்து இறந்துபோனபின் வடகலை தென்கலை ஸாதாரணமாய் அதுக்கு ஸம்மதித்தவர் அந்தந்தக் கோயில் தொழில்பார்க்க வருபவர்கள் ஒழிய அவர்கள் ஸ்ரீவாபர்க்க நிர்வாஹகருமல்லர். ஆகையாலதுகொண்டு ஒரு நிர்வாஹமும் இல்லையிறே. அப்படி வடகலையிலேயும் ஜமதாய ஸ்வாமித்வம் முதலானது அநேகமிருக்கிறது. இன்னமும் ஸ்ரீபாஷ்யார்த்தத்தில் வேதாந்தாசார்யர் திருவுள்ளப்படிக்கு நடக்கிறதென்றும் ஸம்ப்ரதாயார்த்தத்தில் தங்களாசார்யர்கள் சொல்படி

க்கி நடக்கிற தென்றும் சொல்வதால் அவர்கள் ஸம்ப்ரதாயங் கள் ஶ்ரீபாஷ்யாதி விருத்தமென்பது ஸ்பஷ்டமிறே. இதனால் மணவாளமாமுனி உபயவேதாந்தத்தையும் ப்ரவசநம் பண்ணி னாரென்று கல்பிதமாய் வ்யபதேஶித்தது அயுக்தமே. யுக்த மாகில் தேஶிகஸம்பந்தந்தவிர அவர் ப்ரவசநம் பண்ணின தில்லை யென்றும் அவரும் தேசிகன் திருவடி ஸம்பந்தப்பட் டவரென்றும் விருத்தமாகிறதினால் இவர்சொல்லவந்த வாக்யம் அஸம்பாவ்யமென்பது அத்யந்த ஸ்பஷ்டமிறே. ராமாநுஜனோடு கூடினவித்யாதி எம்பெருமானார் முதலானவர்களுக்கு ராமா நுஜ ஸம்ஜ்ஞிதமான திருமண்காப்பி னேகதேஶமில்லை யென் றும் ஆகையால் ததியாயக ப்ரமாணங்களுங் கிடையாவென் றும் ஸ்பஷ்டம். இன்னமும் ஶ்ரீஶைலதயாதி ஶ்லோக இந்தத் தனியனுண்டான காலத்துக்குப் பிற்பட்டதாகையால் இத்தோடு திருமண்காப் பேகதேஶத்தையுஞ் சேர்த்துச் சொல்லுவதால் இதுக்குப் பின்பு தான் ராமாநுஜ ஸம்ஜ்ஞமான திரும ணேக தேஶமுண்டானதென்றும் இதுக்கு முன் இந்த ஶ்லோகாம்ஶ மில்லையென்றும் இதுக்கு பிரமாணமாகக் கீழேசொன்ன முழு தும் கல்பிதமென்றும் அதுக்குமுன் தென்கலை யென்கிற பேதமே தமில்லையென்றும் ஹரிபாதாக்ருதியான வடகலைத் திருமண் காப்பே அநாதியென்றும் ஶாஸ்த்ர ஸம்மதமென்றும் ஶ்ரீராமாநு ஜாதி ஸதாசார்யாநுஷ்டாந ஸம்ப்ரதாய ஸித்தமென்றும் இந் தத் திருமண்காப்பை இழந்த அபசாரமு மன்றியில் இதை ரா மாநுஜ னிழந்த திருமண்காப்பென்று சொல்லுகிற மஹாப சாரமும் நவகதேஶிகளுக்கே ஸித்திக்குமென்றும் விருத்தமாகிற திறே. இன்னமும் ராமாநுஜ தயாபாத்ர ஶ்லோகத்தையுடைய வாள் வடகலையாரென்பதால் ராமாநுஜனுடையவர்களே வட கலையாரென்றும் இதுக்கு விரோதிகளான தென்கலையா ரென் கிற நவகதேஶிகளே ராமாநுஜனை யிழந்தவர்களென்றும் அத்யந்தஸ்பஷ்டமிறே. வடகலை அகோபிலமடத்தார் பெரியவாச் சான்பிள்ளை ஸம்பந்தப்பட்டவராய் இருந்து அவர் ஸம்ப்ரதாயத்

த்தைத் தவிர்ந்து ரஹஸ்யத்ரயஸாரத்யயத்தை அபிமானிப்ப து அநுசிதமென்றது அயுக்தமென்பதை முன்பே சொன் ேனாம். தேசிகத்தாரும் வரதாசார்யரும் ஷஷ்டிவாராம் தேச ஸாதி ஸம்பந்தப்பட்டபடியால் அவருக்குப் பரமாசார்யரான பெரியவாச்சான்பிள்ளை முதலான ஸம்ப்ரதாயத்தை திரஸ்கரி க்கிறது அநுசிதமென்பது ஸம்ப்ரதாயம் தெரியாமையாலே. அவருக்கு ரஹஸ்யத்ரயஸார மெவ்வழியால் வந்ததோ அவ் வழியாலே இன்றளவாக ஸம்ப்ரதாயம் நடந்து வருகிறது. இதில் குற்றஞ்சொல்லுவது அஜ்ஞானமூலமாகையால் அநாதர ணீயம். வேதாந்தாசார்ய ரருளிச்செய்த தாத்பர்யசந்த்ரிகை, விரோதபரிஹாரம் ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷை இதுகளில் நா யனார் நியதிவர ஸம்ப்ரதாய வக்தாக்களாகிற தாத்பர்யசந்த்ரி நிஷ்ர்களுக்கு ஸாக்ஷாத் வசனாபாமங்கூடாது. விஷ்வக்ஸே னாதமே தக்கதென்று வ்யுத்பாதிக்கப்படுகிறபடியால் தவிர்ந் தமாக ஆசரிக்கிற அநுசிதமென்றது அஸம்மதம். வேதம் நாலென்றும் ஸ்ம்ருதி பதினெட்டென்றும் ஆக்ஷேபமாக ஹேதி த்தாப்போலவும் ஸ்ரீவைஷ்ணவம் பாஞ்சராத்ரமென்று ஸாமான்ய வாக்ய மிரண்டுவகைப்பட்டாப்போலவும் அதிலும் நால்வகை யாய் உபதேசவாக்ய ஒன்றுயிருக்கச்செய்தே அபிமானிகள் அநே கராணுப்போலவும் தாத்பர்யசந்த்ரிகை அநேகவிதமாயிருப்பதே யன்றியில் வணக்ராந்தங்களில் வணக்கமா யிருப்பதி ல்லை. ஆகையால் அநேகமாக தாத்பர்யசந்த்ரிகைகளில் அபி மானிஹேதுத்தாலே விஷ்வக்ஸே வென்பதும் தாத்ர்யாபிமானி களிந்த யுகத்திலுண்டாகில் அவர்கள்விஷய மதுவென்றும் இதையறியாமல் குற்றஞ்சொல்வது அவர்களுக்கே குற்றமென் றும் ஸ்பஷ்டமாகிறது. அப்படியுண்டோவெனில் ஸ்ரீபாஷ்யகா ரர் கைங்கர்யத்துக்கு இலைத்தளிகை வேண்டியிருந்ததிலும் ஆ சார்ய பௌத்ரரான கூர்த்தாழ்வான் புழக்கடை தோட்டத் தில் வாழைஇலை அறுக்க அதினின்று அதில் இருந்து ஜலம் பெ ருகினதுகண்டு ஹாஹாப்ராணிஹேதாநி ஸவப்ராணிஹேதுஸ்ஸவ:|

ஸத்வஸம்பந்நஸ்ய மோக்ஷகாரணத்வநிஶ்சய:|| என்கிற ஞான த்தை யுடையவராய் உபேக்ஷித்துக்கிடக்க அதை ஸ்வாமி திருச் செவிசாத்தி ஆழ்வான் ஸ்வபாவம் அப்படிப்பட்டதென்று தா மெழுந்தருளித் தேற்றினுரென்று ப்ரஸித்தமாகையால் அப்படிப் பட்ட அதிகாரிகளுக்கு விஷயவஶ்யவென்றது திருமங்கைமன் னன் கைங்கரியத்துக்கு உசாத்துணையானவர்களுக்கு எந்நாளுங் குறைவில்லாத் தன்னடிச்சோதி கைங்கரியங்களைக் கொண்டு பார்த்தருள திருவுள்ளம்பற்றி அவர்களை ஓடத்தின் மேலேற்றி திருக்காவிரியில் கவிழ்த்துவிட்டாரென்றும் ஸ்ரீபாஷ்யகாரர் ஸம ஸ்திட்டுக்களை கற்காணத்தில் ஆட்டினுரென்றும் ப்ரஸித்தமாகை யால் அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு ப்ரத்யக்ஷவஶ்யவென்று தெரிந்துகொள்வதிறே. கிஞ்ச ஸ்ரீபாஷ்யத்தில் யாமவஶ்யவிஶ ஸத்துக்கு ஸம்ஶயமில்லை யென்று விஶஸநம் அந்த வஶ்ய விஷயத்தில் உபகாரகவ மென்றும் ஶ்ருதிப்ரமாணத்தைக் கொண்டு ஸ்தாபித்திருப்பது தெரியாமல் பிதற்றுவது ஔர்ஜ க்ருதியிறே.

## த்ரிஸத்வ ஸ்தோத்ரவிஷயம்||

திவ்யதேஶங்களி லெம்பெருமான் புறப்பாடு கண்டருளு கையில் ப்ரபந்தங்கள் முன்னும் வேதங்கள் பின்னும் அநு ஸந்திக்கப்படுவதற்கு வேதம் நால்வகையிருக்கு சில யஜுஸ்ஸா ஸ்ங்களைச் சொல்லி இன்னஞ் சில மூலாந்தர மிருப்பதாகவும் அவைகளை பூர்வர்கள் தாமே கண்டுகொள்ளும்படி யநு க்ரஹம் பண்ணிவிட்டதும் அஸம்மதம். அப்படிச் சொன்னல் புறப்பாட்டில் ஸேவிக்கப்படாத திருவாய்மொழிக்கு வேதவை திகஸங்கதி யில்லாமல்போக நேரிடலாம். அன்றியும் விரா டாவளியைப்போல் திவ்யப்ரபந்தங்கள் வைகல்பிகமாக ப்ர ஸம்கிக்கும். அன்றியும் திவ்யப்ரபந்தங்கள் ஸமஸ்த ஸ்தோத்ர ரூபமல்லவெனவும் சொல்லலாகும். பின்னும் ப்ரஶ்நங்களுக் குத் தரஞ் சொல்லவந்த இவர் பூர்வாக்களையே காரணாபாஸம்

கண்டுகொள்ளச் சொல்வது அயுக்தமென்றும் இதற்குமேல் அப்ருஷ்டோத்தரமாக ப்ரகீர்ணகமென்று சொல்லுவதால் இவர் வ்யாஜஸ்தாவகரென்றும் விஸ்பஷ்டமாவதிறே. ஆகையால் எம்பெருமான் ஆழ்வார்கள் ஆசாரியர்கள் என்ன திருவுள்ளம்பற்றியோ நியமித்து அன்றுமுதலின்றளவாக நடந்துவருவதே ப்ரமாணமாகக் கொள்ளவேண்டுவதேயன்றி அந்யவாக்யங்கள் சொல்லலாகாதிறே.

## இனிப்ரகீர்ணகநிராஸ:|

---

முப்பது ப்ரஶ்நம் பண்ணச்சொல்லி ஆள்படுத்தின இவர் ப்ரகீர்ணகப்ரஶ்நமொன்று பண்ணச்சொல்லித் தூண்டாமல் இப்போது அப்ருஷ்டோத்தரம் சொல்லப்புகுந்தது அத்யந்தஸாஹஸம். எப்படியென்றால் த்விதீயப்ரஶ்நோத்தரத்தில் மணவாளமாமுனி அவதாரம் கல்யப்தம் நாலாயிரத்து நூற்றெழுபத்தொன்றுக்குமேல் என்றும் சொல்லி இங்கே நாலாயிரத்து நானூற்றுப் பன்னிரண்டாவதென்றும் சகாப்தம் ஆயிரத் திருநூற்றுத் தொண்ணூற் றிரண்டாவதென்றும் சொன்னார். இந்த சகாப்தத்துக்கு கலிஸம் நாலாயிரத்து நானூற்றுஎழுபத்தொன்றாகிறது. இன்னம்தேசிகன் திருவவதாரம் ௧௧௯௨வது விபவஸம் என்றும் மணவாளமாமுனி திருவவதாரம் ஆயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றிரண்டாவது சாதாரணவருஷம் என்றும் சொன்னால் இவருக்கு எப்படி கணக்குச்சரிப்பட்டதோ அதை யுக்தஜ்ஞர்கள் தெரிந்து அபஹஸிப்பது. இன்னமும் ஆழ்வார்கள் ஆண்டாள் எம்பெருமானார் தேசிகன் நைனாராசாரியர் மணவாளமாமுனி ஆகிய இவர்கள் அவதாரவருஷங்களை எழுதியதுபோல பிள்ளைலோகாசார்யர் அவதாரவருஷத்தை எழுதாமலே அவர் இப்படி வேதாந்தாசாரியரைக் காட்டிலும் வயதிலும் அறிவிலும் பெரியவரென்று சொல்லுவது அஸம்பத்தமிறே. இந்தஅப்ருஷ்டோத்தரவாதி உபபாதிக்காமலே அவர் ஜந்மவ்ருத்தரென்றாலும் ஜ்ஞாநவ்ருத்தரென்பது அயுக்தமென்பதற்கு அவர்களின் க்ரந்தங்களே

ப்ரபாவகமாக ஐதிஹ்யஜ்ஞர் கொள்வார்களிறே. பன்னீராயிரந் திருமுடிக்காய்களில் ஸுதர்ஶந பட்டர் தம் குமாரரையும் ஶ்ருதப்ரகாஶிகைப் பட்டோலையையும் தேசிகன் கையில் கொடுத்தாரென்றும் தேசிகனும் 'ப்ரதிஷ்டாபித வேதாந்த: ப்ரதிக்ஷிப்த பஹிர்மத: | பூயாஸ்த்ரைவித்யமாந்யஸ்த்வம் பூரிகல்யாணபாஜநம்'|| என்கிற தம் ப்ராசார்யரான நடாதூரம்மாள் அநுக்ரஹப்படி இந்த விபத்திற்குத் தப்பி மேற்கே யெழுந்தருளி யிருந்து அபீதிஸ்தவ மங்களாஶாஸநஞ் செய்தருளி நம்பெருமாள் கோயிலேற வெழுந்தருளினபின்பு "ஶமிதவிபவதவக்ஷாம் ஶாஶ்வதீம் ரங்கலக்ஷ்மீம்" என்று மங்களாஶாஸநம் செய்தருளி நம்பெருமாளைக் கோயிலுக் கெழுந்தருளப் பண்ணுவித்த கோபணார்யர் விஷயத்தில் நம்பெருமாள் நியமனத்தால் 'நிஜயஶோ தர்ப்பணோ கோபணார்ய:' என்கிற ஶ்லோகத்தை அருளிச் செய்து சிலகால மெழுந்தருளியிருந்து ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாராதி க்ரந்தப்ரசாரமும் செய்தருளி அநேகம் ப்ரதிவாதிகளையும் ஜயித்து பின்பு திருநாட்டுக் கெழுந்தருளின ரென்று வைபவ ப்ரகாஶிகாதி க்ரந்தங்களில் ப்ரஸித்தமாகையால் இவர் சொன்ன கதை அபார்த்தம். இதுக்கு இவர்சொன்ன கணக்கு முதலானவைகளிலே உள்ள பூர்வாபர விரோதமும் ஸாக்ஷியாகுமிறே. இன்னமும் பெரியபெருமாள் கூரம்பிள்ளை வேதாந்தாசார்ய ரென்று அருளிப்பாடு ஸாதித்துக்கொண்டு வருகையால் ஸம்ஸ்காரங்களுக் கவகாசமில்லை யென்று ஸாபிப்ராயமாய் ஸம்ஸ்காரங்களை யின்னபடி யென்று வெளியிடாமல் ஸமாதானஞ் சொல்வது ஶங்கக்ஷீராஸ்வாதம்போல் ஆகிலு மிது அயுக்தம். எங்ஙனேயென்னில் கூரம்பிள்ளை வேதாந்தாசார்ய ரென்று ஆழ்வான் பிள்ளை வேதாந்தாசாரிய ரென்று தான் அருளிப்பாடு ஸாதிக்கிறது. ஆகிலு மிது தொன்றுதொட்டு நடந்துவருவதன்று. பிள்ளை நாயகன் ஒருவன் நாளையிலே தண்ணந்தோட்டம் கந்தாடை ஸ்ரீ ரங்காசார்யர் ஆழ்வானுக்கு எதிரியாய் முதலியாண்டான் விக்ரஹம் ப்ரதிஷ்டி

ப்பிக்கும்படி யத்தனிக்க அது கூடாதென்று ஹட்டர்வாள் தடு க்க வரவரமுநிஸத்தாலே சிலகாலம் நின்றிருந்து பின்பந்த விக்ரஹத்தை தொட்டாசார்யரால் ப்ரதிஷ்டைபண்ணி அது முதல் ஸகலதேஶிகவிஷயமாகையாலே வேதாந்தாசார்ய ரெ ன்று ஸாதித்துவந்த அருளிப்பாடு நடுவில் பிள்ளையென்று நுழை த்து ஆழ்வான் பிள்ளை வேதாந்தாசார்யரென்று உண்டு பண் ணினதேயொழிய ஆதிமுதல் பெரியபெருமாள் ஸாதிக்கிறதன்று. அல்லது அப்படியே யிருந்தாலும் இதனால் தொட்டாசார்யருக்கு உத்கர்ஷமும் வேதாந்தாசார்யருக்கு நிகர்ஷமும் சொல்ல விரகில்லை. உண்டாகில் இந்த அருள்ப்பாடு தொடக்கத்தில் திருநாவீறுடையரான கலியனிராமானுஜன் பட்டர்பிரான் பொ ய்கை பூதப்பேயார் சொன்ன பாணன் தொண்டன் திருமழிசை ஆழ்வான் பிள்ளை வேதாந்தாசார்யரென்று ஸாதிப்பதால் இவ் வரிசையில் இராமானுஜனுக்குப் பின்னிட்டுவரும் பட்டர்பிரான் முதலானர்க்கு நிகர்ஷமும் அவர்களைக்காட்டிலும் ராமாநுஜ னுக்கு ஜந்மஜந்மாந்தரம் உத்கர்ஷமும் சொல்ல நேரிடும். பின் னும் ஆழ்வாநாசார்யாள் தனிக்கோயிலுக் கெழுந்தருளும் போ து ஸ்ரீபாஷ்யகாரர் ஆழ்வானுக்குத் திருமாலை சாதிக்க பின்பு ஆழ்வானும் இரண்டு திருமாலைகளை ஸமமாக தேசிகனுக்கும் தொட்டாசார்யருக்கும் ஸாதிப்பதாலும் தேஶிகாபேக்ஷயாதொ ட்டாசார்யருக்கு உத்கர்ஷஞ் சொல்ல விரகில்லையிறே. பன் னீராயிரந் திருமுடிக்காய்க்கு முன்னே தொட்டாசார்யர் தேசி கன் ஸன்னிதியிலே ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களை ஸேவித்தாரெ ன்று ஜீயரீடுபாடு வைபவப்ரகாஶிகாதி க்ரந்தங்களிலே ப்ரஸித்தமிறே. பெருமாள்கோவில் முதலான விடங்களிலே இன்றளவாக தொட்டாசார்யர் விக்ரஹமில்லை. திருநாராயண புரத்திலே தொட்டாசார்ய ப்ரதிஷ்டைக்கு யத்தனம்பண்ணி அதனால் தேவாபசாரமுண்டாக அது அப்போது நடக்கா மல் நின்றுவிட்டது. ஆழ்வார் திருநகரியிலே எப்பிரியன் கலெக் டர்திவான் ராமஸ்வாமிநாயக்கனாலே தொட்டாசார்ய விக்ரஹம்

உண்டுபண்ணினார்கள். ஸஹஸ்ரகாலமாய் நடந்துவந்த தேசிகன் மரியாதைக்கு விரோதம் பண்ணிவருகிறார்கள். பட்ரீத்யாதி பட்டருக்கு வேதாந்தாசார்யபதத்தையும் ஸ்ரீஸூக்தி விஸ்தாரணபதத்தையும் உடையவர் ஸாதித்தாரென்பது அயுக்தம். ஏனெனில் பட்டா ஸ்ரயங்களில் ஸ்ரீரங்கராஜ திவ்யாஜ்ஞாயப்ரவேதாந்தாசார்ய பதஸ்ய வராஸராவர நாமதேயஸ்ய காசிஷ்ட என்று அருளிச்செய்கையாலும் அன்றுமுதல் இன்றளவாக வ்யாஸபராசர பட்டரென்றும் நம்பட்டரை வீடுவிட்டு வாவென்று அருளிப்பாடு ஸாதித்துவருகையாலும் வேதாந்தாசார்யரென்கிற திருநாமத்துக்கு ப்ரஸித்தியுங் காரணமும் காண்கிலோம். ஸ்ரீஸூக்திவிஸ்தாரணத்தை உடையவர் பிள்ளானுக்கு ப்ரஸாதித்தாரென்பது ப்ரஸித்தமாகையாலும் பிள்ளான் ஆச்சான் நடாதூராழ்வான் முதலானோர் ஸ்ரீஸூக்தியிலும் பட்டர் ஸ்ரீஸூக்தியிலும் தத்வவிஷயங்கள் ஒருமித்திருப்பதாலும் ஸ்ரீஸூக்திபரம்பரை ஒன்று தனித்துக் காணாமையாலும் இதுவும் அநர்த்தவசனமிறே. திருமலையிலே போயித்யாதி பெரிய ஜீயர் உபதேசைப்பட்டு தேசிகரு காலந்தொடங்கி அநுஸந்திக்கப்பட்டு வந்திருக்கிற ராமாநுஜதயேத்யாதி தனியனைத் தடுத்து ஸ்ரீசைலேசேத்யாதியைச் சொல்லயத்தனித்து அர்ச்சகர்களுக்கும் த்ரவ்யங்கொடுக்க அவர்களும் தவெவஷ்டபாலே சொல்ல அதனாலே அன்றுமுதல் அவர்களுக்கு ஸந்தானப்ராப்தி முதலானதுகள் இல்லாமல் போகும்படி திருவேங்கடமுடையான் ஸங்கல்பித்தாரென்று ப்ரஸித்தமிறே. ஆகையால் அவ்விடத்தில் சொன்ன வசனங்கள் அபஹாஸ்யங்கள். இப்படி விரோதித்தபோதிலும் ஸம்வத்ஸரப்ராயச்சித்தமாக தேசிகன் திருநக்ஷத்திரத்தில் ஸ்வாமி எழுந்தருளி ராமாநுஜதயாபாத்ரம் திருச்செவி சாத்தியருளி போரவுகந்து எழுந்தருளுகிற தொடக்கமுங்கண்டு ஸ்ரீசைலேசேத்யாதி நிஜமானால் அன்று சொல்லலாமே- அது காண்கிலோமாகையால் இதுக்கு முதலிற் சொன்ன வசனங்களும் அர்ச்சகாள் பரவசமாகச் சொன்னார்க

ளென்றும் பெருமாளுக்குத் திருவுள்ளமில்லையென்றும் சொல்லுவது அப்ராமாணிகமென்று ஸ்பஷ்டமிறே. ஸகலாசார்யர்களுக்கும் திருமலையடிவாரத்தில் ஸேவை ஸாதித்து ஸ்ரீபாஷ்யகாரர் மாத்திரம் அசேதனமாயருகி லெழுந்தருளியிருக்கும்படி திருவுள்ளம்பற்றினைப்போலவும், லௌகிகமான பத்திரிகை முதலானவைகளிலும் ராமாநுஜீயரென்று வ்யக்தி தெரியும்படிக்கு முதலில் ஸ்ரீமதே ராமாநுஜாய நம: என்று எழுதத் திருவுள்ளம்பற்றினைப்போலவும். ஐஹிகாமுஷ்மிக ஸாதகமான திவ்யப்ரபந்தத்தொடக்கத்தில் லக்ஷ்மீநாதேத்யாதி நடந்துவந்த குறைதீர ராமாநுஜதயாபாத்ரமித்யாதி தனியனை திருவேங்கடமுடையான் திருவுள்ளம் பற்றினரென்று பரமப்ராமாணிகர்களான பெரியோர்கள் அருளிச்செய்வார்கள். இன்னமு மிந்தத் தனியனுக்கித்யாதி அஸ்மிந்ஸந்நிவேஶ இத்யாதி கீழே சொல்லியிருப்பதால் ததேதத்தரம். இந்தத்தனியனை நம்பெருமாள் அபிப்ராயத்தாலே வானமாமலை ஜீயரும் பட்டர்பிரான் ஜீயரும் க்ரமேண ஸ்வாசார்யவாக்யத்தையும் கோயில் கந்தாடையண்ணன் உத்தராசார்யத்தையும், ஏகஶ்லோகந்யாயத்தாலே மானஸமாகக்கொண்டு சாத்துமுறைகாலத்தில் வெளியிடவிருக்க அந்தவேளையில் நம்பெருமாள் பாலனாய்வந்து சொல்லிமறைந்ததனால் மூவராய்ச் செய்ததென்றும் நம்பெருமாள் செய்ததென்றும் இதுக்கு பஹுகாலம் முன்னே பதரிகையில் அயோத்யா ராமாநுஜய்யங்காருக்கு அந்த வெம்பெருமான் ஸ்வப்நத்தி லுபதேஶித்தாராகையால் பதரி நாராயணன் செய்ததென்றும் இப்படி கர்த்ருஹேதுநிர்தேஶம் உபபந்நமென்று சொன்னது அஸம்பாவ்யகல்பனை. ஒரு சுலோகத்தை மூவராய் ரசித்துச்சொல்லும்போது ஏகஶ்லோகந்யாயங் கூடாதென்பது அத்யந்தஸ்பஷ்டம். ஆகையால் ஸமுதாயாபிப்ராயம் மூவருக்கும் நன்றாய்த் தெரிந்தது காண்கிலோம். உண்டாகில் அவர்களாலேயே வ்யபதேஶம் பண்ணலாமே. அப்படிக்கன்றியில் உத்தராதிநத்தில் ஸாமஜ் ஸமக்ரமாகச் சொன்னதாகச் சொல்வதால் வக்த்ருத்வம் மூவருக்கும் வ்ய

வஸ்த்ரஸம் வாயனுக்கு மென்று காண்கிறது. ப்ரகாராந்தரஸம்வ வத்ஸரம் வடிவியில் இந்தத் தனியன் வெளிப்பட்டதாகச் சொல்லு கையாலே முன்சொன்ன இரண்டுந் தள்ளுண்டதுகள் என்பது ஸ்பஷ்டம். மூன்ருவதான இதுதான் நிலைக்குமோவென்ருல் அங்கே இதுண்டாவதற்குக் காரணமொன்றும் காண்கிலோம். ஆதலால் மூன்றுபக்ஷமும் அநுபபன்னமென்பது ஸ்பஷ்டமிறே. கி.வ ஜீயருக்கு முன்னே இந்தத்தனியனுண்டானதாய் காணப்படுவதால் ஸத்ஸம்ப்ரதாயஸ்த மென்பது ஸ்பஷ்டமிறே. ஆனல் இவ்விடத்தில் ஒரு ஶ்லோகம் ஸம்ஸ்க்ருதம்மாகச் சொல்லுந்திறமில்லாத மூவராய்ச் சேர்ந்து இதில் மணவாள னென்பதற்கு வரவரயமென்று ஜாமாத்ருபதத்தைக் கூட்டி இந்த ஶ்லோகமிசைத்து ப்ரஸம்கேதஸ்தர்களுக்களான தம்மைப்போன்றவர் கோஷ்டியில் மெச்சத்தக்க இந்த வைசித்ர்யங்களைக் கல்பித்தாரென்பது நிஸ்ஸம்ஶயமாகக்காணப்படுகிறது. ஸயோத்யா ராமாநுஜ னென்பவன் ராமதேவராய னென்கிற ராயன் விபத்தாவஸ்தனுகி ராஜ்யத்தை யிழந்து தேஶாந்தரகதனுகி ஸ்வஶிஷ்யவர்க்க முதலானது ஸம்வஹித்து இந்த தேசங்களில் சிலபேரைச் சேர்த்துக்கொண்டு சில யத்னங்களைப் பண்ணினனென்றும் ஆகிலும் விபத்தஶாவத்தாலே சிலநாள் தென்கலையென்றும் சிலநாள் வடகலையென்றும் இப்படிக்கு ஸந்திக்தனுய் இருந்தானென்றும் இவன் கண்ட இடங்களில் தென்கலை வடகலைத் திருமண்காப்புகளை இடித்தழித்தானென்றும் ஒருவிடத்திலேயும் இவன் யத்னம் நிறைவேறின தில்லையென்றும் சொல்வார்கள். ஆகையால் இப்படி ஸஸம்ப்ரமமான அநேக ப்ரவ்ருத்திஷ்யங்களை கல்பித்து ஶாஸ்த்ரார்த்தங்களையும் ஶ்ரீ ஸம்ப்ரதாயத்தையும் நிலைப்பிக்க வேணுமென்று திவ்யதேஶங்களிலே த்வேஷநக்ஷேத்ரஹம் பண்ணுகிறவர்கள் வடகலையேலிக ளென்பது ஸ்பஷ்டமிறே. ஆதலாலிந்த ஸஸம்ப்ரதாயஸ்தர

வாதியினது தூஷணங்களை ஆபாதமாக நோக்காமல் பெரியோர்கள் அந்த வாக்கியங்களிலுள்ள ஸ்வாரஸ்யத்தைத் திருவுள்ளம்பற்றித் தெரியாதவர்களுக்குந் தெரிவித்தருள வேண்டுமென்று அனந்தமானதெண்டன் ஸமர்ப்பித்துப்ரார்த்திக்கிறேன்.

ஆழ்வாரெம்பெருமானர் தேசிகன் திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்வஸ்தோத்ரகண்டனம்

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:|

ஸ்ரீராமாநுஜயோகீந்த்ர தர்சநப்ரவணாத்மநாம்|
வாதாஜ்ஜயோ ஸ்வதஸ்ஸித்தச் சர்வேஷாமபி ஸர்வத:॥

பழநடைவிளக்கமெனப் பொய்ப்பெயர்கொண்ட ஒரு கிரந்தம் அச்சிடப்பட்டு த்ரிம்சத்ப்ரச்நோத்தரத்துடன் சேர்த்துக் க்கட்டப்பட்டிருக்கிறது. இந்த க்ரந்தகர்த்தாவின் முக்யமான உத்தேச்யம் ஸத்ஸம்ப்ரதாயதூஷணமும் துஸ்ஸம்ப்ரதாய ரக்ஷணமுமே இந்த அபிப்ராயத்தை த்ரிம்சத்ப்ரச்நோத்தரவாதியாயிருந்து வெளியிட்டும் த்ருப்திபெறாமல் பழநடைவிளக்குவதாகத் தொடங்கி முன்சொன்ன புஸ்தகத்தில் சொன்னவைகளுடன் பின்னுஞ்சில கற்பனைகள் கோத்திருக்கிறார். த்ரிம்சத்ப்ரச்நோத்தரத்திலுள்ள அநேகவித ப்ரஸ்தாவங்கள் தத்கண்டநத்தினால் மத்தியஸ்தர்களுக்கு ஸ்பஷ்டமாயினவன்றோ அதிலில்லாத சில அநேகவித கல்பனைகள் இதிலிருப்பதால் இவைகளின் அஸாங்கத்தியத்துக்கு வேறொரு ப்ரமாணந்தேட வேண்டிய அவசியமின்றி இதிலுள்ள பூர்வோத்தரவிரோதங்களைப் பெரும்பாலும் காட்டுவதால் இதற்கு "பழநடைவிளக்க"மெனல் பொருந்தாதென்று மத்தியஸ்தரான பெரியவர்கள் திருவுள்ளம் பற்றும்பொருட்டு அடியேன் கிஞ்சித் எழுதத்துணிந்தேன். சிறியேன் சொற்களிலுள்ள அபப்ரம்சங்களுக்குச் சீற்றங்கொள்ளாமல் வத்ஸலர்களான ஸாதுக்கள் அநுக்கிரகித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இதில் முதல் I7-வது பக்கம் வரையிலும் பின்பு சிலவிடங்களிலும் சிலசில ஸம்ப்ரதாயஹேளநங்களுண்டாயிருந்தாலும் அவைகளை அதிக விரோதமில்லாமையால் எடுத்துரைக்க அவசியங்கொண்டிலோம். அன்றியும் அவை பெரும்பாலும் த்ரிம்சத்ப்ரச்நோத்தரவசந தூஷிதார்த்தங்களாகின்றன. I8-ம்பக்கத்தில் 'திருக்கச்சி நம்பி உடையவர் திருமாளிகையில் அமுதுசெய்ய எழுந்தருளி அந்தஸமயத்தில் உடையவர் அங்கில்லாமையால் தமக்கு சீக்ரமாகப் போகவேண்டியிருப்பதாகையால் உடையவர் தேவியாரை அமுது பரிமாறச்சொல்லி அமுது செய்து போய்விட்டதாகவும் பின்

உடையவர் தேவியார் நம்பி உச்சிஷ்ட பாத்திரத்தைத் தள்ளி ஸ்தலத்தைச் சுத்திசெய்து நீராடினதாகவும் சொல்லியிருப்பது வரம்பழிக்கவேண்டிக் கட்டின ஐதிஹ்யமென்பது ஸ்பஷ்டமிறே. ஆனால் நம்பி உடையவர் திருமாளிகைக்கெழுந்தருளி உடையவருடன் ஸல்லாபஞ்செய்தருளிப்போனபின் உடையவர் தேவியார் நம்பி எழுந்தருளியிருந்த ஸ்தலத்தை ஸாமாந்ய வர்ணத்தவரிருந்த இடம்போல் சுத்திசெய்ய அதற்காக உடையவர் திருவுள்ளங் கலங்கிற்றென்று ஸம்ப்ரதாயக்ரந்தத்தில் கண்டிருக்கிறோம். இன்னமும் ஒருநாள் திருக்கச்சி நம்பி உடையவர் திருமாளிகையிலிருந்து செல்லும்போது உடையவர் தண்டன் ஸமர்ப்பிக்க செய்தருள நம்பியும் ஆளவந்தார் திருவடி ஸம்பந்தம் பெற்ற நாம் வர்ணாச்ரமவிரோதம் செய்ய வொண்ணாதென்று மறுத்தெழுந்தருளிவிட்டாரென்றும் ஐதிஹ்யமிருப்பதால் அப்படிப்பட்ட நம்பிகள் உடையவரில்லாத ஸமயத்தில் அமுது செய்தாரென்றும் உச்சிஷ்ட பாத்திரத்தை உடையவர் தேவிகள் எடுக்கும்படி வைத்துப்போனாரென்றும் சொல்வது ஸுதராமஸம்மதமிறே. (உ௩ - உ௪- பக்கங்களில்)

திருக்கோட்டியூர் நம்பி உடையவரை திருமாலையாண்டான் பக்கல் திருவாய்மொழிப்பொருள் கேட்க நியமித்ததனால் அங்ஙனம் நடவாநிற்கச்செய்தே திருமாலையாண்டானுரைக்கும் பொருளை மறுத்துச் சில பாசுரங்களுக்கு உடையவர் தாம் வேறு பொருளுரைக்க திருமாலையாண்டான் அதை விசுவாமித்திர ஸ்ருஷ்டியிது ஆளவந்தார் பக்கல் கேட்டிலோமென்று சொல்லி காலக்ஷேபத்தைத் தவிர்க்க, பின்பொருநாள் திருக்கோட்டியூர் நம்பி காலக்ஷேபவிஹதியைத் தெரிந்து 'உடையவர் சொன்ன அர்த்தங்கள் ஆளவந்தார் பக்கல் நாம் கேட்டவையேயன்றி நூதந ஸ்ருஷ்டியல்லவென்று திருமாலையாண்டானுக்குச் சொல்லி மீளவும் காலக்ஷேபம் நடக்கும்படி செய்ய மறுபடியும் முன்போலவே ஆண்டானுக்கு முடையவருக்கும் ஒரு பாசுரப் பொருள் விஷயத்தில் விவாதம்வர அப்போது உடையவர் ஆளவந்தார்கருத்து எனக்குத்தான் தெரியுமென்று சொல்ல ஆண்டானும் இவரொரு அவதார விசேஷமென்று அவருக்கு ஸம்ப்ரதாயத்துப் பின்பு அவருக்கு அவ்விசேஷமான காலக்ஷேபம் ஸாதித்து திருவாய் மொழிப்பொருளான ஸமஸ்தவிஷ

யத்தை பூர்த்திசெய்தருளினர் என்றது ஐதிஹ்யஸம்மதமென்பது ஸ்பஷ்டமிறே. அதெங்ஙனேயெனில், தம்மிடத்தில் திருமந்த்ரார்த்தங்கேட்கவந்த உடையவரைப் பரீக்ஷார்த்தமாக மற்றொருதடவை வரும்படி சொன்ன திருக்கோட்டியூர் நம்பி அவர்விஷயத்தில் பரீக்ஷைசெய்தல் பெரியபெருமாளுடைய திருவுள்ளத்துக்கிசையாததென்றறிந்த பின்பும் அவரைப் பலமுறை நடப்பித்து பரீக்ஷித்தே ஸம்ப்ரதாயம் ஸாதித்தாரென றிதிலேயே எழுதியிருக்கிறதன்றோ. அப்படிபோல் ஆண்டானும் உடையவருடைய பாஹ்யவைராக்யத்தைப்பரீக்ஷிக்கக் கருதிஞுவாததஃ ஸ்வாரஸ்யம் தோன்றுவதுபோலுள்ள சில ஸ்தலங்களில் தாமொரு ப்ரகாரமாக ஸ்வாஶயமுரைத்து அவற்றுக்கு உடையவர் ஸம்ப்ரதாயங்களைக் கண்டுரைக்க அதனால் திருவுள்ளமுகந்தருளினரென்றால் அவர் உடையவருக்குத் திருவாய்மொழிப் பொருள் முழுதும் காலக்ஷேபம் ஸாதித்தாரென்பது தகுமா? உடையவருக்கு ஆசார்யரான தாம் தெண்டன் ஸமர்ப்பிப்பரா? இதை மத்தியஸ்தர் விமர்சிக்கக் கடவது. இன்னும் திருமாலையாண்டான் திருவாய்மொழிப் பொருளுரைப்பதில் சிறந்தவரென்று கண்டன்றோ திருக்கோட்டியூர் நம்பி அவரிடத்தில் திருவாய் மொழிப் பொருள் கேட்கும்படி உடையவருக்கு நியமித்திருப்பர். ஆளவந்தார் அருளிச்செய்த அர்த்தங்களை நெஞ்சில் பதிக்கமாட்டாத ஆண்டான் தன்மையைத் திருக்கோட்டியூர் நம்பி கண்டுகொள்ளாதவராயிருப்பரா? இப்படி பூர்வாசார்யர்கள் பக்கல தோஷாதோஷாவிஷ்கரணம்பண்ணும் ஆதுநிகைதிஹ்யங்களை மெய்யென்று நினைப்பது அயுக்தமிறே. உடையவருக்குத் திருமாலையாண்டான் தெண்டனிட்டிருந்தால் யாதவப்ரகாசர் நியாயமாக ஶிஷ்யாசார்யபாவம் மாறியன்றோ இருக்கும். அப்படிக் காணகிலோமே (உச-ம் பக்கத்தில்) திருக்கோட்டியூர் நம்பி உடையவர் மாதுகரத்தில் விஷங்கலக்கப்பட்ட செய்திகேட்டெழுந்தருள எதிர்கொண்டு சென்ற உடையவர் திருக்காவேரிமணலில் தெண்டன்ஸமர்ப்பிப்பவராய் விழுந்து நம்பி, எழுந்திருமென்று சொல்லாமையால் அங்ஙனே கிடக்க கிடாம்பியாச்சான் பரிந்தெடுத்தாரென்றது ஸக்ருத்ப்ரணாம நிஷேதகவாக்யஸங்கேதத்துக்கு பலமுண்டுபண்ண நினைத்துக் கட்டின ஆதுநிகை

திஹ்யமென்பது ஸுஸ்பஷ்டமிறே. இல்லாவிடில் ஆசார்ய ப்ரணாமகாலங்களில் ஆசார்யர் உத்திஷ்டேத்யாஜ்ஞை செய்யுமளவும் சிஷ்யர் விழுந்துகிடக்கிற அநுஷ்டானமிப்போதுமிருக்கவேண்டுமே; அப்படிக் காண்கிலோம். ஆனால் இவ்விடததில் உடையவர் வெய்யில்வேளையில் பலமுறையுந் தெண்டனிட நம்பிஅமையுமென்னுமையால் ஆச்சான் பரிந்து தடுத்தானென்று ஸத்ஸம்ப்ரதாயக்ரந்தத்தில் கண்டிருக்கிறோம். (௨௮-ம்பக்கத்தில்) சிறிய கோவிந்தர் பிள்ளைக்கு "பராங்குசநம்பி" என்று திருநாமஞ்சாத்தி ஆளவந்தாருடைய மூன்றுவது கருத்தை பூரித்தாரென்றது ஸம்பிரதாயம் தெரியாமையாலோ பிள்ளான்விஷயத்தில் அஸூயையாலோவன்றி உள்ளபடியன்றென்று கண்டுகொள்வது. (௫௯-வது பக்கம் கடைசியில்) சகவருஷம் 1012க்குமேல் பஹுதான்யஸம்வத்ஸரமென்றது கணக்குக்கு விரோதமென்று கண்டுகொள்ளக்கடவது. திருநாராயணப் பெருமாள் உடையவருக்கு ஸ்வப்நத்தில் ஸேவை ஸாதித்து யதுகிரிக்கு வாருமென்று நியமித்தருளினாரென்று முன்னே சொல்லி அடுத்தபக்கத்தில் இப்படி யதிராஜர் ஜீர்ணோத்தாரணஞ்செய்ததனால் அந்த திவ்யதேசத்துக்கு 'யதுகிரி' என்று திருநாமமுண்டாயிற்றென்றது பூர்வோக்தவிருத்தமென்று தெளியக்கடவது. இந்த ௫௧-ம் பக்கத்தில் உடையவர் பட்டருக்கு வேதாந்தாசார்யரென்கிற திருநாமஞ்சாத்தினாரென்கிற வாக்கியங்கண்டோமேயன்றி மற்றேந்த கிரந்தத்திலுமிதுகண்டிலோம். அங்ஙனமுண்டானால் பட்டர் ஸ்ரீஸூக்திகளிலாவது தச்சிஷ்யவர்க்கரா ஸ்ரீஸூக்திகளிலாவது ப்ரஸங்கமாயிருக்குமே. இந்த ஏகதேசிகளும் வேதாந்தாசாரியரென்று நம் தேசிகனுக்கே அஸாதாரண நாமமாக வ்யவஹரிக்கிறார்களன்றி பட்டருக்கு வ்யவஹரிப்பதில்லையே. இப்படி பட்டருடையஜ்ஞானவைபவத்தைக்கண்டு உடையவர் ஸாதித்தருளின திருநாமம் அன்றுமுதலின்றளவாக எங்கும் ப்ரஸித்திபெறுமல்போனால் அவ்விருவருக்குமிருந்த ஏற்றமென்னவோ அதை நிரூபகர் தெரிந்துகொள்வது. (௫௫-௫௪-பக்கங்களில்) உடையவர் திருவடிகளில் ஆசிரயித்தவர்களில் எழுபத்துநால்வர் ஸிம்ஹாஸநாதிபதிகள் என்று அவர்களின் திருநாமங்களெழுதும்போது ஸ்ரீ-பராசரபட்டரை ஆறுவதாகவும் எம்பாரை இருபத்துமூன்றுவதாகவும் சொல்லியிருக்கிறது. ஆசார்ய பரம்பரையில் எம்பெருமானார் எம்பார்

பட்டர் நஞ்சீயர் உக்த்யாஸ்ரியாகச்சொல்லியிருப்பதற்கு விருத்த மென்பது ஸுவ்யக்தம். ஸ்வாமிக்கு ஆசார்யபுருஷ ஸிம்ஹாஸநம் எம்பெருமானுரே ஸாதித்திருக்க தஜ்ஞாவாஸ்ராகும்படித் தாமே நியமித்திருந்த எம்பாருக்குத் தனித்தொரு ஸிம்ஹாஸநாதிபத்யம் ஸாதிக்கவேண்டிய தில்லையன்றோ? வேண்டுமென்றால் இந்த எழுபத்துநால்வருக்கும் ஆசார்யரும் ப்ராசார்யருமான தமக்கு ஒரு ஸிம்ஹாஸநஞ்சேர்த்து எழுபத்தைந்து ஸிம்ஹாஸநாதிபதிகளாக நியமித்திருக்க வேண்டுமே. அப்படிக் காணுமையால் இவர் எழுதிவைத்திருக்கும்ஸிம்ஹாஸநாதிபத்யங்கள் ஸ்வகல்பிதயுக்திகளென்று கண்டுகொள்ளற்பாலது. இதற்குமுன்னிருந்த எழுபத்துமூன்று விஸிஷ்டாத்வைதபரஸமுத்ர பாஷ்யகர்த்தாக்களையும் திருவுள்ளத்திற்கருதி எழுபத்துநாலுஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களாக நியமித்தருளினுரென்று வழங்கிவரும் ஐதிஹ்யத்தில் தோஷம் சொல்லப் புகுந்த இவருக்கே அறியாமையென்னும் தோஷம் ஸித்திக்குமிறே. இன்னமும் இங்கே எழுபத்துநால்வரும் பாஷ்யப்ரவர்த்தகராயிருப்பாரென்றும் முப்பத்தேழாம்பக்கத்தில் உடையவர் கடாதூராழ்வானுக்கு ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸநாதிபத்யம்ப்ரஸாதித்தருளினுரென்றும் சொல்லுகிற இவர் வாக்கியங்களைக் கண்ணுற்ற பெரியவர்கள் இவர்விஷயத்தில் திருவுள்ளமுகந்து "வைதிகஸித்தாந்தவிருத்த ப்ரவசநபராயண ஸிம்ஹாஸநாஸநஸிம்ஹாஸநாதிபதி ஸுவசக்ரவர்த்தி" என்றிவருக்குத் திருநாமஞ்சாதித் தருளுவார்களிறே. இன்னமும் எம்பெருமானுர் தமது ஜ்ஞாநபுத்திரரான பிள்ளானுடைய ஜ்ஞாநவைசத்தியத்தைக்கண்டு அவருக்கு 'திருக்குருகைப்பிரான்' என்று திருநாமம் ப்ரஸாதித்து அவரால் திருவாய்மொழிக்கு வ்யாக்யாநஞ்செய்வித்து அதற்கு "பகவத்விஷய"மென்று திருநாமஞ்சாற்றி இதனுல் ஆளவந்தாரின் த்ருதீயமநோரதத்தைப் பூர்ணமாக்கி அந்த பகவத்விஷயத்தையே பிள்ளான்வழியாகவே மற்ற முதலிகளும் அதிகரிக்கும்படி நியமித்தருளினுரென்கிற ஸம்ப்ரதாயைதிஹ்யத்துக்கு விருத்தமாக (௯௫-வது பக்கத்தில்) முதலிகளின் தூண்டலால் பிள்ளான் உடையவரிடத்தில் அநுமதிபெற்று ஆறுயிரப்படி-

ய்தருளினதாகவும் உடையவர் தாமே திருவாய்மொழிக்கு வ்யாக்கியாதாவாகுமிடத்தில் ஜடமதிகள் இதற்கிவ்வளவே பொருளென்று நினைப்பார்கள் ஆதலால் அபசாரமாகுமென்று பிள்ளானுக்கு அநுமதிசெய்ததாகவும் (௩௭-வது பக்கத்தில்) ஆழ்வார் ஸ்ரீஸூக்திஸிம்ஹாஸநம் பட்டருக்கு ப்ரஸாதித்தாரென்றும் சொல்லியிருப்பது ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயவிருத்தமென்று தெரியக்கடவது. இவர் வர்ணித்தபடிக்கு உடையவருக்குத் தாத்பர்யமிருக்குமானால் திருவாய்மொழிக்கு யாவதபேக்ஷமாகப் பொருளுரைத்தருள அவருக்கு சக்தியில்லையென்றாவது திருவுள்ளமில்லையென்றாவது சொல்லவும். ஸங்க்ஷிப்த வ்யாக்யாநதோஷம் பிறருக்குண்டாகும்படி திருவுள்ளமிசைந்தாரென்று சொல்லவும் ப்ரஸங்கிக்கும். அப்படிக்காகில் ஸம்ப்ரதாயப்ரவர்த்தநாதிகாலங்களில் விசதமாகிய இவரது அஸாதாரண ப்ரஜ்ஞாசக்த்யாதி கல்யாணகுணங்களுக்கு விருத்தமாகுமிறே. இதனால் 'ஸ்வபக்ஷஸ்தாபநார்த்தம் ப்ரயததி' என்கிற நியாயமாய் தம்முடைய ஸ்வாபிநிவேச விஷயமான ஸ்வஸங்கேதத்துக்கொக்க ஸம்பிரதாயத்திலுள்ள ஐதிஹ்யங்களை மாற்றப் பார்ப்பதேயொழிய அப்படி மாற்றுவதில் ஸ்வவேதார்த்த ஸ்வவசநங்களும் நியாயங்களும் விரோதிப்பதைக் காணத் தக்க மனப்பொறையில்லையென்று மத்தியஸ்தர் காண்பர்களிறே. இன்னமும் உடையவர் தம் புத்திரரான திருக்குருகைப்பிரான் பிள்ளானிருக்க கந்தாடையாண்டானைத் தமக்கு அந்தரங்ககைங்கர்யம் செய்யும்படி நியமித்ததாகச் சொல்வதனால் அவர் லோகஶாஸ்த்ரவிருத்தாசாரமநுஷ்டிப்பித்தாரென்று தோஷமேற்றுவதே இவருக்குப் புருஷார்த்தமாகக் காணப்படுகிறது. திருக்கோட்டியூர் நம்பியிடத்தில் பவிஷ்யதாசாரியரான உடையவர் விக்கிரகமிருந்ததாகச் சொல்வதனால் உடையவர் மஹிமை நன்கறிந்திருந்த அவர் மந்திரார்த்தவிஷயமாக உடையவரைப் பலமுறைநடப்பித்தது அஸங்கதமென ப்ரஸங்கிக்கும் ஆகிலுமிப்படிப்பட்ட விஷயங்களை ப்ரஸங்கித்தலால் க்ரந்தவிஸ்தரமாகுமென்று விடுக்கிறோம். (௪௫-வது பக்கத்தில்) உடையவர் பட்டருக்கு ஸாதித்திருந்த 'வேதாந்தாசார்ய'ரென்கிற திருநாமத்தை பட்டர் ஊரையையைச் சிறிது பெ

ற்றுள்ள தூப்புல்பிள்ளைக்கு பெருமாள் ஸாதிக்கப்போகிறாரெ
ன்றும் இதற்கு ப்ரமாணம் ஸப்ததிரத்நமாலிகையில் 'வேதாந்த
தேசிகோऽயம் ஸமப்யத்ர நாதஸாராத் க்ஷமா நாயஸாதம்'
என்றிருக்கிறதென்றும் இதற்குப் பொருள் தூப்புலப்பிள்ளையா
கிய வேதாந்தாசார்யரானவர் நல்ல கவிகள் சொல்லுமிடத்
தில் கூரத்தாழ்வான் மகனான பட்டரைச் சிறிதநுஸரித்திருக்கி
றாரென்பதென்றும் சொன்னது அபஹாஸ்யம் எப்படியென்றால்
பட்டருக்கு வேதாந்தாசார்யநாமமுண்டென்று கல்பித்தது
ஸம்ப்ரதாயவிருத்தமென்று சொல்லியாயிற்று இவரெ
ழுதிய ஶ்லோகத்துக்கு தூப்புலப்பிள்ளையான வேதாந்தாசாரிய
ரென்றதனால் பட்டருக்கு வேதாந்தாசாரிரென்கிற நாமம்
நிலைபெறுமென்று மனோரதித்த தமது அறிவி
ன்சிறுமையை ஶ்லோகத்தின் பொருளிலேற்றிச் சிறிது அநு
ஸரித்திருக்கிறாரென்று பொருளுரைத்தாரென்று கண்டுகொள்
வது. தாமே ப்ரமாணமாகக்காட்டிய ஶ்லோகத்துக்கு அதிலில்
லாதபொருள்சொல்லி ஸ்வாபிப்ராயம் நிர்வஹிக்கக் கருதுமிவர் ஐதிஹ்
யங்களில் தம்மிஷ்டப்படி எவ்வளவு கல்பனைகள் உண்டுபண்
ணுவரோ அதை மத்தியஸ்தர்கண்டுகொள்வது. ஆனால் ஏகதே
சிகள் தங்கள்ஸங்கேதத்துக்கு பட்டர் மூலபுருஷரென்று
சொல்வது ஸம்மதமென்னுங் கருத்தைக்கொண்டு கூரத்தா
ழ்வான் குமாருடைய திவ்யஸூக்திகளைப்போன்று தேசிகதிவ்ய
ஸூக்திகளிருக்குமென்று ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன்
அருளிச்செய்த அந்தஶ்லோகத்தால் தேசிகதிவ்யஸூக்திகளுக்கு
விருத்தமானஸங்கேதம் பட்டர் திவ்யஸூக்திகளுக்கும் விரு
த்தந்தான் இந்தஸங்கேதம் அர்வாசீநர்களால் ஜாதப்ராய
மாயிற்றென்று கண்டுகொள்ளத் தக்கதாகிறதிறே. இன்ன
மும் எம்பெருமானார்க்குப் பின்புள்ள நிர்வாஹகர்களுக்கு
ம்பட்டரே ஆசாரியரென்றதனால் இவரெழுதியிருக்கும் குரு
பரம்பராப்ரபாவத்தில் எம்பெருமானுக்குப் பின்பு எம்பார், பட்
டர் என்றது அஸத்தியமோ இங்குசொன்னதுதான் அஸத்திய
மோ என்கிற ஸம்சயமுண்டாகக் கடவதாகிறது பட்டர் அஷ்
டஶ்லோகி அருளிச்செய்யாத பூர்வகாலத்தில் அவருக்குமுன்னி

ட்ட ஆசாரியர்கள் மந்திரார்த்தமுணர்ந்து உபதேசித்துவந்த ததினாலும் இந்த அஷ்டஶ்லோகியை காலக்ஷேபத்தில் எம்பெருமானார் விநியோகிப்பித்ததாக ஐதிஹ்யம் காணப்படாமையாலும் இதுவே ஸூத்ராக்ஷ வ்யாக்யாநங்களுக்கு மூலமென்றது ஸந்யாஸிக்ஷ. இதில் இவர்கள் ஸங்கேதத்துக்கு அநுகூலமான விஷயங்களும் காணப்படவில்லை (சஎ-வதுப்க்கத்தில்) சொல்லியபடிக்கு நஞ்சீயர் கிரந்தத்தில் நம்பிள்ளை சிலகல்பனைகள் சேர்த்தது வாஸ்தவந்தான் அதுவே ஸம்ப்ரதாயபேதமுண்டாவதற்கு மூலமாக நின்றது அவர்விஷயமாகச் சொல்லப்பட்ட மற்ற ஐதிஹ்யங்களில் ப்ராமாண்ய நிர்ணயமும் ஸாயக்ஷவாயக்ஷங்களும் புலப்பட்டனவல்ல. ஆனால் நஞ்சீயர் தாமருளிச்செய்த ஒன்பதினாயிரப்படியை நம்பிள்ளை ஏறியருப்பண்ணிக் கொண்டுவந்துகொடுக்கக் கடாக்ஷித்துத் தமது உக்திப்பிரகாரங்களுக்குச் சில வேறுபாடுகள் உண்டாயிருப்பது கண்டு நம்பிள்ளை தமது மாத்ருகையை வெள்ளத்தில்விட்டு ஞாபகத்தினாலே ஏறியருளப் பண்ணினதாகத் தெரிந்தருளி அதைத் திருத்தத் திருவுள்ளமாய் வாங்கிவைத்திருந்தாரேயன்றி அப்படித் திருத்தியருள அவகாசமில்லாமல் திருநாட்டுக்கெழுந்தருளிவிட்டதாகவும் பின்பு நம்பிள்ளை அந்தகிரந்தத்தையே ப்ரவசநஞ்செய்யத் தொடங்கினதாகவும் ஸம்ப்ரதாயமறிந்த பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஹட்டர் ஸவாதஷக்ஷஸ்ரநும் திருவாய்மொழியுரைசெய்தருளி அதைக் காற்றில் விட்டுவிட்டாரென்கிற வைதிஹ்யம் ஸ்ரீஸக்ஷப்ரமோத்தர வம்ஸநத்தில் விசதமாகக் காணலாம் அந்த ஐதிஹ்யத்தைத் தவிர்ந்து ருக-ருஉ வது பக்கங்களில் நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டர் நம்பிள்ளை ஸாகித்த அர்த்தங்களைக்கொண்டு லக்ஷத்திருபத்தையாயிரம் கிரந்தமாக எழுதினாரென்றும் அதை நம்பிள்ளை கறையானுக்கிரையாக்கினாரென்றும் சொன்னது ஸாவிப்ராயக்ஷவ்வெந அந்த ஸவிப்ரயம் யாதெனில் முப்பத்தாறாயிரம் நம்பிள்ளை அங்கீகரித்ததன்றென்று சொல்லும் வைதிஹ்யத்தை மறைத்துவிடலாமென்பதுதான். நம்பிள்ளைக்கு பெரியவாசசானபிள்ளை ப்ரியஶிஷ்யரென்றும் வடக்குத்திருவீதிப்பிள்ளை அந்தரங்கஶிஷ்யரென்றும் சொன்னார் அன்றியும் நம்பிள்ளை பெரியபெருமாள்

திருவுள்ளம்மிகவுகக்கக் காலக்ஷேபம்நடத்திவந்த தாம்அருளிச்செய்தஅர்த்தங்களைத் தம் அந்தரங்கசிஷ்யராமொருவர்மறவாதுயரித்துக்கொண்டு அவற்றைஅவ்வப்பொழுதேஎழுதி க்ரந்தீமாக்கித் தம்மிடத்தில் கொண்டுவந்துஸமர்ப்பித்தால் அதைத்தம்மனுமதியன்றி எழுதப்பட்டதென்று சொல்லி வாங்கி வைத்துவிடுவார். அதற்கு நம்பெருமாள் நியமனத்தால் ஸகல சிஷ்டபரிக்ரஹமுண்டாகுமென்று கருதியிருந்தால் தம்மனுமதியில்லாமலெழுதினதென்கிற தோஷாரோபணம் பண்ணலாமா. நம்பெருமாள் திருவுள்ளமுகக்கத் தக்கதாகத் தாம் அருளிச்செய்த அர்த்தங்களே அந்த க்ரந்த ரூபமாயிருக்க அதற்கு நம்பெருமாள் நியமனமடியாகவே சிஷ்டபரிக்ரஹமுண்டாகவேண்டுமென்று ப்ரதீக்ஷிக்கவேண்டிய காரணமென்ன? தாம் பரிக்ரஹித்தால் சிஷ்டபரிக்ராஹ்யமாகாதென்று நினைத்திருந்தாரென்னவும் ப்ரஸங்கிக்குமே. நம்பிள்ளை பரிக்ரஹம் சிஷ்டபரிக்ரஹவிருத்தமானால் நம்பிள்ளை சிஷ்டவிருத்தரென்பது ஸித்தமாயிற்றிறே. ஆகவே சிஷ்டவிருத்தரான நம்பிள்ளை ஸாதித்த அர்த்தங்களுமப்படியேயிருக்குமிறே. அவைகளை நம்பெருமாள் பரிக்ரஹிப்பதெப்படி? பரிக்ரஹித்தால் நம்பெருமாள் சிஷ்டவிருத்தரென்றுசொன்னதாகுமே. ஆகிலும் நம்பிள்ளை பரிக்ரஹித்தால் பெரியபெருமாள் சீறியருளுவாரா. ஈயுண்ணிமாதவருக்கு அந்த முப்பத்தாறாயிரத்தைக்கொடுமென்று நம்பெருமாளை நியமித்தாரென்றால் அதை எல்லாரும் காலக்ஷேபத்தில் விநியோகித்துக்கொள்ளும்படி நியமித்ததாகுமா. இந்தக் கதையின் அஸாங்கத்யம் மத்தியஸ்தர்களுக்கு விசதமாவது அதிஸுலபமன்றோ. இங்கே வாய்மையுள்ள பெரியோர்கள் சொல்லும் ஐதிஹ்யமாவது. வடக்குத் திருவீதிப்பிள்ளை பெருமாள்கோவிலில் நடாதூரம்மாள் ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் செய்யும்போது தமக்கு ஸதீர்த்யரும்விசேஷஜ்ஞரும் அதிசாஸ்த்ரஜ்ஞருமான ஸாத்விகர்ச நஹ்ரை ‘ஸ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி’ என்கிறபடி ஒருநாள் ஆசார்ய ஸந்நிதியில் அவமதிப்பாகப்பேச, அம்மாளும் ஸாத்விகர்ச நஹ்ரர் நாடோறும் எறியருளப்பண்ணிக்கொண்டு வந்திருந்த தம்முபந்யாஸப்பட்டோலைகளை வெளிப்படுத்தி அதற்கு ச்ருதப்ரகாசிகையென்று திருநாமஞ்சாத்தி வடக்குத் திருவீதிப்பிள்ளையைப்பார்த்து ‘நீர் ப்ராஜ்ஞாவஜ்ஞாநம் பண்ணினது யுக்தமன்று, க்ஷமைகொள்ளும்’ மென்று நியமித்தருள, அவ்வளவி

லே வடக்குத் திருவீதிப்பிள்ளை அவ்விடந்துறந்து நம்பிள்ளை பக்கல் சேர்ந்து ஹமவதிஷய காலக்ஷேபம் செய்யத்தொடங்கி ஸூஹர்சஹூர் விஷயத்தில் உள்ள ஸ்பர்யெ-ஷயினுல் ஸ்ரு தப்ரகாசிகா ஸம்ஜ்ஞயாலே முப்பத்தாருயிரப்படி செய்து அதற்கு ஈடு என்ற பேரும் வைத்து நம்பிள்ளை உபந்நியாஸத் தைக்கொண்டு எழுதினதென்றும் கட்டிவிட்டாராதலால் அதை நம்பிள்ளை திருவுள்ளம் பற்றவில்லை. அந்த நம்பிள்ளை காலத் துக்குப் பின்புதான் அது வெளிப்பட்டதென்று சொல்லுவார் கள். முப்பத்தாருயிர ப் ப டி மு த ா ல ா ன ஆ யீ ங் க ள் அந்யோந்யமனுகூலித்திருப்பனவென்று இவர் ஸ்தாபிக்க வல் லவராகில் ஆருயிரப்படிக்கு அனுகூலமாயிருப்பனவாகவும் சொ ல்லத்துணியலாகும். அதுவுங்கிடையாது. இன்னமும் இவை களுக்கெல்லாம் ஹூரருளிச்செய்த அஷ்டஸ்லோகியும் ஸஹஸ்ர நாமஹாஷ்யமும் முந்நூலாயிருக்குமென்றதனுல் மற்ற ஹூர் ஸ்ரீஸூக்திகளும் ஸ்ரீஹாஷ்யக்காரர் ஆளவந்தார் நாயமுனிகள் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளும் தமது ஸங்கேதத்துக்கு அனுகூல மாகாவென்பது ஈயஷவிஸமிறே. சுஞ தஃ அவ்விரண்டு ஆயீ ங்களாகிலும் இவர் சொன்னபடியிருக்குமோவென்றுல் அதுவு மில்லையென்பது மத்தியஸ்தர்களுக்கு ஸ்பஷ்டமாகும். (அஙூ வது பக்கந்தொடங்கி) பெரியவாச்சான்பிள்ளை வேஹாஞாசார் யரைப்பற்றி பெரியபெருமாள் ஸந்நியியில் விண்ணப்பஞ்செ ய்ய, பெருமாள் வேஹாஞாசார்யருக்கு ஸ்வப்னங்காட்ட, அவர் அஞ்சி பெரியவாச்சான்பிள்ளை பக்கல்சென்று திருந்தியதாக ச்சொன்னது ஈர்ஷ்யாஸூயா ஸம்ஹூதமான வூஜிரூஷத்தி னுலேயன்றி வேறன்றென நிருபணத்தால் விசஹமாகுமிறே. எங்ஙனேயெனில் தூப்புலப்பிள்ளை உபாஸநாலப்ஜஞானத்தால் செருக்குண்டாகி அபார்த்தங்களை ப்ரவர்த்திப்பிக்கிருரென்று பெரியபெருமாள் ஸந்நியியில் ஆச்சான்பிள்ளை விண்ணப்பஞ் செய்தாரென்றுல் இப்படிச்சொல்லுமிவருக்குப்போல ஆச்சான் பிள்ளைக்கும் வூஜிரூஷமுண்டெனத் தடையில்லை. ஏனென் ருல், தூப்புலப்பிள்ளை உபாஸித்த தெய்வமாவது 'பரிமுகமா யருளிய' என்கிறபடி ஆழ்வார்களால் மங்களாஸனஞ்செய்யப் பட்ட ஸ்ரீஹயக்ரீவனன்றே. அந்த ஹயக்ரீவனுடைய ப்ரஸாத த்தால் கிடைத்தஜ்ஞானம் செருக்குண்டாக்கவும் அபார்த்தப்ர வர்த்தனம் பண்ணவும் ஹேதுவாகுமாஞல் அவரால் அருளப்ப

ட்ட நால்வேத முதலிய சாஸ்திரங்களும் தத்ஸாரரூபமானதிவ்
யப்ரபந்தங்களும் அவற்றின் அர்த்தங்களை விளக்கும் பாஷ்ய
ரஹஸ்யவிஷயாதிகளும் அவ்வாறாகி அவைகளுக்கு கர்த்தாக்க
ளான ஆழ்வாரெம்பெருமானர் முதலானோர்களும் அநார்யர்க
ளாய்ப்போக ப்ரஸங்கிப்பதுமன்றி ஸ்ரீமந்நாதமுனிகள் 'கண்ணி
நுண்சிறுத்தாம்' பென்னுந் தமிழ்ப்பிரபந்தமாகிற மந்திரத்தைக்
கொண்டு ஆழ்வாரை உபாஸித்துப்பெற்ற ஞானமே அஜ்ஞா
னமாக நேரிடுவதால் ஸம்ப்ரதாயத்தை இகழ்ந்ததாக முடியுமித்
தனைபோக்கி தேசிகன்மீது சிலது குற்றங் கல்பித்துவிட்டதா
கக்கருதி மகிழ்ச்சிபெறுவது மிக்கப் பேதைமையாகத்தீருமி
றே. இன்னமும் ஹயக்ரீவப்ரஸாதத்தால் ஸார்வஜ்ஞ்யமும் ரங்
கநாயன் ஸ்வப்னத்தால் ஸார்வஜ்ஞ்யமுமுண்டானதாகச் சொல்லி
யதனால் ஹயக்ரீவனும் ரங்கநாயனும் பரஸ்பரவிருத்தர்களாக
வேண்டி அந்த ஹயக்ரீவனை ஆராதித்துக்கொண்டிருந்த எம்
பெருமானாரும் பெரியபெருமாளுக்கு விருத்தராக ப்ரஸங்கிக்கு
மிறே. கிஞ்ச, பெரியபெருமாளும் பெரிய பிராட்டியாரும்
திருவுள்ளமுகந்து தூப்புலப்பிள்ளைக்கு அடைவே. வேதாந்தா
சார்யர் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் என்கிற திருநாமங்களை ப்ரஸா
தித்திருக்க அப்படிப்பட்ட வேதாந்தாசார்யர் ஸ்வாசார்யப்ரவ
ர்த்தனஞ்செய்வதாக ஆச்சான்பிள்ளை விண்ணப்பஞ்செய்துகொ
ண்டு வேதாந்தாசார்யருக்கு ஸார்வஜ்ஞ்யமுண்டுபண்ணத்தக்க
ஸ்வப்னம் பெரியபெருமாள் காட்டினாரென்றதனால் பெரியபெ
ருமாள் பூர்வமஜ்ஞராயிருந்து பஶ்சாத் ஆச்சான்பிள்ளையால் உணர்
வுபெற்றாரெனவே சொல்ல நேரிடுமிறே. இன்னமும் பூர்வா
சார்யஸம்ப்ரதாயார்த்தங்களை வஞ்சித்து விப்ராதிஸ்ருஷ்டி
யாக நவீநார்த்தங்களைக் கல்பித்து ப்ரவர்த்திப்பித்தீ' ரெ
ன்று ஆச்சான்பிள்ளை சொல்ல தூப்புலப்பிள்ளை 'ஸ்ரீபாஷ்யத்
தைத்தானே ப்ரவசனம்பண்ணிக்கொண்டு அதற்கு அநுகு
ணமாகச்சில க்ரந்தங்களைப்பண்ணி ப்ரவர்த்திப்பித்தேன். அபா
ர்த்த ப்ரவர்த்தனஞ்செய்தேனோ' வென்று கேட்க ஆச்சான்பி
ள்ளை 'ஸ்ரீபாஷ்யவிஷயமன்று காணும் நாம் சொன்னது நம்
மாழ்வார் நாதமுனிகளுக்கு திவ்யப்ரபந்தவிஷயமாகவும் ரஹ
ஸ்யவிஷயமாகவும் ப்ரத்யக்ஷமாக அருளிச்செய்த அர்த்தங்க

ளைக்கண்டித்தீ'ரென்றதனால் ஸ்ரீபாஷ்யமும் மற்றாஹஸ்யாதிக ளும் பரஸ்பரவிருத்மாகவன்றோ இருக்கவேண்டும். ஆகவே ஸ்ரீ பாஷ்யக்காரர் திருவுள்ளமும் நம்மாழ்வார் திருவுள்ளமும் அந் யோந்யவிருத்தங்களென ப்ரஸங்கிக்கும் இஷ்டாபத்தியென்றால், ஸ்ரீபாஷ்யக்கார்ய திருவுள்ளத்துக்கிணங்கிய தூப்புலப்பிள்ளை மீது தோஷம்ணநம் பண்ணுமும து ஸ்ரீபாஷ்யக்காரரிடத்திலே சேருவதாக முடியுமிறே. அன்றியும் பூமன்னுமாது கள்ளார் பொழில் எய்தற்கரிய உறுபெருஞ்செல்வமும் ஆர்ப்பொழில் உணர்ந்தமெய்ஞானியர் இத்யாதி பாசுரங்களும் அநிருதார்த்த வசனங்களாக ப்ரஸங்கிக்குமே. இன்னமும் ஸ்ரீபாஷ்யக்காரர் தூப்புலப்பிள்ளையை ஸ்வப்னத்தில் திரஸ்கண்டித்தாலடித்து ஸ்ரீ பாஷ்யப்ரவசனம் பண்ணும்படி நியமித்ததாயும் அவர் சீற்ற த்தை ஆற்றும்படி தூப்புலப்பிள்ளை யதிராஜஸப்ததி செய்த ருளினதாகவும் ஆச்சான்பிள்ளை சொன்னரென்றதனால் உடை யவர் தமது முக்கோலால் புடைத்தும் தூப்புலப்பிள்ளைக்கு ஸந்மார்கப்ரவர்த்தனமுண்டாக்கமாட்டாமல் போனதாகவும் அத் தனை அருமையான காரியம் ஆச்சான்பிள்ளை செய்ததாகவும் முடிவதனால் உடையவரிலும் ஆச்சான்பிள்ளையே வல்லவரென ப்ரஸங்கிக்கும். இன்னமும் யதிராஜஸப்ததி சுவவாராக்ஷ ணாயடிரோகச் செய்ததாக ஆச்சான்பிள்ளை சொல்லியிருந் தால் அவருக்குத்தனிஸ்லோகி முதலியவைகளாலுண்டாயிருக்கும் ஸ்லோகார்த்தப்ரவசன சாதுர்யப்ரஸித்திக்கு விரோயமுண்டாவதே யன்றி வேறில்லை. ஸ்ரீபாஷ்யக்காரர் ஸகலச்ருதிவசனங்களு க்கும் ஐகரஸ்யப்ரகடனம்பண்ணி உபர்மத ஸஞ்சயத்தை நிரா நிரஸ்தமாக்கி ஸ்வமதத்தை அபாயமாகஸ்தாபித்து ஸாருபரம் பரைக்கு விஹஷேணஸூதராயிருப்பதனால் அவர் விஷயத்தில் க்ருதஜ்ஞதாபுரஸ்ஸர ஹக்தியதிசயத்தாலும் அவரருளிச்செய்த ஸூ நங்களை அவிச்சிந்நஸம்ப்ரதாயபூர்வ ஸம்ப்ரதாயத்தாலே அதிகரிக் கப்பெற்ற தமக்கு விசதவிநிரஸநவிஷக்ரமென்கிற ஸாத் விகத்ருப்தியாலும் அவருடையதிவ்யகுணசேஷ்டிதங்களை அநு பவிப்பதனால் பெருகும் ஆனந்தவிசேஷத்தாலும் யதிராஜஸப் ததி ஸாதிக்கப்பட்டதென்று அதன் அர்த்தத்தை அறியுமவர் கள் உறுதியாகச் சொல்லுவார்கள். ஆகையால் "நதூஷா ரோபைவஹவஸ்ப்ரஸு ஸாக்ஷாத் நைவாஹ்ஸந்துக் க்ருதி ஷு விபேஷாம் யேஷாந்தித்யம் ஸநஸம்ஸாஹ்ஸயம் தேஷாம்

ஸக்திஸ்தாக ஸுயம் வெங்கடேஶ' ஐதிஹ்யாதிகளின்படி தேஶிகதி வ்யஸூக்திகளை அப்யஸிக்கத்தக்க ஸாஹ்ருதவிசேஷமில்லாமல் தத்விஷயமாக அஸூயை செய்யத்தக்க தௌர்ஹ்ருத்யவிஶேஷமுள்ளவரான இவர்போலொத்தவர்கள் ந்ருதாநைதிஹ்யகல்பநம் பண்ணி ஆச்சான்பிள்ளைக்கு மஹிமையுண்டுபண்ணுவதாகக்கருதி த்வேஷமே போஷிக்கிறார்கள்.

தேஶிகதிவ்யஸூக்திகளில்ஸம்ப்ரதாயவிரோதமிருந்தால் அவற்றிலேதாகிலும் ஸ்தாலீபுலாகந்யாயமாக எடுத்து இது இன்னபூர்வாசார்ய வாக்கியத்துக்கு ப்ரதீபமாயிருக்கிறதென்று ஆச்சான்பிள்ளை சொல்லவேண்டுமன்றோ. அப்படிக் காண்கிலோம்.

இன்னமும் ஆழ்வார்களினர்ச்சையும் திவ்யப்ரபந்தாநுஸந்தானமும் கோயிலிலே செய்யவொண்ணாதென்று துர்வாதிகள், மறுக்க இந்த ஆச்சான்பிள்ளை போகாசாரியர் முதலானோர் அதைத் தவிர்க்கமாட்டாதாராயிருக்க பெரியபெருமாள் நியமனத்தால் தேஶிகன் எழுந்தருளி 'ஆழ்வார்கள்நித்யஸூரிக'ளென்றும் 'தத்ப்ரபந்தங்கள் உபநிஷத்துக்க'ளென்றும் ஸம்ப்ரதிபன்னப்ரமாண ததநுகூல தர்க்கங்களாலே ஸ்தாபித்து எப்போதும்போல நடத்தியருளினாரென்று ப்ரஸித்தமாயிருப்பதால் தேஶிகன் ஆழ்வார்கள் விஷயத்தில் ஜாதிசிந்தனம் பண்ணினதாகவும் அதற்காக ஆச்சான்பிள்ளை பாணாழ்வாரை ஆராதிக்கச்சொன்னதாகவும் சொல்வது அத்யந்தாபஹாஸ்யமிறே.

அபிச, பூர்வாசாரிய வசனங்களில் சிலவற்றைத்தாம் கண்டித்ததுண்டென்று தூப்புலப்பிள்ளை ஸஹ்யோபமமம் பண்ணினதாகவும் ஆச்சான்பிள்ளை அந்த பூர்வாசார்ய வசனங்களுக்கு ஸம்ப்ரதாயோபபத்தி ஸாதித்ததாகவும் வர்ணித்திருப்பது ஜால்மமனோரதமென்று ஸஹ்ருஜ்ஜநநிர்வசனவிஷயமிறே.

ஆழ்வாருடைய முக்த்யநுபவத்துக்கு "அநுகுண உபதேச பாரம்பரியைக்கொண்டு' ஸர்வப்ரமாணங்களையும் அதற்கிசைப்பிக்கவேண்டுமென்று சொன்னாரென்றதனால் முக்தாநுபவத்திற்கும் வேதாதிப்பிரமாணங்களுக்கும் பொருத்தம் ப்ராயிகமாயில்லையென்பதாயிற்று. இதனால் ஆழ்வார் விஷயத்தில் அரு

ளிச்செய்த திருவாய்மொழி முதலிய ப்ரபந்தங்களுக்கும் நாத முனிகளுக்கு ஆழ்வார் ஸாக்ஷித்தருளிய அர்த்தங்களுக்குங்கூட வேறுபாடேயுண்டாயிருக்கலாம். ஏனென்றால் இவர் ஆழ்வார்க்கு முக்திதசை கல்பித்ததனால் அதற்குமுன் அவர்பத்தராயிருக்கும் போது ஞானபூர்த்தியில்லாமையால் அப்போதுள்ள ஞானஸங்கோசத்திற்கொக்க திருவாய்மொழி முதலானவை அருளிச்செய்திருப்பர். பின்பு தன் அனுபவம் வேறாகிவிட்டபடியால் அவைகளை முக்தியநுபவாநுகுணமாக நாதமுனிகளுக்கு அருளிச்செய்தார்போலும். நல்லகாலமாய் திவ்யப்ரபந்தங்களில் கண்ணிநுண்சிறுத்தாம்பும் ஆராவமுதேயும் தவிர மற்றவைகள் லுப்தமாய்விட்டபடியால் ஆழ்வார் முக்தியநுபவாநுகுணமாக நாயமுனிதூரா நமக்கெல்லாம் கிடைத்ததென்றுசொல்ல ப்ரஸங்கிக்குமிறே. இன்னமும் 'ஆளவந்தார் எம்பெருமானார் பிள்ளான் முதலானோர்களைக்காட்டிலும் உமக்கு அதிகந்தெரியுமோ அவர்கள் நடத்திப்போந்ததற்கு விரோதமாக ஸம்ப்ரதாயம் நடத்தலாமோ' வென்று ஆச்சான்பிள்ளை தூப்புலப்பிள்ளைத்குச் சொன்னாரென்றதனால் அவர்கள் அப்பிரமாணமாகத் தள்ளியவற்றை அவலம்பித்ததாகவாவது ப்ரமாணமாகப்பற்றியவற்றை அப்பிரமாணமாகத் தள்ளிவிட்டதாகவாவது தேசிகனிடத்தில் இருக்கிறதென்று ஸ்தாபிக்கவேண்டும். அப்படி இன்னவிஷயமென்று ஒன்றும் புலம்பாமையால் இது அஸூயாளுகல்பிதகூடைதிஹ்யமெனத் தடையில்லை.

இங்கே பெரியவாச்சான்பிள்ளை தேசிகன்ஸந்நிதியில் பணிந்து ந்யாஸாதிகளான சில அர்த்தவிசேஷவிஷயமாகத் தனக்குண்டாயிருக்கும் விசிகித்ஸையை விண்ணப்பஞ்செய்து தத்வஜிக்ஞாஸையாலே ப்ரஶ்நம்பண்ண தேசிகனும் அவருக்காக நியாஸ தசகம் முநிவாஹனபோகம் முதலிய க்ரந்தங்களை அருளிச்செய்ய அதனால் ஆச்சான்பிள்ளை விக்ஞாததத்வார்த்தராய் தேசிகன் பக்கல் க்ருதக்ஞாதாபுரஸ்ஸரஹக்தி விசேஷம் செய்துபோந்தாரென்று ஸத்ஸம்ப்ரதாயைதிஹ்யம் ப்ரஸித்தமிறே. இதை மறைக்கவேண்டுமென்றிவர்களெழுதிய தூப்புலப்பிள்ளை ஈடுபாடென்னும் அரைதிஹ்யம் கல்பிதமும் அஸங்கதமுமாயிருப்பது நிருபணஸ்பஷ்டம். ஆழ்வார் முக்திதசையில் தாமநுபவித்த அநுபவங்களை ஸ்ரீமந்நாயமுனிகளுக்கு உள்ளபடி உபதேசிக்க அதுமுதலாக உபதேச பரம்பரா பிராப்தமான ரஹஸ்யார்த்தங்களுக்கு சுருதிஸ்மிருத்தியாதிகள் ஸங்கதமாகா

திருக்கினும் அந்த ரஹஸ்யார்த்தங்களுக்கிணங்கவே அவைகளை நயிப்பிக்கவேண்டுமென்றதனால்நித்தியவிபூதியிலுள்ள அநுபவங்களுக்கு லீலாவிபூதியிலுள்ள சாஸ்திரங்கள் ஸ்வதஸ்ஸங்கதமாயிராவென்பது பலிதத்திறே. அங்ஙனமாகில் லீலாவிபூதியிலிருந்த ஆழ்வார்கள் எந்த சாஸ்திரத்தின் அவலம்பத்தால் உபாயாநுஷ்டானம்பண்ணி முக்திபெற்றார்களோ அதைச் சொல்லாமல்விட்ட காரணங்காண்கிலோம். நிர்ஹேதுககிருபாவிசேஷ ஜநிதஜ்ஞாந விகாஸத்தாலென்றால் முக்திதசையிலென்று விசேஷிப்பிக்கத் தேவையில்லையிறே. ஆழ்வார்க்கு உபாயங் கூறித்ததனால் ப்ரபந்தங்களிலருளிச்செய்த ப்ரபந்தங்கள் நித்திய விபூத்யனுபவத்துக் கிசையாமலே இருக்குமென்று சொல்லத்தடையில்லையிறே. அவைகளுக்குப் பெரியபெருமாள் வேதஸாம்யமருளிச் செய்திருப்பதால் வேதங்களும் தத்வப்ரஹ்மணங்களும் திவ்யப்ரபந்தங்களும் தத்வார்த்த வாதிகளென்றே அவர் திருவுள்ளம்பற்றியிருப்பதாக விஶதமாகிறதன்றோ. அதனால் லீலாவிபூதியி லெழுந்தருளியிருக்கும் பெரியபெருமாள் ப்ரபந்நராஜ்ஞாஸம்ரக்ஷண முள்ளவராகவே நிரூபிக்கப்படுவரிறே. ஆகவே ஆழ்வாருடைய முக்திய நுபவ ப்ரபந்தவாதிகளான ஆசாரியர்கள் உபதேசிக்கும் பரம்பரா ப்ராப்தமான விசேஷார்த்தங்களை வெளியிடுகிற ஈடு முப்பத்தாறாயிரத்தை விசதமாக வெளியிட வல்லமணவாளமாமுனி பக்கல் அவர் காலக்ஷேபம் பண்ணுவதற்கு முன்னே ஆச்சான் பிள்ளை சொன்னமாத்திரத்திலே ஜ்ஞானஸம்பன்னராகி வேதாந்தாசாரியரென்று தம்மால் தெரியாமல் திருநாமமளிக்கப்பெற்ற தூப்புலப்பிள்ளைக்கு ஸ்வப்நங்காட்டினது அத்தியாச்சர்யமாயிருக்கிறதிறே. உபப்ரஹ்மண ஸஹித வேதாந்தவாக்யங்களை ஸூத்ரித்த வ்யாஸமஹர்ஷி ப்ரபந்நரானதால் அந்த ஸூத்திரங்களும் முக்தியநுபவ விருத்தமாகையால் அவ்வர்த்தங்கள் பரம்பராப்ராப்தமாயிருப்பவைகளை ஸ்ரீபாஷ்யமாக ஸாதித்திருக்கிறபடியாலும் ஸ்ரீபாஷ்யவிஷய மன்றென்று ஒதுக்கியிருப்பதாலும் ஆழ்வாருபதேசித்த ரஹஸ்யார்த்தங்கள் ஸ்ரீபாஷ்யக்காரருக்குப் பின்பு இவர்களுக்கு எப்படி ரஹஸ்யமாகவந்து தோன்றினவோ அதை மத்தியஸ்தர் அறியவேண்டும். ஆச்சான்பிள்ளையிடத்தில் தூப்புலப்பிள்ளை ஈடுபட்டதாக

கட்டிய அநுஜ்ஞைதிஹ்யத்தில் அவர் இத்தனை அஸங்கதார்த்த வாதியென்று சொன்னதாக ப்ரஸங்கிக்கிறபடியால் அந்தகுற்றம் தத்யர்களுக்கேயன்றி நமக்கொரு குறையுமில்லை. இப்படிப்பட்ட பொய்களால் அப்புலப்பிள்ளைக்குத்தாழ்வு நேரிடுமென்று மநோரயித்தால் அந்தத்தாழ்வு பெருமாள் ஆழ்வார் எம்பெருமானார் ப்ரசாதமாகவே தேசிகனுக்குக் கிடைக்குமிறே. இந்தவிஷயத்தைப்பற்றி வேண்டுமளவும் பரிஹஸிக்கத் தொடங்கினால் வஸிஷ்டதுல்ய ஜீவிகளான ஸ்ரீஹாஸ்யவ்ருத்திகளுக்கு முடிவுபெறாதென்று இம்மட்டில் விடுத்தோம். ஆனவிங்ஙனம் ஐதிஹ்யம்கட்டிய ஏகதேசிகளின் மநோரதமென்னவென்றால் பலமுகமாக ஸத்ஸம்ப்ரதாய ஸரணிப்ரதீபமாக நடக்கும் தங்கள் துஸ்ஸங்கேதத்துக்கு அநுகூலமான ப்ரமாணமொன்றும் கிடையாமையால் ஆழ்வார் உக்திதஶா நஹ்ய தாஸோபதேஶ ஸம்ப்ரதாயமென்றொரு பலங்கட்டலாமென்று நினைத்ததே. இப்படி மநோரயித்தது அத்தியந்தாபஹாஸ்யமென்பது நிரூபணதசையில் அவர்களுக்கே விசதமாகும். கிஞ்ச, எம்பெருமானால் தர்சநமென்று ப்ரஸித்தமாயிருக்க அதைவிட்டு ஆழ்வாரருளிச்செய்த அர்த்தங்களென்றது ஏனென்றால் ஸூத்ரத்தில் "உபாயோபேய" முதலானதும் ஸ்வஸம்ப்ரதாயிகரண பாஷ்யமும் ஸாதித்தபடியால் எம்பெருமானாரைச் சொல்லவில்லையென்றும் ஆழ்வாரென்று சொல்லும்போது 'கைகளாலார' முதலியவற்றை ஸ்மரித்து ஆழவார் முக்திதசையிலென்று விசேஷிப்பித்துச் சொன்னாரென்றும் விசதமாகிறதிறே. இன்னமும் நாதமுனிகள் ஆழ்வாரால் உபதேசிக்கப்பெற்று அவர்முதலாக உபதேஶஸம்ப்ரதாயப்ராப்தமான அர்த்தங்களென்று தமது ஸங்கேதத்திலுள்ள அபார்த்தங்களை ஸ்தாபிக்கப் பார்ப்பது ந்யாயயாஜ்ஞநயதிவராதி ப்ரபந்தங்களின் பரிசீலந காலத்தில் பாதிதமாகுமாகையால் இந்த ரஹஸ்யார்த்தங்கள் ஆச்சான்பிள்ளைக்கு அழகிய மணவாளன் கனவிலருளிச்செய்தனவென்று சொல்லிக்கொள்வதே நலமாயிருக்குமிறே. இன்னமும் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திலேயிருந்து ஸ்ரீவைஷ்ணவர்களாயிருப்பவர்களுக்குத் திருப்பல்லாண்டுமுதலிய திவ்யப்பிரபந்தமொழிய வேறு கதியில்லையென்றதனால் பொய்கையாழ்வார் முதலாகக் குலசேகர ராளவாயு

ள்ள ஆழ்வார்களுக்கு ஸ்ரீவைஷ்ணவஸ்ரீபாவமாவது ம[illegible]பா வமாவது சொன்னதாயிற்று. [illegible]மறியப் பெரியவாச்சான்பிள்ளை செய்தருளின வ்யாக்கியானங்களையொ ழிய கதியில்லையாகையால் ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் பெரி யவாச்சாம்பிள்ளைக்கு சிஷ்யகோடிகளா யிருப்பர்களென்று மநோரதத்தினால் இவர் வ்யாக்கியானங்களுண்டாவதற்கு முந் தின ஆசார்யர்களும் ஆச்சான்பிள்ளைக்கு சிஷ்யர்களாக ப்ரஸ ங்கிக்கிறது பூர்வாசார்ய ஸம்பிரதாயத்தால் வந்த திவ்யப்ரப[illegible]த்தை என்றதுகொண்டு பரிஹரிக்கப் பார்க்கிலும் நம்மாழ்வாரொழிந்த மற்றஆழ்வார்களுக்கும் ஸ்ரீமந்நாதமுனி களின் குலப்பெரியோர்முதலான மஹாத்மாக்கள் பலருக்கும் அவைஷ்ணவத்வமாவது ஆச்சான்பிள்ளை சிஷ்யத்வமாவது ப்ர ஸங்கிக்கத் தடையில்லையிறே. இப்படி தன்வாக்கியங்களில் இன்னபடியான அஸாங்கத்தியமும் [illegible]வாரமும் புகுகிற தென்றுணராமல் வ்யாஜ[illegible]ஸ்வீகாரான இவர் மெ ல்லென தேசிகனுக்கும் ஆச்சான்பிள்ளை பக்கல் பஞ்சஸம்ஸ்கா ரம் நடப்பித்துவிடும்படி மநோரதித்தல் புதுமையன்றிறே. இன்னமும் பெரியவாச்சான்பிள்ளை பக்கல் அதிகபக்தி தலையெ டுத்து அவரை யெல்லோருக்கும் ஆசார்யராகப் பார்த்த இவர் பிள்ளை லோகாசார்யருக்குப்பூர்வம் அவரை குருபரம்பரையில் சேர்த்துக்கொள்ளாமல் கைவிட்டது [illegible] ன்றோ. ஆறாயிரப்படியோடும் அவர்செய்த பரமரஹஸ்யத்தோ டும் முப்பத்தாறாயிரம் முதலியவை மிகவும் சேர்ந்திருக்குமெ ன்றதனாலே மற்ற பூர்வாசார்ய கிரந்தங்களோடு சேர்ந்திராமை அர்த்த ஸித்தமானமையால் அவ்விஷயம் நாம்சொல்வது பிஷ் டபேஷணமாகிறது. ஆறாயிரப்படியோடு சேர்ந்திருக்குமென்கை யும் முதல்பாட்டு வ்யாக்கியானத்தில் பிள்ளானருளிச்செய்த தை பக்ஷபேதமாகக்கொண்டு மதிநலமென்பதற்கு ஜ்ஞானபக்தி கள் இரண்டையும் தந்தாரென்று நிர்வஹிப்பாருமுண்டென்று [illegible]மான முப்பத்தாறாயிரப்படி வாக்கியத்தா லே பாதிதமென்பது [illegible]. | [illegible]மென்பது [illegible]மென்று [illegible]திலே விசதம். உண்டாயிருந்தாலும் ஆறாயிரப்படி [illegible]மந்தானதுக்கு மூலமாகுமிறே. வடக்குத் திருவீதிப்பிள்ளைசெய்த முப்பத் தாறாயிரத்தை நம்பிள்ளை தாம் திருவுள்ளம்பற்றாமையால் அது

நம்பிள்ளையின் உபந்யாஸப்படி யெழுதப்பட்டதென்றதும் நம்பிள்ளைக்கு வடக்குத் திருவீதிப்பிள்ளை அந்தரங்க சிஷ்யரென்றதும் எப்படி அஸங்கதமோ அப்படித்தான் நம்பிள்ளையிடத்தில் வடக்குத் திருவீதிப்பிள்ளை ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபஞ்செய்தாரென்றதும் இருக்குமென்று கண்டுகொள்ளற்பாலதிறே. (ஐம்பத்தெட்டாவதுபக்கத்தில்) பிள்ளை லோகாசார்யர் - தத்த்வத்ரயம் - ரஹஸ்யத்ரயம் - முதலான ப்ரபந்தங்களையும் ஸாரஸங்க்ரஹம் வசநபூஷணம் - சிறிதும் பெரிதுமான கத்யத்ரய வ்யாக்கியானங்களும் செய்தருளினரென்றதனால் ஸாரஸங்க்ரஹாதிகள் ஸ்வப்ரபந்தங்களென்று விளங்கிவைத்ததாகிறது. வசநபூஷணவ்யாக்யாநார்த்தமாக அழகிய மணவாளப் பெருமாள் நயினார் ஆசார்யஹ்ருதயமென்கிற மஹாப்ரபந்தஞ்செய்தருளி நாதமுனிகள் முதலான பூர்வாசார்ய பரம்பரையாலெ உபதேசமாக நடந்துவந்த ரஹஸ்யார்த்தங்களையும் திவ்யப்ரபந்தார்த்தங்களையும் ஸ்தாபித்தாரென்றது ஸத்ய வசநம்। எங்ஙனேயென்னில் ஸ்ரீபாஷ்யகாரர் உபநிஷதர்த்தங்களையும் ப்ரஹ்மஸூத்ரார்த்தத்தையும் ரஹஸ்யார்த்தங்களையும் வேதார்த்தஸங்க்ரஹம் ஸ்ரீபாஷ்யம் - கத்யத்ரயம்முதலாக க்ரந்தரூபேண தாமே அருளிச்செய்திருப்பதும் திருவாய்மொழியின் அர்த்தத்தைப் பிள்ளானால் ஆறாயிரப்படி ரூபேண செய்வித்திருப்பதும் ஸர்வஸம்ப்ரதிபந்நமன்றோ. பட்டரருளிச்செய்த அஷ்டஸ்லோகியென்னும் மந்த்ரார்த்தக்ரந்தமே பின்னோர்களின் மந்திர வ்யாக்கியானத்துக்கு ஆதாரமாயிருப்பதென்றிவரேபேசினாரன்றோ? ஆதலால் பூர்வாசார்யக்ரந்தங்களின் ப்ரதிபாதிதார்த்தங்களை என்னமல் உபதேசமாக வந்த அர்த்தங்களை என்றது அயுக்தம். ஆதலால் உபதேசமாக வந்ததென்று தாம் சொல்லும் 'அர்த்தங்கள் பூர்வாசார்ய கிரந்தபாதிதமென்றும் இந்த ஆசார்யஹ்ருதயமென்னும் க்ரந்தத்தாலே ஸ்தாபிதமென்றும் சொன்னதாயிற்று. இப்படி பூர்வாசார்யதிவ்யஸூக்திஸாதிதங்களான அர்த்தங்களை ஸ்தாபிக்கவந்த ஆசார்யஹ்ருதயமென்பது தேசிகன் திவ்யஸூக்திகளை ஜயித்ததென்றது விருதாமனோரதமென்று ஸ்பஷ்டமிறே. ஆசார்யஹ்ருதயத்துக்காக

நம்பெருமாள் திருமாலைகள் ஐஷ்டமானது முதலானவிஷயங்களைத் த்ரிம்ஶத்ப்ரஶ்நோத்தரவசநத்தில் பரிஹஸித்திருப்பதே அமையுமென விடுத்தோம். நயினாரோடு தேசிகன் ப்ரதிஜ்ஞை செய்து தோற்று தேசாந்தரமெழுந்தருளினாரென்பது அஸத்யமென்னு ஸம்ப்ரதாயநிர்ணயங்களில் வாதிகேஸரி ஸ்ரீவதனித க்ரந்தத்தைப்பார்த்தால் விசதமாகும். பிள்ளை லோகாசார்யர் தாம்செய்த ரஹஸ்யக்ரந்தங்களினால் வந்தபாயகங்களை தேசிகாநுக்கிரகத்தால் நிவர்த்திப்பித்துக் கொண்டு கிருதஜ்ஞதையினாலே 'சீரொன்றுதூப்புல்' இத்யாதியான வொருவெண்பா தேசிகன் விஷயத்தில் தனியனாக அருளிச்செய்து தாம் செய்த க்ரந்தங்களை வெளியிடவேண்டாமென்று மறுத்து விட்டாரென்றும் அவருக்குப் பிற்காலத்தில் அவர்தம்பி நயினார் அவைகளை வெளிப்படுத்தி ஸம்ப்ரதாயக்ஷோபமுண்டுபண்ணினாரென்றும் ப்ரஸித்தமான ஸைதிஹ்யத்தை மறைக்கவேண்டுமென்று [௫௯-ம் பக்கத்தில்) பிள்ளை லோகாசார்யர் ஜீவதசையிலே நயினார் திருநாட்டுக் கெழுந்தருளினாரென்ற அஸத்யவசநமவஹாஸ்யமிறே. ஜீயரீடுபாட்டில் மணவாளமாமுனி தேசிகஶிஷ்யரான கிடாம்பி நயினாரிடத்தில் ஸ்ரீபாஷ்யாதிக்ரந்தங்களதிகரித்து முன்புண்டாயிருந்த ஸாங்கேதாக்ரஹத்தைவிட்டுத் திருந்தினாரென்றிருப்பதை மறுக்கநினைத்து கிடாம்பிநயினார் அழகிய மணவாளப்பெருமாள் நயினாரிடத்திலாஶ்ரயித்தாரென்றதுமப்படியே. 'எள்ளாதிருப்ப விழினர்போற்றற்குரியர்' என்கிறபடி ஸாங்கேதங்களுக்கு அவஷ்டம்பகமாகுமென்றெண்ணி அநேக கதைகளைக் கட்டிச் சொல்லுவதால் பெரியபெருமாள், தேவப்பெருமாளென்று ப்ரஸித்தாநவரதகத்வத்துக்கே ஸஜ்ஞத்வ ஶிதஜ்ஞத்வ ஜாக்ரத்வாதிகள் கல்பிப்பதாவதேயன்றி அந்தகதைகள் ப்ரபலப்ரமாணபாதகமாகாவென்பது ஸ்பஷ்டமிறே. வநஹலக்ஷணத்துக்கு பாதகமொன்றுமில்லாவிடத்து தத்ஸாதநார்த்தமாக வேறொன்றுண்டாக வேண்டுவதில்லையே. அதற்கு எதனால் பாதகம்வந்ததோ அதைப் பரிஹரிக்க இந்த ஸூவாயஹ்ருதயம் வல்லதோ அல்லதோ அதை ஸுதியர் கண்டுகொள்ளக்கடவது. த்ரிம்ஶக்ரு

ஸ்தோத்ரவ்யாக்யாநடீக வ்யாக்யாநத்திலே ஶகாப்தம் ௧௧௯௨-வது விபவாப்தத்தில் தேசிகன் திருவவதாரமென்றும் மறுவிபவவருஷத்துக்குப் பின்னிட்ட ஸௌம்யவருஷத்தில் தேசிகன் திருநாட்டுக் கெழுந்தருளினதாகவும் அதுக்கடுத்த ஸாதாரணவருஷத்தில் மணவாளமாமுனி அவதரித்ததாகவும் சொல்லியிருக்குமிவர் இதில் (௯௩-வது பக்கத்தில்) ஶகாப்தம் ௧௨௯௨வதான ஸாதாரணவருஷத்தில் மணவாளமாமுனி அவதரித்தாரென்று சொல்வதால் ஸ்வவாக்யங்களுக்கு பரஸ்பரவிரோதம் ப்ரஸம்ஜிக்கிறதென்பதை நோக்கில்லாத இவர் ஸம்ப்ரதாயவிஷயத்தில் கட்டிய கதைகள் பரமப்ரமாணமாயிருப்பதெங்ஙனே. தம்மிஷ்டப்படியே ஒருவரைப் புகழவும் மற்றொருவரை இகழவுந்தலைப்பட்டார். 'குருட்டுக்கண்ணஞ்சுமோ விருளைக்கண்டு' என்கிறபடி இவருடைய திறமிருப்பதை ஸஹ்ருதயர்கள் காணுதிராரிறே. திருவாய்மொழிப் பிள்ளைவரையிலுள்ள ஆசார்யர்கள் மஹாவைபவவான்களாய் க்ரந்தநிர்மாணாதிகள் செய்து வந்து கொண்டிருக்க க்ருஷ்ணாத்தாய் ஸம்ப்ரதாயக்கேடு வந்ததாகவும் அதற்காகப்பெரியபெருமாள் திருவனந்தாழ்வானை பூமண்டலத்தில் அவதரிக்க நியமித்ததாகவும் அவர் மணவாளமாமுனியாக அவதரித்தாரென்றும் சொல்வது ஸ்வகபோலகல்பிதமென்று த்ரிம்ஶகவ்ய ஸ்தோத்ரத்திலுள்ள 'இவர் ஶேஷாவதாரமென்பதை சங்கித்தால் வேதாந்தாசார்யர் ஸநந்தாவதாரமென்பதையும் சங்கிக்க ப்ரஸங்கிக்கு' மென்னுமிவர் வாக்கியத்தாலே ஸித்தமாகிறது. மணவாளமாமுனியின் மாதாபிதாக்கள் சிக்கல் கிடாரமென்னுங்கிராமத்திலிருப்பவர்களென்றும் அங்கே மணவாளமாமுனி அவதரித்தாரென்றும் ஜீயரீடுபாட்டில் சொல்லப்படுகிறது. இவர் எதுக்காகவோ அவர் அவதாரம் ஆழ்வார் திருநகரிலென்றும் வளர்ந்தது சிக்கல் கிடாரத்திலென்றும் சொல்லியிருக்கிறார். த்ரிம்ஶகவ்ய ஸ்தோத்ரத்தில் 'விரோதிக்ருதுவருஷத்தில் நம்பெருமாள் கோயிலுக்கு மீண்டெழுந்தருளின' ரென்றும் இதில் பரீதாபிவருஷத்தில் எழுந்தருளினாரென்றும் இவரொருவரே பேசுவது அஸங்கதமாகையால் இந்த ஐதிஹ்யத்தில் இவர்

செய்த ஸ்வப்நே ஸத்யமென்றும் 'தேஶிக ஸம்ப்ரதாயஶாஸ
நத்தாலே நம்பெருமாள் மீண்டெழுந்தருள, அவ்விஷயத்தில்
ஸஹகாரியாய்நின்ற ஶ்ரவணாயுரை தேஶிகன் ஸம
வந்நியமனத்தாலே ஒருஶ்லோகஸேவை ஸந்தித்து நம்பெருமா
ளைஸேவித்துக்கொண்டு சிலவருஷங்கள் எழுந்தருளியிருந்துபின்பு
திருநாட்டுக் கெழுந்தருளினர்' என்கிற ஸம்ப்ரதாயவார்த்தை
யுமே ஸத்தியமென்றும் தெளியக்கடவதிறே. திருவாய்மொ
ழிப்பிள்ளை "இனி உபதேஶ ப்ரவர்த்தகராவா' ரென்று கருதும்
போது மணவாளமாமுனி வந்தாஶ்ரயித்ததாகவும் அவர் ஒரு
அவதாரவிசேஷமென்று ஸர்வஜ்ஞரான திருவாய்மொழிப்பிள்ளை
அறிந்ததாகவும் அவர் நிஷ்டாவிசேஷத்தால் ப்ரீதராய் உடைய
வர் திருவடிகளை ப்ரஸாதித்ததாகவும் அவாருளிச்செய்த யதி
ராஜவிம்ஶதியைக்கேட்டு மிகவும் உகந்தருளினதாகவும் உடை
யவரை இவருக்காராதநமாகக்கொடுத்து இவரிடத்தில் விசே
ஷாபிமானஞ்செய்துகொண்டிருந்ததாகவும் மற்ற தம் சிஷ்யர்
கள் இவர் சேஷாவதாரமென்று நம்பும்படி ருஜுப்பித்ததாக
வும் சொல்வதால் திருவாய்மொழிப்பிள்ளை மணவாளமாமுனி
யையே உபதேஶப்ரவர்த்தகராகத் திருவுள்ளம்பற்றினதாகச்
சொன்னதாயிற்றே. ஆதலாலிவருக்கு அவர் தாமே ஸகலஶா
ஸ்த்ரங்களையும் ஸாதிக்கவேண்டியிருக்க அப்படிச்செய்யாமல் 'ஸூத்
ர ஒருதரம் பாஷ்யங்கேளு' மென்று ஸந்நிதியில் நிய
மித்தருளினரென்றதனால் திருவாய்மொழிப்பிள்ளைக்கு ஸ்ரீபா
ஷ்யம் ஸாதிக்க யோக்யதையில்லையென்று விளங்குகிறதிறே.
இன்னமும் எம்பெருமானருக் குகப்பாக ஸக்ருத் ஸ்ரீபாஷ்யம்
கேட்டு எம்பெருமானருக்கும் நமக்குமுகப்பாகத் திருவாய்
மொழி முதலான ஸ்ரீஸூக்திகளையே பரிஶீலநம் பண்ணு'மென்
று நியமித்ததாகச் சொல்வதால் ஸ்ரீபாஷ்யஶ்ரவணம் திருவாய்
மொழிப்பிள்ளைக் குகப்பாகாதென்றும் ஸ்ரீபாஷ்யஶ்ரவணாபா
வம் எம்பெருமானருக் குகப்பாகாதென்றும் விஶதமாகிறதே.
இதனால் திருவாய்மொழிப்பிள்ளை எம்பெருமானருகப்புக் குரிய
வரல்லரென்று ஸ்பஷ்டமாகிறதிறே. (சுஅ பக்கத்தில்) திரும
லைக்கெழுந்தருளியென்றிருக்கிறது. இது ஹஸ்திகிரியென்று

பொருள்படவேண்டியிருக்கிறது. இப்படி வ்யாகரணவாசகமொன்றுமில்லாமல் ஹஸ்திகிரிக்குத் திருமலையென்று சொல்லுகிற ஸம்ப்ரதாயங்காண்கிலோம். தேவப்பெருமாள் மணவாளமாமுனியைப்பார்த்து திருப்பவனந்திறந்து நம்மிராமாநுஜனைப் போலிருப்பாரொருவரைப் பெற்றோமென்றருளிச்செய்ததாகச் சொல்வதாலவர் அயுக்தவாதியென்றதாயிற்று. ஏனென்றால் எம்பெருமானுக்கு திருக்கச்சி நம்பிமுகேந சில அர்த்தங்களைத்தாமருளிச்செய்தாரேயன்றி இப்படி திருப்பவனந்திறந்து ஸாக்ஷாத்ஸம்பாஷித்ததாகக் காணப்படாமையால் மணவாளமாமுனியை இராமாநுஜனிலும் சிறந்த ஒருவரென்னவேண்டியிருக்க அவரைப்போன்றவராகச் சொல்வது அஸங்கதமாகிறதிறே. இப்படிப்பட்ட பொய்க்கதைகள் கட்டுகிறவர்கள் யதார்த்தவிஜ்ஞம்பண்ண மனதுக்கிடங்கொடுக்கிறதில்லையிறே. இன்னமும் 'மற்றில்ல புகழ்தலின் வைதலே நன்றென்'கிறபடி இவர் அயுக்தகல்பனைகளால் புகழுண்டாக்கப் பார்ப்பது இகழ்தலிலுங்கொடிதாக முடிகிறதிறே. ஸ்ரீபெரும்பூதூரில் எம்பெருமானாரை ஸேவித்து ஆனந்தித்து ஸ்ரீபாஷ்யப்ரவசிக்க அநுமதிகொண்டு ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் சிஷ்யரான கிடாம்பிநயினார் பக்கல் ஸ்ரீபாஷ்யப்ரவசித்தாரென்றதனால் ஜீயரீடுபொட்டில் சொல்லியிருக்கும் விஷயங்கள் ஸத்தியமென்று கண்டுகொள்ளக்கடவது. யதிராஜவிம்ஶதி ஆழ்வார்திருநகரியிலே செய்ததேயன்றி ஸ்ரீபெரும்பூதூரில் செய்ததன்றென்று (௯௫-ம்பக்கத்தில்) எழுதிவைத்திருப்பது அஸத்தியமென்று யதிராஜவிம்ஶத்யர்த்தவராஶேஷத்தால் வ்யாகரணஜ்ஞரான பெரியோர் நிஶ்சயிப்பார்கள். அப்படியே கிடாம்பிநயினார் அழகிய மணவாளப்பெருமாள் நயினாரிடத்தில் ஆஶ்ரயித்திருந்ததாகச் சொன்னதும் அவிஶ்வஸநீயமென்று ஐதிஹ்யஜ்ஞவர்த்திகளறிவாரிறே. சொன்னவண்ணஞ்செய்தவெம்பெருமான் ஸந்நிதியில் உபயவேதாந்தகாலக்ஷேபம் ஸாதித்ததாகவும் அதனால் அங்குள்ள யதீந்த்ரப்ரவணவிக்ரஹ ஜ்ஞாநமுத்ராதிசிஹ்னங்களுடனின்றுவரைக்கு மிருப்பதாகவும் சொல்லி ஸோபபத்திகமாக யதீந்த்ரப்ரவணவைபவத்தை உபபாதித்தோமென்று மகிழ்ந்தது அத்யுபஹாஸ்யம். எங்ங

ணமெனில் அப்போது த்ரிதண்டமில்லாமையால் அங்கே காலக்ஷேபப்ரகாரணஸம்பந்தியான ஜ்ஞாநவைராக்யத்தை வ்யஞ்ஜகமாகக்கொண்டவர் த்ரிதண்டதாரியான வடிவமேறியருளப்பண்ணஹேதுவில்லையே. இன்னமும் அங்கே காலக்ஷேபவ்யஞ்ஜகவைராக்யம் சிறப்பாயிருப்பதனால் பொதுவாக மற்றவிடங்களில் அவர் காலக்ஷேபம் ஸாதிக்கவில்லையென்றதாக ப்ரஶம்ஸித்து ஸ்வவாக்கியங்களுக்குப் பெரும்பாலும் அஸத்யத்வம் ஸித்திக்கிறதிறே. இவ்வளவுக்கு விஶ்வஸிப்பதையொழிந்து கல்பனைகள் செய்யப்புகுந்தது ஜால்மக்ருத்யம். புளுகினாலும் பொருந்தப்புளுகவேண்டுமென்பார்களிறே. ஆளவந்தாரெம்பெருமானாரெம்பார் முதலான பூர்வாசாரியர்கள் ஆசௌசபீதராய்ஸந்யாஸபரிக்ரஹம்பண்ணினார்களல்லர். இவர் ஆசௌசபயத்தாலே ஸந்யாஸபரிக்ரஹஞ்செய்தாரென்றதினாலே விலக்ஷணத்வம்ஸித்தித்திருக்க, எதுக்காக வேறு கதைகள் கட்டுவது. ஆசௌசபயத்தால் துர்யாஶ்ரமஸ்வீகாரம்பண்ணினதாகச் சொல்வதால் வர்ணாஶ்ரமதர்மக்ரமம் அநுஷ்டிக்கவேணுமென்று நிதர்சிப்பித்தவர் க்ரமவிதிபண்ணப்பார்ப்பது அஸங்கதமிறே. ஆகிலும் சரமாவஸ்தைக்கு க்ஷணவிளம்பமுந் தாங்கமாட்டாதவரென்று ஸ்தாபித்தால் பின்னிட்ட அவஸ்தையில் அஶக்திப்ரஸங்கத்துக்கு பரிஹாரமாகுமென்று நினைத்து ஆசௌசபீதராய் ஸந்நியஸித்துக்கொண்டாரென்று சொன்ன ஸாகூதவாக்யமிதென்று ஸுவ்யக்தமாகுமிறே. ஆசார்யபுருஷர்கள் மற்றொரு ஆசார்யபுருஷஸந்ததியில் ஆஶ்ரயிப்பது அதிசயாவஹமென்று பல ஆசார்யபுருஷர்கள் கோமடத்தாழ்வான் திருவம்ஶ்யரான ஜீயர்பக்கலாஶ்ரயித்தார்களென்றும் பெரியபெருமாள் ஸாக்ஷாத்தாகவும் ஸ்வப்நத்வாரமாகவும் பலரை நிர்ப்பந்தித்து ஜீயரிடத்திலாஶ்ரயிப்பித்ததாகவும் சொல்வதனால் ஜீயர் இடத்தில் ஜ்ஞாநாதிகல்யாணகுணங்கள் விசேஷித்து இருப்பதாகக்கண்டு மஹாவிஶ்வாஸபூர்வகமாக ஆஶ்ரயித்திலரென்பது அஸம்பாவிதமாயிற்றிறே. இன்னமும் நஞ்சீயர் நம்பிள்ளை திரு

வாய்மொழிப்பிள்ளை முதலானவர்களுக்கு ஒருகூரவாயப்ரவர்த்த ஷவம்சமும் கல்பிக்கப்பட்டிராமையால் அவர்கள் ஆசார்யப்ர வர்த்தகர்களென்பது விஸமாகையால் திருவாய்மொழிப்பி ள்ளை ஶிஷ்யரான ஜீயருக்கு கோமடத்தாழ்வான் திருவம்சத் தில் ஜனனம் ஸத்யமாயிருக்கினும் ஆசார்யப்ரவம்ஸம் விஹ ஷ்டமாயினதென்பது ஸ்பஷ்டமிறே. (எ௰-பக்கத்தில்) க்ருஷ் ஞானந்தியென்பவன் ஜீயரோடு வாதஞ்செய்ய வந்ததாகவும் பெருமாள் ஸேவைக்கு விரோதமாக அவனுடன் வாதஞ்செ ய்ய ஸம்மதிக்காமல் ஜீயர் கலங்கியிருந்ததாகவும் பெரியபெ ருமாள் நியமனத்தாலே கந்தாடையண்ணன் அந்த க்ருஷ்ணாந ந்திக்கு உபாத்யாயரான வேடலப்பைக்கு ஸ்ரீமுகம் அனுப் பினதாகவும் அவர் தம் சிஷ்யரான ஶாஸ்த்ரி ஆச்சான்பிள்ளை யும் கூட்டிக்கொண்டு கோயிலுக்கு வந்ததாகவும் அவர் வந்த காரியமுணர்ந்த க்ருஷ்ணாநந்தி அவரிடத்தில் வணக்கமாக வி டைபெற்றுப் போய்விட்டதாகவும் வேடலப்பையும் அண்ண னும் ஜீயர் ஸந்நிதிக்குப்போக வ்ருத்தாந்தம் அறிந்த ஜீயர் முத லியாண்டான் திருவம்சப்ரபாவத்தை மெச்சி வேடலப்பையை தம்மிடத்திலிருக்கச்சொன்னதாகவும் அவர் தமக்கு மாறாக ஶாஸ்த்ரி ஆச்சானை நிறுத்தி விடைபெற்றுப் போனதாகவும் ஶாஸ்த்ரி ஆச்சான் சிரகாலம் ஜீயர் ஸந்நிதியில் ப்ரதிவாதிநிர ஸனம்பண்ணிக்கொண்டு ஜீயர் பக்கல் ரஹஸ்யார்த்தங்களை ஸ்வீ கரித்துக்கொண்டிருந்து பின்பு ஜீயர் ஸ்ரீரங்கராஜவிக்ரஹத்தை க்கொடுத்து விடைகொடுக்கத் தம்மூருக்குப் போனதாகவுமெ ழுதியிருப்பதில் ஜீயருடைய திறமின்னதென்று தெரியவரு கிறதிறே. அதெப்படியெனில், க்ருஷ்ணாநந்தியோடு வாதம்ப ண்ண வல்லமையிலாமையை பகவத்ஸேவாஹேவாகவ்யாஜத்தா லே ஒளிக்கப்பார்த்ததாகிறது. இல்லாவிட்டால் ஸ்ரீயாமுநாசா ர்யாநுஜாசார்யாவாயர்கள் ப்ரதிவாதிநிரஸனங்கள் பண்ணினதா கச்சொல்லப்படும் வைதிகஹ்ருங்களால் அவர்களுக்கு பெரு மாள் ஸேவையில் ஶ்ரத்தாதார்ட்யம் சொல்ல ப்ரஸங்கமிக்குமிறே. வேடலப்பை கந்தாடையண்ணனுக்கு ஞாதியாயும் க்ருஷ்ணாநந் திக்கு உபாத்யாயராயுமிருப்பதனால் ஆசார்யபுருஷஸம்பந்தியா

மென்கிற அபிப்ராயத்தினாலே அவருக்கு இவர் பத்ரிகை யனுப்பினார்- அந்த பத்ரிகை பெருமாள் ஸ்ரீமுகமென்றது முன்னிலும் பின்னிலுமுள்ள பல கல்பனைகளின் நடுவில் சேர்க்கப்பட்டதென்று அத்யுஸ்பஷ்டம். இன்னமும் ஸ்வமதத்தில் ஜ்ஞாதவ்யலேஶமன்றிக்கே யாவதர்த்தமும் கூவாயூர் பக்கல் க்ரஹித்துள்ளவர்களுக்கே ப்ரதிபக்ஷநிரஸநஶக்தியுண்டாகையால் ப்ரதிவாதிநிரஸனஞ்செய்துகொண்டிருந்த தாஶரதி ஆச்சான் ஜீயரிடத்தில் விசேஷார்த்தங்களை அதிகரித்துக்கொண்டிருந்தாரென்ற கல்பனை அஸம்பாவ்யம். ஆனால் ஜீயரிடத்திலவர் விசேஷார்த்தங்களை க்ரஹித்துக்கொண்டிருந்ததாகச் சொன்னது அர்த்தாந்தரவிஷயமாய் ப்ரதிவசனமாவதற்குத்தடையில்லை. அதாவது விசேஷார்த்தங்கள் மிகு பொருள்களென்பது. இன்னமும் ஜீயருக்கு ஸமவத்வாதராயமாக க்ருஷ்ணஸூரியோடு வாதம்பண்ணத்திருவுள்ளமில்லாவிடினும் தம் அஷ்டதிக்கஜங்களில் பலரப்போதிருந்தார்களே அவர்களைக்கொண்டு தந்நிரஸனஞ்செய்வது உசிதமாயிருக்க அங்ஙனஞ்செய்யாது அவனுடைய உபாத்யாயரை வருவிக்கும்படியான உபாயந் தேடியதை நிரூபிக்கும்போது இவரது ஜ்ஞாநஶக்திவர்த்திதமென்றும், அவதாரத்வவர்த்திதமென்றும் விஶதமாகிறதிறே. இவ்விஷயத்தை ஜீயர் 'உதம். ஶௌரிவ்யூஹவக' என்று ஸ்ரீஸூக்தியாலே வெளியிட்டிருக்கிறாரிறே. தாஶரதியாச்சான்போன பின்பு ப்ரதிவாதிபயங்கரம் அண்ணனை வரவழைத்துக்கொண்டவிஷயத்தில் கோத்திருக்கும் கல்பனைகள் அத்யந்தவிஶ்வாஸநீயங்கள். ஏனெனில் ஹஸ்திகிரிநாதரென்றும் அண்ணனென்றும் பேருள்ள அவர் கூவாயூர் நாதப்ரஸாதத்தால் ப்ரதிவாதிநிராகரணஞ்செய்ய அதனால் ப்ரீதிகொண்ட ஆசார்யானதுப்புல் நயினாராவாயூர் ப்ரஸாதித்ததன்றோ ப்ரதிவாதிபயங்கரரென்னும் திருநாமம்? அப்படி ப்ரஸித்தரான ப்ரதிவாதிபயங்கரம் அண்ணனை விசேஷார்த்தங்களால் (அதிகப்ரவங்களால்) உபந்யாஸம்பண்ணிவரவழைக்க ப்ரயோகிக்கையால் வந்த அவரும் ஜீயரிஷ்டப்படி அவருக்கு சிஷ்யத்வத்தை வஹித்து ஸத்ஸம்ப்ரதாயக்ரமவைலக்ஷண்யமாக ஊர்த்வம்ஸகேத ப்ரவ

தர்சந ப்ராமாண்யஸ்வத்துவத்தைக் கொள்ள உடன்படாதவர்கி தேசிக ஸம்பந்தராகாதபேர்களுக்கு ராமாநுஜீயத்வமும் நற்கதியுங்கிடையாதென்னும் சபத வ்யாஸாந ஸ்வதந்த்ர ஸ்ரீஸூக்தியென்று ப்ரஸித்தமான தேசிகஸ்தோத்ரமருளிச் செய்தாரிறே. இந்த ஸத்யமான வ்ருத்தாந்தத்தை ஒளித்து ஸ்வஸித்தாந்தங்கள் செய்யப்பார்த்தால் அது ஸர்வஸித்தாந்த விரோதமாகிறது. 'ப்ரதிவாதி பயங்கர' ரென்னும் ; ஸாதாரண மௌணநாமமுள்ள அண்ணனுக்கு ஜீயர் விசேஷணங்களை ஸாதிப்பரென்றால் கேட்பவர் நகையாரோ. அண்ணனிடத்திற்கு இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களை அனுப்பி அழைத்துவரச்செய்து கோயில் வஸிகாரங்களையும் ஸ்ரீவைஷ்ணவர்களையும் எதிரேயனுப்பிவருவிப்பது அவர் ஆசார்யஶிஷ்யராய் வரும்பக்ஷத்தில் பொருந்துமோ. ஆதலாவிப்படி ஸம்மதமான ஸந்நிவேசங்கொண்டெழுதுவது நிரர்த்தக ஜநபரிஹாஸ்யமாகுமிறே. இங்ஙனமிருக்க (௯௨-பக்கத்தில்) ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் வேதாந்தாசார்யர் ஸ்தோத்ரவ்யாக்யாநத்திலுள்ள ஸம்ப்ரதாயவிரோத ப்ரஸங்கதிகளையும் ஜீயர் வ்யாக்யாநத்திலுள்ள ஆநுகூல்யாதிகளையுங்கண்டு வேதாந்தாசார்ய ப்ரஸிஷ்யத்வத்தைத் துறந்து ஜீயரிடத்திலாஸ்ரயித்தாரென்றும் (௮௭-பக்கத்தில்) அப்புள்ளயினாசார்யர் ஸ்ரீராமாநுஜஸித்தாந்தவிஜயத்வஜமாயெழுந்தருளியிருந்தாரென்றும் இப்படி ஸர்வஸித்தாந்தவிரோதமாக மற்றொருவர் பிதற்றியிருந்தால் இவர் நிரூபகராயிருக்கும்பக்ஷத்தில் இவை ஹாஸ்யப்ரஸவங்களென்னாமலிருப்பரோ. ஆதலால் இவர் அநிரூபகரென்றும் ஹாஸ்யரென்றும் ஸித்தமாகிறதிறே. எப்படியென்றால் ஆஸ்ரயிக்க வரும் அண்ணனை ஜீயர் உபசரித்து அழைத்தல்யுக்தமன்றே. ஆதலால் தன் ஸ்வாசார்ய ஸம்பந்தமாக ஜீயர் அண்ணனை ஸம்மானபூர்வகமாய் அழைத்துக்கொண்டாரென்பது ஸ்பஷ்டமிறே. இன்னமும் ஸ்ரீராமாநுஜஸித்தாந்தவிஜயத்வஜமாயெழுந்தருளியிருக்கும் ஆசார்ய ஸம்ப்ரதாயத்தை விட்டு தத்விரோத ஸம்ப்ரதாயத்தில் ஆஸ்ரயித்தவர் ஸ்வாசார்யத்ரோஹியென்பதற்கு ஸாக்ஷ்யாந்தரம்வேண்டாமையால் இவர் ப்ரதிவாதிபயங்கரரை ஸ்வாசார்யத்ரோஹியென்று

வைததாகிறதுமன்றியில் ஸ்ரீராமாநுஜஸித்தாந்த விஜயத்வஜவிருத மான ஜீயர் ஸம்ப்ரதாயம் ஸ்ரீராமாநுஜஸம்ப்ரதாயமாகையால் ஜீயர் ஸம்ப்ரதாயஸ்தர்கள் 'அடியேன் ராமாநுஜதாஸன்' என்று சொல்வது, சதுஷ்டஸம்மதமென்றும் இவர்கள் மதம் குமத மென்றும் இவர் வாக்கினாலே ஸித்தமாகிறதிறே. (௭௨- ௭௩ பக்கங்களில்) எறும்பியப்பா ஜீயரிடத்தில் ஆஸ்ரயித்த விஷயத்தில் கல்பனை பண்ணியிருப்பது மிகவும் ஆஸ்சர்யகரந்தான். ஏனெனில் அவர் ஜீயாருளிச்செய்த ஸதுபதேசவிசேஷங்களைக்கேட்டுகந்து மஹாவிஸ்வாஸத்தால் ஆஸ்ரயிக்காமல் கோவிலாழ்வாரைத் திறக்கக்கூடாமையால் உபவாஸமிருந்து துயில்கொண்ட விடத்து பலவிதஸ்வப்நம் காணும்போது ஸ்வாசார்யரூபமான வக்ரவதீத்திருமகன் ஜீயரை ஆஸ்ரயித்த பின்பு தான் தனக்காராயனஞ்செய்யலாமென்று நியமித்தருளினதினால் மீண்டு வந்து ஜீயரிடத்திலாஸ்ரயித்தாரென்றது அயுக்த கல்பனையன்றோ. எங்ஙனமெனில் அந்த எம்பெருமான் ஸ்வப்நத்திலும் ஜீயரிடத்தில் ஆஸ்ரயிக்கும்படி அப்பாவுக்கு நியமிக்காமையாலும் ஜீயருடையவுபந்யாஸத்தைக்கேட்டு ஆஸ்சர்யப்பட்டும் ப்ராப்திகாலம் வாராமையால் ஆஸ்ரயிக்காமல் போய்விட்டாரென்றதினாலும் அப்போது நியமித்தாலும் அப்பர் தடைப்படாமல் ஜீயரை ஆஸ்ரயிப்பாராதலாலும் அந்தப்பெருமாள் கோவிலாழ்வாரையடைத்துக்கொண்டு நிஷேதித்து அனுப்பினாரென்றது அஸம்பத்தப்ரலாபம். வரதர் இங்கே ப்ரதிவாதிபயங்கரர் ஜீயருக்கு சிஷ்யராகவுடன்படாமல் சென்றபின் எறும்பியப்பா வாக்மியாயிருக்கிறாரென்று கேள்வியுற்ற ஜீயர் அவரைத் தம்மிடத்துக்குக்கொண்டு வரும்படி அண்ணனைத்தூண்ட அவரும் அப்பாவை அழைத்துக்கொண்டுவர அவரும் இவரிடத்தில் ஆஸ்ரயிக்கவிசையாமல் திரும்பிச்சென்றதினால் ஸ்வாபேக்ஷையுள்ள அவருக்கு விசேஷித்த ஸ்வப்நங்களைக்கொடுத்தனுப்பி வரவழைத்து சிஷ்யராக்கிக்கொண்டாரென்றும் அப்படி சிஷ்யத்வம்பூண்ட அப்பா தாம் ஸ்வப்நாபிலாஷத்தால் வந்து சிஷ்யரானதை மறைக்கக் கருதி வரவரமுநிப்ரபாவஸம்ஸாவாரணரென்றும் தத்வஜ்ஞான[illegible]ர் சொல்லுவார்கள். லாடபுரத்தார் விஷயத்திலுள்ள [illegible]ம்ஸ்ப்ரதர்ஸநத்தில் காணலாமிறே.

ஸத்தமோத்ரவ்யவஸ்தையும் மஹாவிஸ்மயநீயம். அதிலும் தத்காரண

ஶ்ரத்தாஸ்பதமிறே. வாடபுரத்தாரிடத்தில் சிஷ்யஸேவா ஜாதமாத்ரதோஷம் காணப்பட்டால் அதுக்காக ஸ்வமதா சார்யருக்கு விசேஷ கல்பனஞ்செய்யக்காரணமென்ன? மற்ற வர்கள் ஸ்வதந்த்ர ஜாயஸ்வாசாரஸம்பன்னராயிருந்தாலும் அவர் கள் இந்த ஸ்வமதாசார்யருடன் ஸம்பந்தாதிநஷ்டராவ தேனோ. ஸ்வமதாசார்யரில் வர்ணாவிபர்யயமுண்டாயினும் அவர்கள் ஸம்பந்தாஹராவதெப்படி. மேலும் மதாந்தமெ ன்பது தத்தத்தேசாசாரமாக ஸங்கேதிக்கவுரித்தாகுமா. இதெல்லாம் விமர்சிக்காமல் ஸாஹஸிகசக்ருதமாய் மதாந் தரவ்யவஸ்தைசெய்துவிட்டாரென்பதினால் வந்த ஏற்றமென்னவோ. வர்ணாஜாதிலிங்கநமே சுவசாரமெனக்கருதுமிவர் மதா ந்தரவ்யவஸ்தை பண்ணுவது அபஹாஸ்யமிறே. ஸர்வதத்த்வா ர்த்தஸாரவேதார்த்தமென்று சொல்லுமிவர் ஸதாசார விஷய த்தை தோஷமென்னலாகுமா. தோஷஹோதாவெம்பெருமா னென்னுமிவர் தோஷவான்களைத் துறக்குதல் ஸாரவிரு த்தமென்பதற்கு ப்ரமாணாந்தரம்வேண்டுமோ. ஆகையால் நிரு பகராமவர் இவ்விஷயத்தை விமர்சிக்குமிடத்தில் ஜீயர் தமக் குசிஷ்யராக வந்தவர்களுக்கு தாமொரு ஏற்றம் கல்பித்ததாக க்காட்டினால் மற்றையோரும் தம்மிடத்தில் வந்து சேருவரென் றுநினைத்து செய்த கபடமே இதென்று அறிவார்களிறே. உத் தம நம்பிக்குப் பெருமாள் கனவில் சொன்னாரென்பதை பிறர் நம்பும்படிச்செய்ய ஸாக்ஷியில்லாவிடினும் பெரியஜீயர்திருமேனி நிறத்தைக்கண்டு உத்தம நம்பி சந்த்யாஸம்சை பண்ணின தாக இவரே சொல்வதால் அதுவிஷயத்தில் ஸாக்ஷி தேவையில் லையிறே. தாம் சாரிகைவழியால் வந்ததனாலும் உத்தம நம்பி க்ஷாமணத்தினாலும் தம் திருமேனிநிறத்தாலும் தாம் ஶூத்ரா ம்ஶரென்று பலருமறிந்திருக்க சடகோபக் கோற்றியென்பவ ளுக்கு ‘இதை விளம்பாஞ்செய்யவேண்டா’ மென்று நியமித் தருளினாரென்றது நிஷ்ப்ரயோஜநமிறே. இன்னமும் ஜீயர் நிஷேயித்திருக்க கோற்றியம்மையார் ப்ரஸித்தப் படுத்தினதா கச்சொல்வது அஸங்கதமிறே. பெரியதிருமண்டபம்முதலான விஷயங்களைக்குறித்து த்ரிம்ஶத்ப்ரஶ்நோத்தரவம்சத்தில் பே

சியதே அமையுமென்று விடுத்தோம். ஆகிலுங்கொஞ்சஞ்சொல்லவேண்டியதுண்டு. அதாவது—இவருக்கு அழகிய மணவாளரென்றிறே திருநாமமாவது- 'ரம்யஜாமாதா.' என்றால் அதுக்கு பர்யாயமாகாதென்பது தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் ஸ்வாரஸ்யஜ்ஞராயிருக்குமவர்களுக்கு ஸ்பஷ்டமிறே. ஆகையால் இப்படி ச்லோகங்கட்டின அதஜ்ஞர்களை சிலர் பரிஹஸித்தமையாலும் அதைத் தள்ளி வேறு புணர்க்கத்தெரியாமையாலும் இது பெருமாள் அருளிச்செய்ததென்று ஸர்வஜ்ஞஸஹன்பேரில் பழிபோட்டுவிடுதல் நன்றென்று கருதிக்கட்டிய கதையென்று பெரியோர் சொல்லுகிறார்கள். இப்பால் ஈநகூகூயெகள் ப்ரஸம்ஸாவரமாகச் சொல்லியிருப்பதில் சில ஸம்மதங்களிருப்பினும் அவ்விஷயத்தில் நமக்கு ஔதாஸீந்யத்தியே யுள்ளது. ஆசார்யஹ்ருதயமென்னும் அந்வர்த்தமான பேரிடப்பெற்ற ஆர்யம் ஆசார்யவாக்யம் திவ்யஸூக்திகளாலே பாவிதமாயுள்ள அர்த்தங்களை ஸாரமென்று சொல்லும் வசநங்களின் வேஷாஞாரமவமென்று ஐயம் ஸ்பஷ்டமாகையால் தத்வ்யாக்யாநம் வார்த்த நிரஸந வசநங்க ஸ்வாரஸ்யாவந ஸாயநமென்று ஜெநாரயிப்பது அநிதியமிறே. வண்ணக்கம்ஸ்ராத்ரவஷ்டநங்களாலே பலநிக்ருஷ்டஜநங்களின் ஸஹாயத்வமும்பித்து 'ஸம்வெப்ருத்திகூலயா' என்றபடி திவ்யதேசங்களை ஜீர்ணோத்தாரம்பண்ணி விஹங்களையுண்டாக்கி எல்லா திவ்யதேசங்களிலும் கைங்கர்யங்கள் செய்துவந்ததாக உபந்யாஸிக்கிறார்களிறே. ஜீயர் நயினாருக்குக் கந்தாடையண்ணன் முப்பத்தாறாயிரம் ஸாதித்தாரென்றும் ஆதிவாஹிகஸம்வாதம். அண்ணன் ஸ்ரீபாஷ்யம் ஸாதித்தாரென்றும் சொன்னதனாலும் ஸ்ரீபாஷ்யவார்த்தமாலையில் தூப்புல்நயினார் ஆதிவாஹிகஸம்வாதரென்று இவரே யெழுதியிருப்பதனாலும் கந்தாடையண்ணன் முதலானவர்களுக்கு ஸ்ரீபாஷ்யாதிகாரமில்லையென்றும் மணவாளமாமுனி ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் ஸாதித்தாரென்றது முழுப் பொய்யென்றும் ஸுஜ்ஞேயமாகிறதிறே. போளிபாக்கம் நயினார்செய்த அஷ்டோத்தரவ்யாக்யையால் மணவாளமாமுனி செய்த அஷ்டோத்தரவ்யாக்யை அவ்யக்தமான தென்றதாயிற்றி

றே. இப்படியே இன்னுஞ்சில பின்னோரும் யதாபிமதம் வ்யவ ஹாரஞ்செய்துவிடக்கூடுமிறே. ஜீயர் திருவத்யயநவிஷயம் த்ரிம் ஶச்ச்லோகோத்தர ஸம்பந்தத்தில் காணலாம். அதை இதிலுமெழு தியது வ்யர்த்தமாகியாதலால் அதுக்கொன்றும் சொல்ல அவஶ்யமில்லையிறே. திருமழிசைப்பிரான் விரோதிகளஞ்சத் தமது ஸாக்ஷாத் ஸுதர்ஶநாவதாரத்தைக் காட்டினரென்றும் ஸ்ரீபாஷ்ய காரர் அநந்தஸ்வரூபதயா ஸம்ப்ரதாயப்ரவர்த்தநகாலத்தி லே தமது ஶேஷத்வத்தை ப்ரகாஶித்தாரென்றும் ஐதிஹ்ய ங்களுள்ளனவேயன்றி கல்தொட்டியில் க்ஷீரபானஞ்செய்த புதுமைகாண்கிலோம். முன்பு திருவனந்தாழ்வான் ஸ்ரீபாஷ்ய காரராக அவதரித்து தர்ஶநஸ்தாபநாதிகள் செய்தருளி னரேயன்றி கல்தொட்டியில் பால்குடிக்க மறந்துபோய்விட்ட தை நினைத்து அதை நடத்தும்படி மணவாளமாமுனியாக அவ தரித்திருக்கலாமென்று மத்யஸ்தர் பரிஹஸிப்பார்களிறே? இப்படி கல்தொட்டியில் பாலமுது செய்யவேண்டுமென்று ப்ராயஶ்சித்த ஸூத்ரகர்த்தர்களின் ஹஸ்தாதிஶயமிருக்கும்படியைம த்யஸ்தர்கள் நிரூபிக்கும்போது இதுநிக்ரஹநமென்றும் ஜீயரீ டுபாட்டில் சொன்னதே உண்மையென்றும் தெரிந்துகொள்வார் களிறே. ஸமாஶ்ரயணபரம்பரையில் பெரியநம்பி உடையவர் எம்பார் என்றது அஸத்யமென்றும்பெரியதிருமலைநம்பிஎம்பார் என்னவேண்டுவதென்றும் ஸம்ப்ரதாயஜ்ஞர்கள் அறிவார்கள். இந்த பரம்பரையில் தமக்கு உடையவர் ஸம்பந்தமில்லாம ற்போவது பெருங்குறையன்றோவென்று கருதி திருமலைநம் பியை வ்யத்யாஸம்பண்ணினமையால் இவர்கள் ஆசார்யத்ரோ ஹிகளெனத் தடையில்லையிறே. மணவாளமாமுனிக்குத் தம் பிதாவிடத்தில் ஸமாஶ்ரயணம் நடந்ததாக அங்கேசொல்லி இங் கே திருவாய்மொழிப்பிள்ளை மணவாளமுனியென்று பரம்ப ரையெழுதினது அயுக்தமிறே. இவை ஶிஷ்டாசாரப்ரதர்ஶ நமாதலால் ரஹஸ்யபாஷ்யாதிவிஷய பரம்பரைகளில் இருக்கும் இப்படிப்பட்ட அஸமஞ்ஜஸங்கள் நிரூபணக்ஷ மமிறே. நடாதூராழ்வானுக்கு உடையவர் பாஷ்யஸிம்ஹாஸ நமளித்தாரென்று சொன்ன இவரே அதுக்கு விரோதமாக ஆழ்

வான் ஆச்சான் ஆண்டான் முதலியவர்கள் ஸந்நிதியிலும் ஸாஷ்டாங்க முண்டென்று அயதார்த்தமாகச் சொல்லி அதைஸ்தாபிக்க எண்ணி நடாதூரம்மாள் கந்தாடையண்ணன் பக்கல் ஸாக்ஷ்யமபேக்ஷிக்கப்போனதாக எழுதினாலும் ஆண்டான் தாம் ஸ்ரீஸாஷ்டாங்கம் ஸாதிக்க ஶக்தரன்றென்றும் பிள்ளான் ஶிஷ்யரான எங்களாழ்வான் பக்கல் செல்லுமென்றும் சொன்னாரென்றதனாலே இவர் அநேகவாரம்வரையில் ஸாஷ்டாங்க முண்டென்றது அஸத்யமென்று அப்யாஸர்கள் காண்பார்களிறே. தேஶிகன் பால்யத்தில் நடாதூரம்மாள் ஸந்நிதிக்குப் போனபோது அங்கேநடந்த ஸத்யமான ஐதிஹ்யத்தை மறைத்து தேஶிகனை நோக்கி 'நீர் விஶ்வாமித்ர ஸ்ருஷ்டி பண்ணுவீரோ' வென்று அம்மாள் அருளிச்செய்ததாகச் சொன்னது ஸம்ப்ரதாயாஸம்மிஶ்ரகமான அஸத்ய ப்ரலபிதமென்று விவேகிகளுக்கு ஸ்பஷ்டமிறே, சிறுபிள்ளையை கடாக்ஷித்து விஶ்வாமித்ர கோத்ர வ்யபதேஶத்தாலே பரிஹாஸபூர்வமாக அம்மாள் அருளிச்செய்திருந்தாலும் அது ஸத்யமாகி தேஶிகன் ஸம்ப்ரதாயவிருத்தம்பண்ணினாரென்னும் பக்ஷத்தில் ஶ்ரேஷ்டரான உடையவருளிச்செய்த அர்த்தங்களை விஶ்வாமித்ர ஸ்ருஷ்டியென்று திருமாலையாண்டானருளிச் செய்தது அநர்ஹவஸம்ஹிதமான வாக்யமாகையால் அது ஸத்யமெனத் தடையில்லாமைபற்றி உடையவருளிச்செய்த க்ரந்தங்கள் ஸம்ப்ரதாய விருத்தமெனப்ரஸங்கிப்பதற்கு ப்ரஸக்தியில்லை. தூப்புல்ப்பிள்ளை யீடுபாடுமுதலிய க்ரந்தங்களில் 'பிள்ளானாறாயிரத்துக்கு விருத்தமாக அருளிச்செய்தாரென்று இந்த நவதேஶிகள் ப்ரலபித்துவருவதால் தேஶிகன் திவ்யஸூக்திகள் உடையவர் திவ்யஸூக்திகளுக்கு அவிருத்தமானவையென்று ஸித்தமாகிறதிறே. தமக்கு தென்கலையாரென்று பேர்வைத்துக் கொண்டதனாலும் ஸம்ஸ்க்ருதபூர்வமான த்ராவிட திவ்யஸூக்திகளும் உபப்ரவிகாரபூர்வமான அவைகளும் ஹிதாஹிதப்ராயமாகவிருக்கக் கூடுமென்று நினைத்த தமது। உதிராஜ்யத்தாலும் தமிழ் ப்ரபந்தங்கள் தமக்கே அநுகூலமாயிருக்கிறதாகச் சொல்லி ஸாதித்துவிடலாமென்கிற

மநோரதத்தால் உடையவரருளிச்செய்த க்ரந்தங்களை அநாதரித்து பிள்ளானாறாயிரமென்று சொல்லப்புகினும் இது அயுக்தமென்று ப்ராஜ்ஞர் சொல்வாரென்பது ஸ்பஷ்டமிறே. அங்ஙனமாகிலும் ஆறாயிரத்தோடு ஸ்ருதப்ரகாசிகாவை நிஷ்டா தாத்பர்ய த்ராவ்யாதிகள் விவக்ஷிப்பதாகவும் முப்பத்தாறாயிரம் முதலானவை ஸம்வதிப்பதாகவும் நிரூபிக்க வல்லீரோவென்றால் அப்போதிவருக்கு மௌநமோ அல்லது வேறாய நமோ ஸரணமாகுமிறே. ஸாக்ஷாத்பட்டர் விஷயத்தில் வடக்குத் திருவீதிப்பிள்ளை சொன்ன அவஜ்ஞாவசநத்தை அப்பிள்ளார் முதலானோர் மேலேற்றப் பார்த்து வடக்குத் திருவீதிப்பிள்ளை அம்மாள் ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம்பண்ணினதையே இல்லையாக்கி விடலாமென்கிற அபிப்ராயத்தாலிறே. ஸ்ரீபாஷ்யஸம்பரையில் நயினாராசார்ய சிஷ்யராக இவரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் ப்ரதிவாதிபயங்கரர் மணவாளமாமுனியிடத்தில் பஞ்சஸம்ஸ்காரம்பெற்றதாகச் சொன்னது விதண்டாவாதவிஜ்ரும்பிதமிறே. ஏனெனில் நயினாராசார்யரிடத்தில் ஸ்ரீபாஷ்யமதிகரித்தபின்பு மணவாளமாமுனியிடத்தில் பஞ்சஸம்ஸ்காரமா. மணவாளமாமுனி பக்கல் பஞ்சஸம்ஸ்காரம்பெற்ற பின்பு நயினாராசார்யர் பக்கல் ஸ்ரீபாஷ்யமதிகரித்ததா என்று விகல்பிக்குமிடத்து இரண்டும் அஸங்கதமாகுமிறே. ததாஹி பஞ்சஸம்ஸ்காரமாகாமலே ஸ்ரீபாஷ்யமதிகரித்ததாகச்சொல்ல ப்ரஸங்கித்தலாலும் ஸ்ரீராமாநுஜீயஸித்தாந்தவிஜயத்வஜரான நயினாசார்யர் விஷயமான அஸஹ்யாபசாரம் ப்ரஸங்கித்தலாலும் முதல்பக்ஷம் அஸங்கதமாகுமிறே. இரண்டாவது பக்ஷத்தில் மணவாளமாமுனி ஸ்ரீபாஷ்யம் ஸாதிக்க அசக்தரென்றும் சொன்னவண்ணம் செய்த எம்பெருமான் ஸந்நிதியில் அவர் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் ஸாதித்ததாகச்சொன்னது அந்ருதமென்றும் ஸ்பஷ்டமாகிறதிறே. இன்னமும் அண்ணனுக்கு ஹஸ்திகிரிநாதரென்கிற திருநாமமிடப்பட்டிருக்க ப்ரதிவாதிபயங்கரரென்கிற திருநாமம் காரணத்தினாலன்றோ உண்டாயிருக்கும். அந்தக்காரணமாவது ப்ரதிவாதிநிரஸநசாதுர்யமன்றோ. அந்த ப்ரதி

வாதிஹம்ஸாம்புவாஹ ஸம்ஜ்ஞை அவரை மணவாளமாமுனிவர் அழைக்கிறதற்கு முன்பேயிருந்ததாகத்தான் இவர் சொன்னது. ஆதலால் ஸ்ரீபாஷ்யமதிகரிக்காமலே ப்ரதிவாதிநிரஸனம்பண்ணினதாகச்சொல்வது அஸம்கதமென்பதனாலும் நயினாராசார்யர்ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்யமதிகரித்து ஸுதிவ்யஸிஹான அண்ணன் வம்சவம்ஸ்காரமில்லாதிருந்ததாகச் சொல்வது அதீவாஸம்கதமாகையாலும் ப்ரதிவாதிநிரஸநக்ஷமமான ஸஜீவீநஜ்ஞாநத்தைத்தந்தருளிய நயினாராசார்யர் திருவடிகளில் அண்ணன் அபசாரப்பட்டிருந்தால் அதுக்கு மேற்பட்ட பாதகமில்லாமையால் இவர் ப்ரதிவாதிஹம்ஸாம்புவாஹரையும் தத்விக்ரஹத்தாலே ஜீயரையும் அதிபாதகிகளென்று சொன்னதாக ப்ரஸம்கிக்கிறது. நயினாராசார்யர் பக்கல் ஸுயிக்ஷிதஸம்ப்ரதாயவ்யாவ்யாநம் ஸுஶாஸ்த்ரமென்று ஜீயரிடத்திலாஶ்ரயித்தாரென்றது ஸத்யமானால் நயினாராசார்யர் ஸ்ரீராமாநுஜஸித்தாந்த விஜயத்வஜஹஸ்தரென்றது ஸுஸத்யமெனவேண்டும். அது ஸத்யமென்றால் இது ஸத்யமென்பது வசவ்யவஸ்வதோநிரஸ்தமிறே. வாஸ்தவ- ஸ்ரீராமாநுஜஸித்தாந்தவிஜயத்வஜஹஸ்தரான நயினாராசார்யருடைய க்ருபாகடாக்ஷத்தாலே ஸகலஸம்ஶயவிபர்யயநிராவரணக்ஷமமான திவ்யஜ்ஞானம்பெற்ற ப்ரதிவாதிஹம்ஸாம்புவாஹர் அந்த ஸம்ப்ரதாயத்தில் ஸுஶாஸ்த்ரி கண்டு மற்றொரு ஸம்ப்ரதாயத்தில் ப்ரவேசித்த பக்ஷத்தில் அவர் ஶாஸ்த்ரமென்று கண்ட ஸம்ப்ரதாயம் அவராலே பூர்வம் நிரஸ்தமான ஸ்ரீராமாநுஜதர்சன விருத்தபக்ஷமாகவாவது தத்ஸஜாதீயபக்ஷமாகவாவது இருக்கத்தகுமென்பதற்குத்தடை சொல்லவர்க்கில்லையிறே. இப்படி இவர் சொல்லும் உபைதிஹ்யங்களால் இவர்கள் ஸ்ரீராமாநுஜஸித்தாந்தபாஹ்யர்களென்றே சொல்ல ப்ரஸக்தம்- இப்படி உபஸம்ஹாரகதாஹிநிவேஶஸம்ஹாரதமஸ்ஸாரப்ரஹப்ரஹாவிஷ்டராய் வசவெப்தாதரஸ்வவசநவ்யாஹதிக்கஞ்சாமல் வாய்க்கு வந்தது பேசினும் அவற்றையெழுதிவைத்தது ஸுதிஸாஹஸக்ருத்யம். 'ஸஹஸ்ரம்வத ஜநகேஸ் லிவ' (ஆயிரம்பொய் பேசினும் பேசு- ஒரு பொய்யேனுமெழுதாதே) என்பார்களிறே. இன்னமும் த்ரிம்ஶகவ்ரஷ்டநந்தநாத்

தில் வேதாந்தாசார்யருக்கநந்தரம் அண்ணனைச்சொல்லி இது ப்ரவர்த்தமானஸ்ரீபாஷ்யபரம்பரையென்றும் ஆழ்வான் ஆண்டான் முதலானார் வம்சஸ்தருக்கு ஸ்வஸ்வவம்சத்தில் பாஷ்யபரம்பரை அதில் ஆச்சான் திருவம்சஸ்தரான கிடாம்பிநயினார் பக்கலிலே மணவாளமாமுனிகளுக்கு பாஷ்யாத்யயனமென்றுஞ் சொல்லிவிட்டு இதில் (௬௮-பக்கத்தில்) கிடாம்பிநயினாருக்கு ஸ்ரீஸேநாபதிஜீயர் பக்கல் ஸ்ரீபாஷ்யாத்யயனமென்றுசொல்வதனால் இவருக்கு முன் சொன்னதும் பின் சொல்வதும் விரோதிப்பதில் அச்சமில்லையென்றும் இவர் சொல்வதில் சிற்சில வசனங்கள் ஸம்மதங்களாயிருந்தாலும் அவை பூர்வாசார்யக்ரந்தவசனங்களேயன்றி ப்ராயிகமாக அஸம்மதவசனங்கள் தானிருப்பவையென்றும் கண்டுகொள்ளத் தக்கதிறே. இன்னமும் நயினாராசார்யர் பக்கல் ஸ்ரீபாஷ்யமதிகரித்த அண்ணன் (௭௩-பக்கத்தில்) 'ஸ்ரீமாந் ஸுந்தரஜாமாத்ருமுநி: ப்ரணதார்யபாஷ்யக்ருத:| பாஷ்யம் வ்யாக்யாதவாந் ஸ்ரோத்ருகோடீரதாயய:!' என்றருளிச் செய்ததாகக் கட்டத்துணிந்தது ஸாதாரஸம்மதமிறே. இதனால் 'மணவாளன்' என்கிற தமிழ் சொல்லும். 'ஜாமாதா' என்கிற ஸம்ஸ்க்ருதச்சொல்லும் அபிந்நார்த்தமென்று ஷிஷ்டபரிக்ரஹமுண்டென்று ஸாதிக்கலாமென்று மேமநோரதிப்பத்ததனை போக்கி அது ஸித்தியாதிறே. (த்ரிம்சத்ப்ரச்நோத்தரத்தில்) கோயில் கர்ணக்ஷேத்ரவருஷகாலத்தில் வேதாந்தாசார்யர் அபீதிஸ்தவமருளிச்செய்து தம்மை ரக்ஷித்துக்கொண்டதுமன்றி ஸ்ருதப்ரகாசிகையையும் ரக்ஷித்து வாத்து விநியோகமுஞ்செய்தருளினதாகச் சொன்ன இவர் இதில் (௮௮-பக்கத்தில்) உத்தண்டபட்டரும் தூப்புல்பிள்ளையும் உபாயத்தால் ஆபத்துக்குத் தப்பி ஸுதர்சனபட்டர் திருமாளிகை சேர்ந்து ஸ்ருதப்ரகாசிகையை உத்தண்டபட்டர் கொடுக்க தூப்புல்பிள்ளை வாங்கிக்கொண்டு உத்தண்டபட்டருடன் மேனாட்டுக்குப்போயிருந்து அவ்விடத்தில் ஸம்ப்ரதாயபூர்வமானஸ்ருதப்ரகாசிகாபாடங்களை அதிகரித்தாரென்றது அஸம்மதமிறே. ஆதலால் இவர் ஒவ்வொரு காலங்களில் ஏறியும் குறைந்துமிருக்குந்தமது ஆசயத்துக்கேற்க அப்போதப்போது தமக்கு

த்தோன்றியவண்ணம் ஐதிஹ்யங்களை ஐதிஹ்யங்கள் செய்வரென்றுகண்டுகொள்வது வேதாந்தாசார்யர் உத்தண்டபட்டரிடத்தில் ஶ்ருதப்ரகாஶிகாசார்ய ர்களைக் கேட்டதாகப் பொய்க்கதை கட்டியதினாலிவருக்கொரு ப்ரயோஜநமும் வந்ததாகப் புலப்படவில்லையாதலாலிது யதார்த்தமாயிருக்கலாமென்றாலும் வேதாந்தாசார்யர் வைஷ்ணவப்ர காஶிகாதிகளில் இந்த ஐதிஹ்யங் காணப்படாமையாலும் இவரே த்ரிஶக்வப்ரஸ்தோத்ரத்தில் இப்படிச்சொல்லாமையாலும் இங்கே சொன்னது பொய்யென்னத்தடையில்லையிறே. இன்னமும் உத்தண்டபட்டர் ஶ்ருதப்ரகாஶிகாசார்ய ஸமவயஸ்கமாயிருந்தால் அது வேதாந்தாசார்யராலே ரக்ஷிதப்ரவஸ்திதையாகவேண்டியதென்ன? அவராலே ப்ரவசிக்கப்படலாமே. அவர் உத்தண்டரென்று யௌகிகமான திருநாமமுடையவரென்றதனால் அவரே ஶ்ருதப்ரகாஶிகாரக்ஷகராகலாமே. அப்படிக் காணப்படவில்லையே. ஆதலால் இவர் கல்பனை நம்பத்தகுந்ததன்றிறே. இன்னமும் ஸம்ஸாரார்த்தம் ஷாஸெஸ்யாவாசார்யர் அருளிச்செய்த வைஷ்ணவப்ரகாஶிகை ௧௩௪-வது ஶ்லோகத்தில் ஸுதர்ஶனபட்டர்குமாரர்களுக்கு தேஶிகன் உபநயனம் செய்வித்ததாகவும் ௧௩௧-௧௩௨-ல் ஸுதர்ஶநபட்டரே தேஶிகனிடத்தில் ஶ்ருதப்ரகாஶிகையையும் ஸ்வபுத்ரர்களையுமொப்பித்ததாகச் சொல்வதால் தவிரோதமான இவரது கற்பனை ஸம்மதமிறே. நஞ்சீயர் நம்பிள்ளை முதலானோரைத் தென்னாசார்யரென்றும் எங்களாழ்வான் அம்மாள் முதலானோரை வடவாசார்யரென்றும் க்ரந்தங்களிலெழுதியிருப்பதுண்டென்பதனால் அதற்குமுன் ஸம்ப்ரதாயபேதமில்லையென்று உறுதியாவதாலும் இந்த தர்ஶனத்துக்கு ப்ரவர்த்தகரான எம்பெருமானாருளிச்செய்த ஸ்ரீபாஷ்யாதிக்ரந்தங்கள் எங்களாழ்வான்முதலானவர்கள்வரையில் மிகுதியாக ப்ரவசிக்கப்படுமென்று ஸர்வஸம்மதமாகையாலும் இந்த தர்ஶனத்துக்கு நயினாராசார்யர் விஜயத்வஜமென்றதனாலும் தவீர்க்கமான இந்த வம்ஶ பிள்ளானைத்தொட்டுவருகையாலும் அவரே திருவாய்மொழிக்கு வ்யாக்யாதாவாகையாலும்

அவர் துடக்கமாகவருகிற இந்த ஆசார்யபரம்பரையே உப
யவேதாந்தாதிகாரிணீயென்று நிர்ணீதமாதலாலும் நஞ்
சீயர் வரையில் ஸம்ப்ரதாயபேதமில்லையென்றும் நஞ்சீயர் [illegible]
யத்தை நம்பிள்ளை எழுதும்போது சில மாறியு மேறியுமிருப்ப
தாக இவர்களுமொப்புக்கொண்டிருக்கிறபடிக்கு நம்பிள்ளை வட
க்குத் திருவீதிப்பிள்ளை காலங்களில் ஸம்ப்ரதாயத்தில் சில
கார்யபேதமாத்ரத்தால் வைஷம்யஸம்பாவிதமானதாக ஸர்வஸ
ம்மதமாதலாலும் இந்தப்பிள்ளான் ஆச்சான் முதலான
ஆசார்யபரம்பரைகளிரண்டினாலும் ஸ்ரீபாஷ்யரஹஸ்யார்த்த
ங்களைப்பெற்று வாதிஹம்ஸாம்புவாஹரென்று ப்ரஸித்தரான கிடா
ம்பி, அப்புள்ளாரிடத்தில் ஸகலார்த்தங்களையும் அதிகரித்து
ஸ்ரீஹயக்ரீவப்ரஸாதலப்தஜ்ஞானவிசேஷராய் ஸ்ரீரங்கதிவ்யதம்ப
திகளாலே ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர வேதாந்தாசார்ய ஸம்ஜ்ஞை
கள் ப்ரஸாதிக்கப்பெற்றவராயும் ஸத்ஸம்ப்ரதாயரக்ஷணார்த்த
மாக பகவந்நியமனமடியாக அவதரித்த ஸ்ரீவேங்கடேசகண்
டாவதாரராயும் ப்ரஸித்தரான தேசிகன் ஸம்ப்ரதாயமே ஸ்ரீபா
ஷ்யகார ஸம்ப்ரதாயமென்றும் நஞ்சீயருக்குப் பின்பு நூதன
கல்பனாக்ருத்ரிமமான க்ரந்தங்களை ப்ரவசனம் பண்ணிவருகிற
நம்பிள்ளை முதலானார் பரம்பரையில் ஸம்ப்ரதாயவைஷம்யம் க்ர
மேண உண்டாகி வரவர இவர்கள் காலத்தில் எம்பெருமானார்
தர்சனத்துக்கு பஹிர்பூதமாயிற்றென்றும் நிரூபகஸ்பஷ்ட
மாகுமிறே. ஆதலால் இந்த ப்ரகாரமும் ஸ்ரீவேதாந்தாசார்ய
ஸம்ப்ரதாயம் பிள்ளான் பட்டர்முதலானவர்களின் க்ரந்தங்க
ளுக்கு விருத்தமென்று பிதற்றுவது அத்யந்தாஸம்கதம். ஆ
சார்யருக்கஷ்டதிக்கஜமிருப்பதுபோல் நமக்குமிருக்கட்டுமென்று
வானமாமலை ஜீயர் தமக்கொரு அஷ்டதிக்கஜஸம்பாதனம் பண்ணி
னமையால் இப்படி ப்ரத்யாசார்யருக்கும் திக்கஜங்களுண்டாக
முடிவில் இவர்களுக்கெல்லாம் வைமநஸ்யமே யொழிந்து ஐக
மத்யமேவந்து சேரும்போலும்! அஹோபிலமடத்தார் ஆச்சா
ன்பிள்ளை பரம்பரையைச் சேர்ந்தவர்களென்பது முதலான
அஸம்கதப்ரலாபங்கள் திரஸ்க்ருதப்ரோக்தவசனத்தாலே

உத்க்ஷிப்தங்களாயின. 'இன்னமும் ஸஹோபவிஷ்டத்தில் 'ஶ்ரீ ஶைலேஶதயாபாத்ரம்' ஶ்லோகம் சொல்லப்பட்டு வந்ததென்றது ஸத்யஸம்ப்ரதாயவிருத்தமன்றோ, ஏனெனில் வடக்குத்திருவீதிப்பிள்ளைக்குப்பின் பிரிந்துவந்த பரம்பரையைப் பெரியவாச்சான்பிள்ளையாதியாக வந்ததென்று சொன்னாலும் மணவாளமாமுனிக்குமுந்தி மூன்றுபேராதியாகத் தனிப்பட்ட பரம்பரையார் மணவாளமாமுனி விஷயமான ஶ்லோகத்தை படிக்கக் காரணங்காணப்படாமையால் அந்த மடத்தில் அது படிக்கப்பட்டதென்றது ஸத்யவ்ரத ராமாநுஜய்யங்காருக்கு பத்ரீநாராயணன் இந்த ஶ்லோகத்தை உபதேஶித்தாரென்று சொல்வதுபோல் ஸஶ்ரேயமும் ஸபரிஹாஸ்யமுமாகுமிறே. இன்னமும் ஸஹோபவிஷ்டத்தார் சில ஆசாரங்களில் தென்னாசார்யரைப்போன்றிருப்பதாகச் சொல்லவந்தது முழுப்புட்டு. ஏனென்றால் இவர்கள் வர்ணாஶ்ரமாசாரநிஷேதகர்களாதலால் இவர்களுக்கு ஆசாரமொன்றிருப்பதாக மூர்க்கர்களொப்பார்களிறே. ஆதலாலிவர்களுக்கு ஆசாரவிஷயகஶாஸ்த்ரமேதேனுமிருப்பதாகக் காணப்படவில்லை. ஸதாசாரவிஷயகங்களானவையும் ஸ்ம்ருதிஸூத்ரங்களேயன்றோ. ஆகவே ஸஹோபவிஷ்டத்தாருடைய ஆசாரங்களில் சில வைத்துக்கொண்டிருப்பதாகத் தென்னாசார்யர் நடிக்கிறாரென்னாமல் இவராசாரத்தை அவர் கொண்டாரென்றது அஸம்பந்தமிறே. கலிக்குஸஹாயபூதர்களாய் வர்ணபேதமில்லையென்பது முதலான பம்பரோக்திகளால் பாமர நிக்ருஷ்டஜநங்களை ஆவர்ஜித்து அந்த ஸம்பந்தத்தாலே ஸாமந்தக்களை அடக்கி திவ்யதேஶங்களில் ப்ரவேஶித்து விஶ்வாஸமான நடவடிக்கைகளையுண்டாக்கிக்கொண்டு தர்மஸம்கேதிகள் தாங்களாயிருக்க பரகாலஸ்வாமிமுதலானோர் ராஜாவலம்பநத்தாலே யேதோ செய்தார்களென்றது கொக்கு ஸம்ஶயனை ஹஸித்ததுபோன்றதிறெ. ப்ரபத்திவிஷயத்தில் வேதாந்தாசார்ய திவ்யஸூக்திவசனத்தை உபந்யஸித்து வடகலையார் தர்மமாக நடப்பதாகக் காட்டினால் இவர்வாக்யத்தில் மூர்க்கர் விஶ்வஸிப்பார்கள். அப்படியில்லாமல் வாய்க்குவந்தபடி பேசுவதை ஸாமரஸ்வோக்தி தோஷமென்று

உதாஸீநராகிறோம். வைஷ்ணவத்வ நிர்வசநஶாஸ்த்ரஜ்ஞரான அந்யர்கள் வடகலையாரே ஸம்யக்ஸ்ரீவைஷ்ணவரென்னத்துணிவார்கள். இவர்போன்றவர் வசநத்தால் வடகலையார் வைஷ்ணவத்வத்தில் ஸம்யக்த்வஹாநி கிடையாது. ஆனால் இவர் வடகலையாருக்கு ஸம்யக்வைஷ்ணவத்வமில்லையென்றுரைத்ததனால் தங்களுக்கு வைஷ்ணவத்வமில்லையென்றதாக ப்ரஸஜ்ஜிக்கிறதென்று நினைக்கிறோம். க்ஷுத்ரோக்திவிஷயம் முன்னேசொன்னோம். வைஷ்ணவத்வம் பட்டர் ஸம்பந்தத்துக்கு ப்ராப்யமென்றதாக ப்ரஸங்கிப்பதனால் தத்ஸம்பந்தமுள்ள ஆசார்யர்களுக்கு வைஷ்ணவத்வமில்லையென்றதாகிறதிறே. மணவாளமாமுனிக்கு கோமடத்தாழ்வான் வம்சத்தில் ஜநநம் கல்பித்துச் சொல்லிவிட்டதனாலே தங்களுக்கெல்லாம் ஆசார்யபுருஷத்வம் நிலைத்துவிட்டதாக ஆரோபிப்பது ஜாட்யவிஜ்ரும்பிதம். ஏனெனில் இவருக்கு ஒரு ஆசார்யபுருஷவம்சம் கல்பித்ததுபோல் நஞ்சீயர் நம்பிள்ளை திருவாழிப்பிள்ளை முதலியவர்களுக்கு கல்பிக்காமையால் மணவாளமாமுனிக்கு கல்பித்த ஆசார்யபுருஷவம்ஶஜநநம் ம்ருஷைவமேயென்று முன்னே சொன்னோமிறே. அவருக்கே ஆசார்யபுருஷத்வம் அற்றுப்போயிருக்க இவர்போன்றவருக்கெல்லாம் ததாஶ்ரயணத்தால் ஆசார்யபுருஷத்வம் ஸுதராம் நிரஸ்தமென்பது அத்யந்தஸ்பஷ்டமிறே. ஆனாலிவர் தேஶிகனுக்குச்சரித்தட்டில் மணவாளமாமுனியைவைத்துவிட்டோமென்று த்ருப்தி கொண்டதுந்தவிர அந்த மணவாளமாமுனிக்கு ஆசார்யபுருஷ வம்ஶஜநநமும் தேஶிகனுக்கு ஸமபாவமும் கல்பித்துவிட்டோமென்கிற த்ருப்தியுங்கொண்டதனால் அந்யர் தேஶிகனுக்கு மணவாளமாமுனி ஸமரென்றும் அவர்கள் விஷயத்திலிவர் செய்த கல்பனை மெய்யென்றும் நம்புவரோ? வஸ்துதஸ்து ஆசார்யபுருஷவம்ஶமென்பது ஜ்ஞாநவம்ஶ்யரென்னத்தகுமேயன்றி ஜந்மவம்ஶ்யரென்னத்தகாதென்பது ஸம்ப்ரதிபந்நம். ஜந்மவம்ஶ்யரேதானென்றால் எம்பெருமானார் நியமித்த எழுபத்துநால்வரிலுள்ள யதிகளுக்குப் பின்னவர்வம்சமற்றுப்போனதாக ப்ரஸங்கிக்கும். அவர்களினுடைய ஆசா

யக்ஷம் தாவஜ்ஞாநாத்ரவிஶ்ராணமென்றால் விஶேஷவியாயகவ்ர ரோணங்காணப்பட்டமையால் மற்றவர்களுக்கும் அப்படியே யென்னத்தடையில்லை. ஆதலால் ஜ்ஞாநவாம்ஶவலொரயே ஸ்வா யத்தஸங்கதியென்றும் விஜ்ஞாநாஹிவேர்தமென்றும் ஸஹிஜநவ்ர ஸம்ஶதிஸதிஶோஹாவஹமென்றும் பெரியோர் சொல்லுவாரிறே. வேதாந்தாவாயத்ஸநாவாயத்வகூஷவம்ஶஜாதரென்று இந்த ஸஜ்ஜர் செய்யும் ஸந்ரெதாத்திகளால் குறையொன்றுமில்லையிறே. ப்ரதிவாதிஹயங்கரமண்ணன் ஊர்வ்யாவெக்ஷையால் ஜீயரிடத்துக்கு வந்து அவருக்கு ஸஶக்யமான விமதநிரஸனத்துக்கு ஸம்மதித்திருக்க அவரை மெல்லென சிஷ்யராக்கிக்கொள்ளலாமென்று பார்த்ததனுல் அண்ணன் ஜீயரால் கிடைக்கும் ஊர்வ்யூஹத்தை த்ருணீகரித்து ஸ்வதந்த்ரதையால் மற்றையோருக்கும் பொயித்து அவ்விடம் துறந்துபோனுரென்பது ஸத்யமான வைனதிஹ்யமாயிருக்க, எறும்பியப்பாவைப்போல் அண்ணனும் ஊர்வ்யாவெக்ஷையால் ஜீயருக்கு சிஷ்யத்வம்பூண்டாரென்று வடகலையார் சொல்வதாக உநாரயிப்பது வ்யர்த்தமிறே. நஞ்சீயர் முதலாக தென்கலை வடகலை வ்யவஹாரமுண்டென்று சொன்ன இவர் வசனங்களையே மறந்து ஸ்ரீஹாஷ்யக்காரர் காலாதியாக ஸ்ரீரங்கத்தில் வடகலையாருக்கு ஐயதாஹாவ்யஸம்பமே கிடையாதென்று வொகவ் விஸமென்றது ஸத்யஸங்கதமும்ஸவ்யஹாவ்யமுமிறே. திருமலையில் ஸாள்வராஜாவலம்பனத்தால் முன்பின்னுகமாற்றினுரென்றதனுல் தத்பூர்வமிவர்கள் யக்திஞ்சித்வைபவத்தால் புரட்டினர்களோ அல்லது புரட்டப்பார்த்தார்களோவென்று வ்யக்தமாகிறதிறே. முன்சொன்னபடி பலநிக்ர்ஷ்டஜநங்களை ஸ்வவஜீகரித்து தஜ்ஜுத்தாலே பல திவ்யதேஶங்களிலும் ஸவிவிஹரண கொழாஹலவ்ரவர்த்தகராயிருக்குமிவர்கள் சிலவிடங்களில் தங்கள் ஊர்த்வதந்ம் ஷவிக்காமலிருந்தால் அவ்விஷயத்திலும் ஸ்ரீஉயூாங கம் திருக்குடந்தைமுதலிய சில ஸ்தலங்களில் கொஞ்சகாலத்துக்கு முந்தித்தான் வடகலையாருக்கு இடமுண்டாயிற்றென்று சொல்லுவதால் எல்லாஸ்தலங்களுக்கும் அநாதியாகத் தென்க

லையாகவே யிருந்ததென்று ஸித்திக்குமென்று ஜநாராயிக்கி றகாலத்தில் நாம் பொய்சொல்லுவதற்கு ஸஹிக்காமல் வடக லையார்உண்மைசொல்லவந்தால் நம்பொய் பறக்குமேயென்று அஞ்சாது வாய்க்குவந்தவண்ணம் பேசுவது உத்ஸாஹ்ஸுத்ரமி றே. இன்னமும் (அச-பக்கத்தில்) பெருமாள்கோவிலில் அப்ப ச்சியாரண்ணா ஆடிக்கொடுத்து நாச்சியார் ஸந்நிதி கட்டினாரெ ன்றும் அதிலடிப்பாதத்துடன் கூடின திருமண்காப்பு இன்ற ளவுமிருக்கிறதென்றும் சொல்லியிருப்பதால் அதுக்குமுன் இவர்களுக்கு அங்கே ப்ரவேசமில்லையென்று விசதமாகிறப டியால் காசாணிப்பாலை வெங்கடாவாயபூர் அருளிச்செய்த க ஶநிரஸந ஸ்ரீஸூக்திஸ்லோகத்திலிருக்கும் 'ந்யாக்ணக' என் பதற்கு நூதநப்ரவேசம்பண்ணவந்ததைத் தடுத்தானென்றிவர் பொருளுரைத்தது தகாதென்றும் தேசிகன் காலந்தொடங்கி வழங்கிவந்ததைச் சொல்லவொட்டாமல் தடுத்தானென்றே பொருளென்றும் ஸ்பஷ்டமாகிறதிறே. இன்னமும் நிரோதமெ ன்பது உள்ளேயிருக்கச்செய்தல். அதாவது வெளிவரவொட் டாமையென்று ஸ்வரஸமான அர்த்தமாகையால் அங்கே வழக் கப்படி உச்சரிக்கக்கூடாதபடி தடுத்தானென்பது யுக்தமிறே. ஆதலால் பெருமாள்கோவிலில் தென்கலையார் ப்ரவேசம்நூத னமென்று ஸ்ரீரப்படுவதைக்கொண்டு அவ்விடத்து விஷயமாக இவர் சொல்லும் அநுஸந்தாநங்களெல்லாம் விதயமென்று ஸ்பஷ்டமிறே. மணவாளமாமுனிக்கு ஆவாஹநஸ்வஸம்ஸ்லிஷ்டத்துதே சிகனுக்கு அதில்லையென்று சொல்லிவிட்டதனால் மணவாளமா முனிக்கு ஏற்றமுண்டாக்கிவிட்டதாக நினைத்து மகிழ்வதுபோ லவே விகாரமாக ஒருதிவ்யதேசத்திலுமில்லாமல் இப்போதிப் போதே விக்ரஹப்ரதிஷ்டை உண்டாகிவருகிற மணவாளமாமு னிக்குக் குறைதீர்த்துவிடுவதாக எண்ணி தொன்றுதொட்டுள்ள தேசிகதிவ்யமங்கள விக்ரஹங்களை நூதநஸ்லிஷ்டமென்னப்பு குந்த இவர் வசவெடாத்தாவிரோதமெண்ணிப்பாராரென்பது ஸித்தமிறே. ஸ்ரீரங்கநாயகிநியமநத்தாலே ஸ்ரீரங்கத்தில் அக் காலந்தொடங்கி தேசிகன் அவதாரவிக்ரஹம் ப்ரதிஷ்டிதமாயிரு க்க அதை நூதனமென்றதனால் மணவாளமாமுனிக்கு இரண் டுமூன்று கோவில் கட்டிவிட்டதுபோல் மகிழுமிவர் உத்ஸாஹம்

அவஹாஸ்யமிறே. ஸம்ஹாரார்த்தம் ஶாஸ்த்ராசார்யரருளிச்செய்த வைபவப்ரகாஶிகையில் ௧௩-வது ஶ்லோகத்தில் ஶ்ரீக்ருஷ்ணாசார்யர் க்ஷாமணம்பண்ணிக்கொண்ட விஷயம்பேசப்பட்டிருக்க தத்வம்ஶ்யரென்று தன்னைச் சொல்லிக்கொள்ளுமிவர் ஶ்ரீக்ருஷ்ணாசார்யரென்பவரே இல்லையென்று அபலாபம் செய்வது முழுப்புரட்டன்றோ. ஆதலால், (௩௫-பக்கத்தில்) இவர் சொன்னபடி வடகலையார் சொல்வது ஶாஸ்த்ரஸித்தமாயிருக்குமென்றும் இவர்சொல்வது பெரும்பாலும் அஶாஸ்த்ரஸித்தமையென்றும் தெரியக்கடவது. கறுப்புச்சாமி, சிவப்புச்சாமியென்று சொல்லத்தக்க சிற்றறிவினாகிய ஜநங்களின் ஸமூஹங்களைக் கைவசப் படுத்திக்கொண்டு அவர்களின் பெரு முரட்டுத்தனமே தனக்குதவியாகக்கொண்ட கலியின் வலுவால் திவ்யதேஶங்களை ஆக்ரமிப்பதினாலே பல திவ்யதேஶங்கள் தங்கள் வசத்திலிருக்கிறதுபற்றி தங்கள் ஸம்கேதம் அநாதியென்றும் ப்ராமாணிகமென்றும் சொல்வது அத்யந்த ஹாஸ்யாவஹமிறே. இப்படியாகில் நூற்றெட்டுக்கு ஆயிரத்தெட்டிருக்கிறதென்றும் ஸோமேஶ்வரர், கச்சீஶ்வரர் இத்யாதி வ்யவஹாரஸித்தியிருக்கிறதென்றும் ஆதலால் ஶிவாலயங்களும் தந்த்ரமும் ப்ராசீநமானதென்றும் விஷ்ணாலயமும் தந்த்ரமும் நவீநமென்றும்சைவர் சொல்வதை இவர்கள் தங்கள் ந்யாயாநுஸாரியானதுகொண்டு ஸமர்த்தநம் பண்ணி முடிவில்ஶைவஸித்தாந்தப்ரவேஶமும்பண்ண ப்ரஸங்கிக்குமிறே. சில திவ்யதேஶங்களில் கொஞ்சகாலத்துக்குமுன் தேஶிகவிக்ரஹத்தை இடுமுடுக்குப்பார்த்து வடகலையார் உள்ளேபுகுத்திவிட்டதாகச் சொன்னதனால் இவர்கள் கண்தெரியாமலும் மெய்மறந்தும் இருந்ததாகப் புலப்படுகிறது. பெருஞ்சூலவாந்த்ரம் கண்ணை மறைத்திருக்கலாம், மெய்மறப்பின் காரணம் ஸஹ்ருதயர் கண்டுகொள்ளவேண்டியது. ராமாநுஜதயாபாத்ரமித்யாதி நவீநமென்றும் ஶ்ரீஶைலேஶ இத்யாதி ப்ராசீநமென்றும் சொல்லும் இவருடைய அறிவின் சிறுமையை யென்னென்க. இவ்விரண்டு ஶ்லோகங்களில் முன்னும் பின்னும் சொல்லப்படும் ஶ்லோகம் பாடல்கள் விஶேஷிக்கப்படுமிடத்து உண்மை விஶதமாகுமிறே, எங்ஙனேயெனில்

நமோ ராமாநுஜாய தே என்பது வேதாந்தாசார்யர் அருளிச்செய்தது. நம ஸ்ரீசைல நாதாய என்பது மணவாளமாமுனியருளிச்செய்ததாம். இவைகள் விஷயமாக ப்ரத்யந்தவிவேசனம் விசிக்கவேண்டியதில்லையே. இப்படி ஸ்வப்ரகாசமான இவ்விரண்டின் பௌர்வாபர்யம் நிர்ணீதமானபின்பு இவற்றை அடுத்து ஸந்தர்சிக்கப்படும் ராமாநுஜ தயாபாத்ரம்-ஸ்ரீசைலேசதயா என்பவற்றின் பௌர்வாபர்யமும் விசதமாகுமிறே. இன்னமும் வாழித்திருநாமம் முடிவில் இன்னமொரு நூற்றாண்டிருமென்று இருதிறத்தாரும் சொல்லுகிறதில் ஸம்ப்ரதாய நிரூபணம் பண்ணினால் பௌர்வாபர்ய நிர்ணயம்ஸுலபமாகுமிறே. இன்னமும் 'ரம்யஜாமாதா' என்பது அழகிய மணவாளனென்னும் பொருள் தாதென்று முன்னே சொன்னோம். அப்படியே தரினும் தமிழ்ப்பாடல்களில் அழகியவென்பதைத் தள்ளி மணவாளவென்று மாத்திரமுரைத்ததேனோ? தேசிகன் வாழித்திருநாமத்துக்குச் சரியான சீரில்கட்ட வேண்டியன்றோ அழகை ஒழிக்கலாயிற்று. இப்படி நம: என்பதுமுதல் இருமென்பது வரையிலுள்ள வாக்யங்களின் உண்மை ஸ்பஷ்டவிசதமாயிருக்க ராமாநுஜதயாபாத்ரம் என்று பொய்யுரைத்து ஸ்ரீசைலேசதயாபாத்ரம் என்று ஸ்தாபிப்பதற்காக கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலியவிடங்களில் நடந்ததாகச் சில பொய்க்கதைகளைச் சொல்லி வாதோபந்யாஸம் ப்ரஸித்தால் இந்த ஸங்கேதத்தை ந்யாயஜ்ஞர்கள் பரிஹஸிக்காமலிருப்பரோ. ஆதலாலிவரெழுதும் பொய்க்கதைகள் பெரும்பாலும் தனக்குத்தானே வ்யாஹதமாகுமது ஸ்பஷ்டமிறே. இன்னமும் இந்த வாதார்த்திவிஷயமாக ஒவ்வொருவிடங்களில் தென்கலையார் செய்திருக்கும் நீசாநுசந்தான சேஷ்டாக்ருத்யாதிகளையெல்லாஞ் சொல்லப்புகில் மஹாபாரதத்திலும் பெரியபுஸ்தகமாமென்று விடுத்தோம். (104-பக்கத்தில்) திருநாராயணபுரத்திலே வடகலையார் தேசிகவிக்ரஹத்தைத்தாங்களே குளத்தில் போட்டுவிட்டு தென்கலையார்மேலே பழிசுமத்தினதாகவும் பின்பு ராஜவிசாரணையில் அது வடகலையாரே செய்ததென்று தெரிந்ததாகவும் சொன்னதனால்

௯௯)பக்கத்தில்) அங்கே தேசிகவிக்ரஹம் ஸந்நிதாநப்ரதிஷ்டிதமென்று பிதற்றியது அஸம்பத்தமென்று ஸுஸ்பஷ்டமிறே. இன்னமும் தென்கலையாரை முன்போலக்கோயிலுக்குவர வுத்தரவானதாகச்சொல்வதால் கோவிலுக்கு வருவததனையொழிய அதிகப்ரஸங்கமொன்றும் செய்யவேண்டாமென்று உத்தரவானதாகவும் இதற்கு முந்தி இவர்களுக்கங்கே ஒரு தொடர்புங்கிடையாதென்பதாகவும் விளங்குவதினால் ஸ்ரீசைலேசதயாபாத்ரம் நடந்துவந்ததென்றது முழுப்பொய்யென்று நிரூபகாரிவாரிறே. (105-பக்கத்தில்) ஸ்ரீரங்கத்தில் பெரியபெருமாள் ஸந்நிதியில் அரையர்கள், ஆழ்வார்களேயாக பாவிக்கப்படுவதனால் அவர்கள் ஸ்ரீசைலேசதயாபாத்ரம் சொல்வதில்லையென்றது அஸம்பத்தம். அப்படியானால் அங்கே ப்ரபந்தாநுஸந்தாநம் பண்ணுமவர்கள் பட்டராகவே பாவிக்கப்படுகிற ததம்ஶ்யர்களாதலால் அவர்கள் ஸ்ரீசைலேசதயாபாத்ரத்தை ப்ரபந்தாநுஸந்தாநாரம்பகாலத்திலே அநுஸந்திக்கிறார்களென்றது அயுக்தமாமிறே. ஆதலாலிவர் ஸ்ரீசைலேசதயாபாத்ரவ்ருத்தத்தை எல்லாவிடத்திலும் சொல்ல ப்ரயத்நம் பண்ணுவதும் ஸர்வஸாக்ஷிகமான விடங்களில் குயுக்திகளால் போக்குச்சொல்லுவதும் ஸுஸ்பஷ்டமிறே. அன்றியும் மற்ற ஸ்தலங்களில் திவ்யப்ரபந்தம் ஸேவிக்குமவர்களை ஆழ்வாராக பாவிக்கத்தகாதென்றதாக ப்ரஶம்ஸிக்கிறதிறே. நாலைந்து ஸ்தலங்களில் மாத்ரம் சிலநாளாக ராமாநுஜதயாபாத்ரமும் வடகலைத்திருமணும் நடந்துவருவதாகச்சொல்வதால் அவ்விடங்களில் இவர்களின் வைபவமழிந்ததாகிறது. அப்படியே மற்றஸ்தலங்களிலும் எம்பெருமான் திருவுள்ளமிருந்தால் இவர்களின் வலு அழிந்துபோகினும்போகட்டும். ஸ்ருதஸஞ்ஜீவிநீ ந்யாயமாக ஸத்ஸம்ப்ரதாயம் விளமாயிருக்க திருவுள்ளமிருந்தாலுமிருக்கட்டும். இவ்வளவால் துஷ்டர்களுக்கு ஏற்றமும் சிஷ்டர்களுக்குத்தாழ்வும் சொல்லத்தகாதிறே. இதைப்பலவிடங்களிலே சொல்லவேண்டுவதில்லையிறே. சகவருஷம் ௧௨௯௨-க்குமேல் அவதரித்த மணவாளமாமுனி காலக்ஷேபம் ஸாதித்தகாலத்தில் உண்டான ஸ்ரீசைலேசதயாபாத்ரஸ்லோகம் அநாதியாயெங்கும் நடந்துவந்ததாகச் சொன்னது அத்யந்தாவஹாஸ்யமிறே. இது அநாதி

யாய் நடந்துவரும்பக்ஷத்தில் பெரியபெருமாள் நியமனமடியாக வந்ததென்றது பொய்யென்றும் பெரியபெருமாள் நியமனமடியாகவந்ததெனில் ஸந்நாஸியாக நடந்துவந்ததென்றது பொய்யென்றும் இப்படிப்பட்ட விப்ரதிபத்தியால் இந்த வஸ்துவிஷயமாகச் சொல்லப்பட்ட கதைகளெல்லாம் முழுப்பொய்யென்றும் ஸ்பஷ்டமிறே. விருத்தாந்தத்தில் ஸ்ரீ மைஸூர்ராஜன் ஸந்நிதியை சைவர் தங்களுடையதென்கிறார்கள். அதுபோல் இவர்கள் கோவில்களெல்லாம் தங்களுடையன வென்றதனால் குறையில்லை. ஸர்வேச்வரனான வெம்பெருமானுக்கு அநேகமான அந்யாய நிஷ்டவாதிகள் நேரிடுவதியல்புதானே. அப்போதப்போது விசாரணைசெய்யும் ப்ரபுக்கள் ஸ்பஷ்டவ்யக்திகொண்டு ந்யாயப்படி நடத்துவார்கள் சிலருளர். ஜநபதவர்த்தமாநாய அந்யாயத்தை ஸ்தாபிக்குமவர்களும் பலருளர். இதனால் ஸாயங்காயங்கள் நமக்கொன்றுமில்லையிறே. தேசிகன் ஸந்நிதியில் ஸந்நாஸியா யெங்களுக்குத்தான் ஸ்வதந்த்ரமென்று வழக்காடிக்கொண்டிருக்கும் இவர்கள் தேசிகவிக்ரஹம் நம்மதென ப்ரதிஷ்டிதமென்றாலனால் இதற்கு ஸ்பஷ்டர் நகையாமல் விடுவரோ. ஸர்வஸ்வாமித்வஸம்பந்தங்களுக்கும் இவர்கள் ஸம்கேதத்துக்கும் ஒருமைப்பாடுண்டென்று உதாஸீநரான ஆராகிலும் சொல்வாராகில் இவர்களுக்கு ஸர்வஸ்வாமித்வ ஸம்ப்ரதாய ஸம்பந்தமுண்டென்னலாம் அது காண்கிலோம். திருக்குருகைப் பிரான் பிள்ளானுடைய ஸம்ப்ரதாயம் ஜோகாசார்யருடைய அஷ்டாதசரஹஸ்யங்களுக்கு பேதமென்றது ஸர்வஹாஸ்யமிறே. எங்ஙனேயெனில்—இந்த அஷ்டாதசரஹஸ்யங்கள் பரஸ்பரவிரோதமில்லாதிருக்கப் பெறின் பிள்ளான் திருவுள்ளத்துக்கொருக்கால் இணங்கியவைகளென்னலுமாம். அதுவே இல்லையென்பது ஸ்பஷ்டமிறே. ஆசார்யஹ்ருதங்களுக்கு ஸமானமென்று ப்ரதிஜ்ஞைபண்ணி வடகலையார் சொல்வது தெரியாமையாலே யென்றது ஹாஸ்யாஸ்பதம். எப்படியெனில், தன் ப்ரதிஜ்ஞைக்கொக்க ஆசார்யவிஷயத்திலுள்ள ஹேதுத்தைப்பற்றிவந்த ஆக்ஷேபத்துக்கன்றோ ஸமாதானஞ்சொ

ல்லவேண்டும். அங்ஙனமின்றி அவர்கள் சொல்வதை ஜீவிப்பது ஸாயாநஸ்வாயமாகாதிறே. யாமாதிகள் ப்ராஹ்மணனுக்கு அதிசயங் கிடையாதென்று தானே சொல்வதால் அதிசயஹாநிரூபமான குறைவை அங்கீகரித்ததாயிற்றிறே. இன்னமும் வணாச்ரமயதாத்மவிவேகமென்னுமிவர்களுக்கு ப்ராஹ்மண்யவிசுவிசிகளாலும் காரணாகாரணஜந்யமான அதிசயவ்யவாயங்களாலும் ஸாஹசோவங்கிடையாமையாலே இவர்களுக்கும் வணாச்ரமயதாத்மமடிக்காதென்னும் வடகலையாருக்கும் ஆவாரவிஷயஸேஷம் வ்யவஸம்மிக்கமாட்டாதாகையால் இவர் ஸாயாநஞ்சொல்வதே அஸமஞ்ஜஸமிறே. ஸ்ரீபாஷ்யகாரர் யாமவஸாவிஸஸநம் அஸிம்ஸேவெயென்றே ஸூத்ராஸிவாக்யத்தைக்கொண்டுஸாயித்திருப்பதால் அவிரஸமாகஷேஸிகஷிவ்யஸூக்திகளிருப்பதாகச் சொல்வது அத்யஸமஞ்ஜஸமிறே. ஸ்ரீவெஸவைத்யாதிஸ்லோகத்தைப் பலர்சேர்ந்து செய்ததுபோல் ஸூத்ராதாரம் பலர் சேர்ந்து செய்திருப்பதாகவெண்ணி 'வடகலையார் செய்த' என்றெழுதியதுதெரியாமையாலே. வியவெகள் என்பதே வயஷாவமாயிருக்கபுருஷன்போனபிற்பாடு என்றது இப்படிப்பட்ட வீண்சொற்களால் பெரிய புஸ்தகமாக்கக் கருதியிறே. அவர்கள் சொன்னவென்றதனால் ஸகெஸாவியவாம் என்கிற வசநம்ப்ரமாணமென்று சொன்னதாகிறதே. அப்படியிருக்க அதற்கு அவவாதவசநமிருப்பதாகச்சொன்னது அஸமஞ்ஜஸமிறே. விதவிப்ரநாவஸீணாம் என்று இந்த விஷயத்தில் வசநமிருக்கிறதென்றதுஅயாகம்ஸாஸ்த்ரங்களில் ஸ்ரீஸூதத்தாலெ வியவாவ்ரதிவாஹநங்காணாகிலோம். ஆதலால் அவ்ராவநிஷேயமாகிறதிறே. இன்னமும் விதவிப்ரநாவஸீகளுக்கு வைவஷ்வாஷ்மவசநம் நிஷேயிக்கப்பட்டால்வெஸ்யஸாஷ்வியவெகளுக்கு விஹிதமாயிருக்குமே. அதுவுங்காண்கிலோமே. 'ஊாஊாக்ஷாயஜீவா' என்ற வசநத்தால் ஊாஊாக்ஷாவானவியவெக்கு கேஸயாரணஊவீஸ்யகாயமென்றால் அதிவிஷயநீயமன்றோ? எனென்றால்

ப்ரயோஜநாந்தரபரனான வைஷ்ணவனுக்கே ஸம்பந்தம் விஹித-
மாயிருக்க விஷயாந்தரவிரக்தனான வைஷ்ணவனுக்கு ஸம்பந்தங்கூ-
டாதென்று ஶாஸ்த்ரம் ஸாதிக்குமா. ஆதலாலிந்தவசநம் நமோர்த்தநக்ஷ-
த்ரித மென்றும் க்ஷத்ரியன் க்ஷத்ரியனென்றும் அத்யந்தஸ்பஷ்டமிறே.
வைஷ்ணவதீக்ஷிதீயவிஷயம் த்ரிம்ஶத்ப்ரஶ்நோத்தரஸம்வாதத்தி-
லே பரிஹ்ருதம். இன்னம் அநேகபரிஹாரங்களுண்டென்-
றதனால் தோஷம் ஸித்தித்ததிறே. இந்த பரிஹாரங்களைப்போ-
லவே இன்னமுண்டென்றவைகளும் ஸமாதிபேதங்களி-
றே. நித்யாதிக்ருத்யங்களில் ஸம்ஸர்கம் சொல்லவில்லையென்ற இவர்
ஸம்ஸர்கமில்லாமலும் ஸூத்ரஸங்கூடுமென்றும் ஸம்பாவநா-
ம்யாவாதம் பண்ணினதற்குக் காரணங் காண்கிலோம். இல்லாமலும்
என்றதனால் ஸூசகமாகிறது. அதை நித்யமாக ஸமீக்ஷி-
க்கலாகாதிறே. 'யாதேநவாதயெத்ஸம்படாம்' என்று ஸ்ரீபாஞ்சரா-
த்ரவசநமிருக்க இடக்கையாலே திருமணி ஸேவிக்க வசனமில்-
லையென்று வ்யாஜஞ்சொல்லி ஸம்ஸர்கத்தை மறுப்பது ஸம்ஶய்யா-
காயம். இந்த விஷயம் த்ரிம்ஶத்ப்ரஶ்நோத்தரஸம்வாதத்தில் ஸ்பஷ்-
டமிறே. ப்ராஹ்மணஸாரோத்யதஃப்ரவர்த்தித்த ஸம்ஸர்கவிஷயி
விஶிஷ்யவைஷ்ணவவிஷயத்தில் ஸமவதாராய நாமவைணவ
ரிணமிக்கிறதென்றால் ப்ராஹ்மணஸமோதயத்துக்குஹயபூர்வ-
ணங்கிடையாதென்றதாகிறது. அப்படி காண்கிலோம். வைஷ்ண
வர்களுக்கு ஸம்ஸர்கநிஷேதமாகில் தஸ்யோநஹயபூர்வ-ந
மென்று ஸந்தர்ஶவியி சொல்லத்தகாதிறே. ஸ்ரீபாஷ்யகாரா
திஸூக்திகளாலே வைஶ்வதேவம் கூடாதென்று விஸிப்பதாகச்
சொல்லி இன்னம் அநேகபரிஹாரமுண்டென்றதனால் அந்த
ஸூக்திகளுக்கு மேற்பட்ட ஸாயகப்ரமாணத்தை ஸபேக்ஷி-
ப்பதாகக் காணப்படுகிறது. அதுபோலவே அந்தஸூக்திகளால்
வைஶ்வதேவ நிஷேதவிஸியென்று ஸநோரயிப்பதும் வ்யர்த்த-
மிறே. ஸமவர்த்திகளெல்லாருமென்றால் அதில் தானுஞ்சேர்
ந்ததாகநினைப்பது ஸமர்த்தமன்று. இல்லாவிட்டால் ஸர்வேஷ்
ஸ்ரீவைஷ்ணவவைஷ்ணவாஃ என்பது முதலான விடங்களில்

ஸவ்யதிரிக்தவிசேஷணவ்யாயோகம் வேண்டுமே. அவ்வாறெ
ங்கும் காணப்படாமையால் இங்ஙிவர் தன்னையொழிந்தவென்று
விசேஷிப்பித்ததும் அதனால் தமது ஸ்வஸங்கேதம் விஹிதமா
மென்று நிரூபித்ததும் வ்யக்தமிறே. வைஷ்ணவர்களுக்கு
ஜாதிபேதமே இல்லையென்று இவர் ஸாஜாத்யம்போலேவை
ஷ்ணவரெல்லாரும் ஸமமாகநினைப்பது தங்கள் ஸித்தாந்தமன்
றென்றது ஸ்வஸங்கேதவிருத்தமிறே. நம்மாழ்வார்களின் தி
வ்யஸூக்திகளால் ரஹஸ்யமான வேதார்த்தங்களை நாம் தெளிந்தோ
மென்றதனால் வேதப்பொருளை விளக்குகிறவை ஆழ்வார் ஸூ
க்திகளென்றதாகிறதிறே. ஆகவே தமிழ்வேதமே முக்யமெ
ன்றதும் முதற்பிரமாணமென்றதும் அயுக்தம். சைவர்கள்
திருவாசகமுதலியவை தமிழ்வேதமென்கிறார்கள். அவைகள்
வேதஸ்வஸம்ஜ்ஞாநஹேதுக்களென்றும் ஆழ்வார்கள் அருளிச்செ
யல்களே வேதஸ்வஸம்ஜ்ஞாநஹேதுக்களென்றும் வேதவிரோ
யாவிரோயங்களாலன்றோ ஸாதிக்கக் கடவதாகிறது. இதனால்
ப்ராபல்யம் ஸித்தமாயிருக்க வேதத்தை சந்தேஹமாக்குவதால்
தமக்கு ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் அதிவிஶ்வாஸமுண்டென்று
யாவரும் நினைப்பார்களென்று நிரூபிப்பது விதயமிறே.
ஆதலால் இவருக்கு ஸ்வஸித்தவாக்யஜ்ஞாநமும் ஸ்வஸித்தஸம்ப்ரதா
யநிஷ்டையுமில்லையென்றும் விஶதமாயிருக்க இவர் பிறரையிப்ப
டிச் சொல்வது ஜாட்யப்ரயுக்தமெனக் கடவதிறே. எம்பெரு
மானுடைய இரண்டுபாதங்களையும் திருமண் காப்பாகத் தரி
க்கவேண்டுமென்றும் அதற்குப் பீடமொன்று போடவேண்டு
மென்றும் அந்தப் பீடத்துக்கு ராமாநுஜஸம்ஜ்ஞையென்றும்
சொன்னதை தென்னாசார்ய ப்ரஹாவஸம்பந்தத்திலும் ஸ்ரீ
ஶைவப்ரோக்தாவஸம்பந்தத்திலும் அவஹஸித்திருப்பதே அமை
யுமாயினும் அந்தப்பீடம் நெற்றியிலும் உடம்பிலும் வெவ்
வேறு ப்ரகாரமாயிருப்பதற்குக் காரணஞ்சொன்னது அதிவி
சித்ரமென்கிறோம். தம்மைப்போலவே கேட்போருக்கும் நி
ர்ஹேதுமுளதாகுமென்று கருதி 'நெற்றிப்பீடம் மூக்கினால்
குறுகியிருப்பதாகவும் மற்றவிடங்களில் மூக்கில்லாமையால்

பீடம் பரந்திருப்பதாகவும் தைரியத்துடன் பேசினாரென்று நினைக்கவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் கேட்பவர்கள் மண்டபங்களிலும் தூண்களிலும் திரைகளிலும் வஸ்த்ரங்களிலும் ஆனைமுகத்திலும் மூக்கினாலாய ப்ரதிஹதியில்லையே. அங்கேயேன்காணும் நெற்றிப்பீடம்போலக் குறுகின பீடம் வைக்கப்பட்டிருக்கிறது' என்று வினவினால் என்சொல்வதென்று வ்யவஹாரமொழித்தன்றோ சொல்லுவர். 'தன்னைப்போலவே யாவரையும் பார்க்கவேண்டு'மென்றும் நீதிச் சொல்லுக்கு இவர் 'தன்னைப்போல் யாவரையும் மூடரென நினைக்கவேண்டு'மென்று பொருளுணர்ந்தார்போலும்! அந்தத் திருமண்காப்புகளிலே தன்னடையே சில பொட்டுக்கள் வருமென்றார். அந்தப்பொட்டுக்கள் நெற்றியில்வாராமல் உடம்பில்வருவது ஆஶ்சர்யமன்றோ. இன்னுமிதற்குச் சொல்லவேண்டுவதுண்டென்றவர் அதைச் சொல்லாமலொழிந்தது என்னகாரணத்தாலோ அது புலப்படவில்லை. இப்படி ஸமாதானஞ்சொல்வது யாவருக்குமெளிதுதானே. எவன்தானிதற்கு ந்யாயமிருக்கிறதென்கிற பேச்சுத்தெரியாதவன்? இப்போது சொன்னதில் இருக்கும் அஸங்கதியைத் தாமே கொஞ்சந்தெளிந்து இன்னஞ்சொல்லத்துணியாமல் இன்னமுண்டென்று கம்பீரமாய்ச் சொல்லி விடுத்தாரென்று புதர் கண்டுகொள்வார்களிறே. சொல்வாராகில் அவைகளும் இப்படி அவஹாஸ்யமாகத்தானே இருக்குமன்றோ. வைஷ்ணவனுக்கு ஸந்யாஸாஶ்ரமமே ஸ்வாபாவிகமென்றும் சொல்லுமவர்கள் ஏகாதஶ்யுபவாஸத்தையும் ஶ்ராத்தத்தையுந் துறப்பது புதுமையன்று ஆகிலும் ஏதோ உலகத்தாருக்காக தாக்ஷிண்யஶ்ராத்தமென்பதாய் மறுநாளாவது செய்கிறார்களேயென்று பார்த்துக்கொள்ள வேண்டுமிறே. இதற்கிவர் வாக்யமே நிதர்ஶகம். என்னெனில், 'வடகலையாரிலொருவன் ஶ்ராத்ததினத்தில் வேஶ்யாகமநம் பண்ணினால் அது ஸதாசாரமாகுமா' வென்றதனால் ஶ்ராத்ததினத்தில் ஸ்வஸ்த்ரீகமநமும் தினாந்தரங்களில் வேஶ்யாகமநமும் செய்வது ஸதாசாரமென்றிவருக்கு ஸம்மதமாகக் காணப்படுவதால் ஏகாதஶீ தாம்பூலவர்ஜனத்தை மாத்திரம் அநாசாரமென்று இவர்

சொல்லத்தகாதிறே. ஸ்நாநாதிஸர்வக்ருத்யங்களும் ஸமாச்
ரயகைங்கர்யரூபமாகையால் ஸ்நாநம் கர்த்தவ்யதா விஷயம்
மென்னத் தகாதென்றது தெரியாமையாலே- எனெனில், பர
மைகாந்திகளுடைய ஸர்வவ்யாபாரங்களும் ஸமவதாஜ்ஞா
நுஜ்ஞா கைங்கர்யரூபமே. அவற்றில் ஸம்ஸாரிகவ்யவ
ஹாரமொழிய ஸர்வம்பாகவதக்ஷேத்ரகைங்கர்யமாகவே க
ர்த்தவ்யமாகில் பாத்ரசோதநம்பாகம் முதலியவை பாத்ரா
திகளுக்கும் ஸமவந்நிவேதநாதிகள் பாத்ராதிகளுக்கும் நியத
கைங்கர்யமாயிருப்பதுபற்றி பாத்ராதிகளில்லாத ஸமயத்தில்
ஸம்ஸாரவாத்ரங்களாலும் ஸ்வகீய த்ரவ்யங்களாலும் ஸமவதா
ராயநம்பண்ண ப்ரஸம்மிக்குமிறே. ஸஞ்ஜ்ரஸ்நாநம் கார்ய
மென்று சொன்னப்ரமேயவஸ்துவைக் காண்பிக்காமல் வடகலை
யார் ப்ரமேயத்திலிருப்பதாகச் சொல்வதனால் உபநாராயவஸி
த்திபில்லையிறே. ப்ராதஸ்நாநம் ஸம்ஸவித்தால் தென்கலையாரும்
பண்ணுவதுண்டு என்றதனால் ப்ராதஸ்நாநாயமாக யாத்ரை
செய்யவொண்ணாதென்றதாயிற்று. ப்ராதாவிப்ரகர்ஷஸ்த்ஸ்த
ருக்கு தக்ஷயாத்ரையன்றி ப்ராதஸ்நாந ஸம்ஸவப்ரஸக்தி
யில்லையிறே. ஆதலாலப்படிப்பட்ட பரமைகாந்திகள் ப்ர
மைக் கரையில் விசேஷத்ரவ்யதாந ப்ரதிக்ரஹாயமாக
வரச்சொல்லி ஸ்வபரமைகாந்திக ளழைத்தால் தக்ஷயம்போக
நேரிட்டு அப்போது ஸம்ஸவித்தப்ராதஸ்நாநத்தையும் பண்ணு
வது ஸர்வவிரோதமன்றென்று கயம்விச ஸஹ்யாமதித்ததாகி
றதிறே. ஸஹஸ்ரஹஸ்தணம் கவெய்யவாநம்முதலியவற்றாலாகிய
ஸ்ரீராமாநுஜக்கு ப்ராயஸ்சித்தமான பஞ்சகவ்யவிதி யிருக்க
தத்தாவ்யமான ஸமவத ஸ்ரீபாததீர்த்தத்தாலே அதைத்
தவிரப்பார்ப்பது உத்திஹாநிதோஷமிறே. எனெனில், ஸமவத
ஸ்ரீபாததீர்த்தத்தை ஸர்வபாவப்ராயஸ்சித்தமென்றும் ஸநந்ய
ப்ரயோஜநஸேவ்யமென்றும் சொல்லுகிறபடியால் அதைக்
கொண்டு ஸஹஸ்ரஹஸ்தண ப்ரதிநியத ப்ராயஸ்சித்தமான பஞ்ச
கவ்யப்ராசநத்தைத் தள்ளக்கூடாதென்பதுயுக்தஸ்ஸவஷ்டமிறே.

இல்லாவிட்டால் வ௦வமவ்யவியா நம் வ்யவஃ மென்றுவது
ஹா மவத வாடி தீயஃ வெஸவ நவியா நம் ஈவஃராவீ நமென்றுவ
து சொல்லஃ ஸா மிக்கும். அன்றியும் ஸ்ரீ ராஸாதிகாருங்களில் ஹா
மவதஸ்ரீவாடி தீயஃ வெஸவநம் பண்ணுவதினால் தஸவஃவஃஈ
ஹக்ஷு ஹக்ஷணாதிஸ௦ஹவவ்ய ஸ௦ம௦ ஈவாிஹாயஃ மாகுமிறே.
இன்னமும் எச்சில் தின்றவருக்கும் பிள்ளை பெற்றவளுக்கும்
வ்ராவஸ் தஷ் திதமாகாவென்றதனால் பிள்ளைபெறுவது எச்சில்தின்
மன்றுபால் நிஷிஜமாகக்கொள்ள வ்ர ஸ௦ மித்து நிஷிஸொழி
ஹக்ஷணாதிதொஷமில்லாத ஆவாயஃ வத்ராதிகளும் உஷ்
ஷ ஹக்ஷண வகடி வஷிதர்களாக நேருமிறே. வணஃஸ௦ஈாமே
தமக்கு விகீஷிஃதமாகையால் அதுக்கு ஸஹகாரியாமென்
றுழ்வார்களை பஜர்களென்று சொல்லுமிவர் அவர்கள் ஈலிநவ
டிஸாவதாரமென்று வெடிாஜாவாயஃருங் கொள்ளுகையா
லென்று சொல்லி இந்த உண்மையால் தாமுங் கொண்டதாக
ஸநொரயிப்பது வ்யஃமிறே. ஸ்ரீ ராஜ௦ திவ்யடி௦வத்ராராய
நாவமாகையாலே நித்யஸாரிகளான ஆழ்வாராதிகளுக்கு
நிவெதிதமானவை ஸ்ரீ ராஜவிநியொஜ்யமாகாதென்கிற ஸாஸ்த்ர
ஸ௦ஃதஸத்௦ வ்ரஜாயத்தை ஸதாசாரவிஜவமே வாராஷா
யஃமென்று கருதாதவர்கள் டிஷிக்கப் பாரார்களிறே. வடக
லையாரெழுதிவைத்ததில் அனேக மாறுபாடுகள் இருக்கின்றன
வென்றது முழுப் பொய்யிறே. என்னவெனில், நம்மாழ்வார்
வாடிகாவதாரமென்றெங்கே எழுதி இருக்கிறார்களோ
அதைச் சொல்லவில்லையிறே, 'ஸோரி௦ஷெஸநு ஷ௦ஹஜெ'
என்று நம்மாழ்வாரை ஸெவெநஸா௦ஸராகச் சொல்லியிருக்கி
றதேயன்றி இவர்சொன்னதுபோல் எங்குங் காண்கிலோம்.
வாசாவாயர்களான திவ்யடி௦வதிகள் ஸந்நிதியில் நம்மாழ்வா
ரை வாடிகாஜா நீயராக ஸ௦வ்ரஜாயத்தில் வ்யவஹாிப்பது
ண்டு. இவர்களுக்குள்ளும் அப்படிப்பட்ட வழக்கமுண்டென்
பது ஃயஷஸஷ௦. ஆதலால் இப்படிப் புறட்டியெழுதியது
ஈஸஃயாரஃமிறே. இவ்வாறே ஆண்டான் விஷயத்திலும் விஸ௦
ஹரா௦மொஜா௦'என்று பூமிப் பிராட்டியாரவதாரமாகச் சொல்

லியிருக்க அஸூயமென்று சொன்னதாகப் புரட்டிச் செ
வதும் அஸத்யஸம்மதமிறே. திருமங்கையாழ்வார் விஷயத்தி
அப்படியே இல்லாத பொய்களை கல்பித்துச் சொல்வது அஸம்ம
தம். அவரை நித்யஸூரியென்பவர் தூஷிக்கத்துணியார்களெ
ன்றும் ஸம்ஸாரியென்றவர் தாம் தூஷிக்கத் துணிவாரென்
றும் நிரூபகர்க்கு ஸ்பஷ்டமிறே. பெரிய திருமலை நம்பியின் ஹா
ரெயர்களென்று ஸர்வஸம்ப்ரதிபன்னரான எம்பெருமா
ம்பாரென்பவரை த்வேஷித்ரென்று வடகலையாரெழுதிவை
த்ததாக இவர் என்றைக்குக் கணக்கண்டாரோ அதை நிரூ
பகர் ஸ்வயம் விசு கண்டுகொள்ளக் கடவது. ஸ்ரீபாஷ்யகாரர்
திருநாட்டிற்கெழுந்தருளின நாழிகைவரையில் இந்த லோக
த்தில் ஸர்வாசார்ய நயிகாரமில்லையென்றதனால் தத்ஜ்ஞா
நப்ரவ்ருத்தியை ஸஹ்யாவமதித்தபடியால் அவர் திருநாட்டு
க்கெழுந்தருளுகிற க்ஷணத்திலவன் புலப்பட்டு இனிஸர்வ
தர்சநத்துக்குக் குறையில்லையென்று ஹர்ஷித்தது உசிதமெ
னக் "குறையில்லையிறே. பட்டர் விஷயத்தில் தூஷணம்ப
ண்ணினதாக வடகலையாரிடத்தில் சொல்வது அஸம்மதம்.
அவருக்கு பஹுவ்யாதியிருக்க அவருக்கு வேதாந்தா
ர்த்தநாசத்தாலேதான் வ்யாஸக்தியுண்டென்று நினைத்து இல்
லாத பேரிடப்பார்த்த இவரே தூஷகரென்று விரோதமாகுமி
றே. பிள்ளை லோகாசார்யர் விஷயத்திலும் மணவாளமாமு
னி விஷயத்திலும் வடகலையார் சொல்லியிருக்கும் உண்மையை
பொய்யென்பதற்காக இதுவரையிலும் இல்லாத பொய்களைக்
கல்பித்தோமென்று மகிழ்வது ஜாட்யப்ரயுக்தம். இல்லாதபொய்
யை இருப்பதாகச்சொல்லி அவை பொய்யென்றதனால் இருக்
கிற மெய்யையும் பொய்யென்று ஸாதிக்கக்கூடாதிறே. தூப்
புல்பிள்ளை யீடுபாடென்று பொய்க்கதைகட்டிய தங்கள் குற்
றத்தை எதிரிகளிடத்திலேற்றப்பார்த்தது லோகத்தில் ஊர்த்
ஸப்ருத்திகளான ஊஹான்கள் கிடையாவென்று நினைத்திருப்
பதினாலேதானிறே. லோகாசார்யர் கவிசொல்லவந்தாரென்று
பிறர் சொல்லவந்தது அநுசிதமென்று சொல்லியாவது அவ

...கு தேசிகனோடு ஸமமாக கவிசொல்ல வந்த ஸாஹஸிக
...யபூத்தை தூஷிக்கப் பார்ப்பது அபஹாஸ்யமிறே, இவர்
...சொல்லுங்கதைகள் ஶாஸ்த்ரவிருத்தமென்று இவர் தாமே நினை
த்துக்கொள்ளலாம். வடகலையார் சொல்வது அபாதிதமான
விவிதஶாஸனங்களாலே ஸ்தாபிக்கப் படுமென்பதை நி
...வகறறிவார். பாஷ்யகாரருளிச்செய்த ஸ்ரீஸூ என்கி
... வாக்யமளவாக ப்ரபந்தத்தில் அநுஸந்திக்கப்பட்டு வந்து
...கொண்டிருக்க அந்த வாக்யத்தை த்ராவிடாநுஸந்தானம்
பண்ணுவதும் பின்பு வாழித்திருநாம முதலியவை அநுஸந்தி
ப்பதும் அஸம்மதமாகாதிருக்க ஶாஸ்த்ரஸம்ப்ரதாயவாக்யங்களில்
வேதாந்தாசார்யவிஷய வாக்யாநுஸந்தானஸம்மதமென்றவ
ருடைய புத்திவைஶத்யத்தை ஸஹ்ருதயர் காணவேண்டுமிறே
தென்கலையார் தங்கள் ஸங்கேதத்துக்கு அநுகூலமாமென்று
நினைத்தபடிக்கு ஆழ்வாராதிகளின் சரித்ராதிகளில் நெடுநாளாய்
பொய்க்கற்பனைகள் கலந்தெழுதி வைத்துவருகிறார்களென்றும்
அவை ஸம்ப்ரதாயவிரோதாதிதூஷணங்களென்றும் வடகலை
யார்சொல்வார்களேயன்றி தென்கலையார் தங்கள் புஸ்தகங்களை
க்கொண்டு ப்ராசீனஸம்ப்ரதாயவிருத்தமான ஸ்வஸங்கேதாநு
தங்களை முதலிப்பார்களென்பதற்குத்தடை சொல்லவில்லை. ஆக
வே அந்தப்புஸ்தகங்களின் ப்ராமாண்யத்தை ஸாதிக்க வல்ல
வர் தென்கலையாரென்றுமையால் இவரெழுதியபொய்களுக்கொ
த்த பழைய புஸ்தகத்துள்ள பொய்களும் அஸம்மத க்ருத்ரிமமெ
யென்றும் வஞ்சிதங்களென்றும் சொல்லக்குறையில்லை.

---

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ॥